967
16·X·07

வெளியீடு: 3-8-07

Issued: 3-8-07

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, மார்ச் 28, 2007—தொகுதி 22—எண் 2**

**Wednesday the *28th* March 2007—Volume 22—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

Legislative Assembly Secretariat, Chennai-600 009

[Price Rs. 3.00

28–3–2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், PRICOL தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் — 251-254

2. **அறிக்கைகள் அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு — 254

3. **வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்**—தொடர்ச்சி — 254-370

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி — 254-261

திரு. அ. ராஜன் — 261-268

திரு. கரி. இராமசாமி — 268-273

*திரு. தி.க. ராஜா — 273-282

*திருமதி ரா. லீமா றோஸ் — 282-290

*திரு. கே. உலகநாதன் — 290-296

டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி — 296-305,307-308

திருமதி எஸ். தேன்மொழி — 308-315

*திரு. ஆ. இராஜேந்திரன் — 315-321,326-333

*திருமதி பெ. கமலாம்பாள் — 334-341

திரு. போளூர் ம. வரதன் — 341-348, 350-357,359

*திரு. க. இராஜேந்திரன் — 359-368,370

பக்கங்கள்

**4. அறிவிப்பு—**

பேரவை அலுவலில் மாற்றம் 333-334

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 371

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 14, விய—திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மார்ச் 28, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
*சொற்றெரிதல் வல்லார் அகத்து."*

மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், PRICOL தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள PRICOL தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள PRICOL தொழிற்சாலையில் 1,200 பெண்கள் உட்பட 6,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். சில கோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த 24 நாட்களாக அவர்கள் வேலைநிறுத்தம் செய்து

227560

[திரு. மு. கண்ணப்பன்] [2007 மார்ச் 28

வருகிறார்கள். சாலை மறியல், அதைத்தொட்டித் தொழிலாளர்கள் கைது, உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த வேலைநிறுத்தக் காரணமாக அந்தப் பகுதியில் ஒரு பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது. ஒரு அமைதியில்லாத சூழ்நிலை ஏற்படக்கூடிய நிலைமையும் உருவாகி வருகின்றது. எனவே, அரசு தலையிட்டு, PRICOL நிர்வாகத்தினருடன் பேசி, தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளையும், அவர்களுக்கான வேலைப் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் PRICOL நிறுவனத்திற்குச் சொந்தமான மூன்று தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் மோட்டார் வாகனங்களின் பாகங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகள் Plant-I, Plant-III, Plant-IV என்று அழைக்கப்படுகின்றன. மேற்கண்ட நிறுவனத்திற்கு, கோவை தவிர, அரியானா, உத்தரகாண்டம் ஆகிய மாநிலங்களிலும் மற்றும் பூனாவிலும் தொழிற்சாலைகள் உள்ளன.

Plant-I–ல் பணிபுரியும் 4 தொழிலாளர்களையும், Plant-III–ல் பணிபுரியும் 2 தொழிலாளர்களையும் நிர்வாகம் உத்தரகாண்டம் மாநிலத்திலுள்ள அவர்களது தொழிற்சாலைக்கு இட மாற்றம் செய்தது. இந்த இட மாற்றத்தை எதிர்த்து, Plant-III–ல் பணிபுரியும் தொழிலாளர்கள் 3–3–2007 முதலும், Plant-I–ல் பணிபுரியும் தொழிலாளர்கள் 5–3–2007 முதலும் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். கடந்த 9 ஆம் தேதி மாலை சுமார் 2,100 தொழிலாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்தவுடன், மாவட்ட நிர்வாகமும், தொழிலாளர் உதவி ஆணையரும், தொழிலாளர்கள் சாலை மறியல் செய்யும் இடத்திற்கே சென்று, சாலை மறியலை விலக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால், தொழிலாளர்கள் சாலை மறியலை விலக்கிக்கொள்ளவில்லை. அதனால், 10–3–2007 அன்று சாலை மறியலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர்.



2007 மார்ச் 28] [திரு. தா.மோ. அன்பரசன்]

இது சம்பந்தமாக, 10–3–2007, 12–3–2007, 15–3–2007, 20–3–2007, 26–3–2007 ஆகிய நாட்களில் கோவை, தொழிலாளர் இணை ஆணையர் இரு தரப்பினரையும் அழைத்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது, ஆறு தொழிலாளர்களின் இட மாற்ற உத்தரவை இரத்துச் செய்ய வேண்டுமென்று தொழிற்சங்கம் கேட்டது. ஆனால், அவ்வாறு இட மாற்ற உத்தரவை இரத்துச் செய்ய முடியாது என்று நிர்வாகத் தரப்பில் கூறப்பட்டது. 16–3–2007 அன்று 30 தொழிலாளர்களையும், 17–3–2007 அன்று 34 தொழிலாளர்களையும், ஆக மொத்தம் 64 தொழிலாளர்களை நிர்வாகம் நீக்கி, பகுதிக் கதவடைப்பு–lockout செய்தது.

26–3–2007 அன்று கோவை, தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும், அவர்களது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று தெரிவித்தனர். ஆகவே, அடுத்த பேச்சுவார்த்தை, வருகிற 1–4–2007 அன்று நடைபெறவுள்ளது. இந்தப் பிரச்சினை சம்பந்தமாகக் கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் தொழிலாளர் ஆணையர் ஆகியோருடன் அவ்வப்போது தொடர்புகொண்டு நிலைமையைக் கவனித்து வருகிறேன். இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

முற்பகல் 9–35

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 தொழிலாளர்களை உத்தரகாண்டம் மாநிலத்திற்கு மாற்றுவதற்கு முக்கியமான காரணம், ஏற்கெனவே 5 தொழிற்சங்கங்கள் அங்கே செயல்பட்டுக்கொண்டிருந்தன. தொழிலாளர்கள் ஒன்று கூடி, அவர்களுடைய கோரிக்கைகளுக்காக நியாயமான முறையில், கட்சி சார்பற்ற ஒரே சங்கமாக அமைத்து, ஒற்றுமையோடு அவர்கள் செயல்படுகிறார்கள்; அந்தச் சங்கத்தை நடத்துகிறார்கள். ஆகவே நியாயமான சில கோரிக்கைகளை முன்வைத்த காரணத்தினாலேதான் அந்த நிர்வாகத்தினர் பழிவாங்குகின்ற நோக்கத்தோடு இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. மு. கண்ணப்பன்] [2007 மார்ச் 28

எனவே, தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகின்ற போக்கைக் கைவிடுகின்ற வகையிலும், உடனடியாக அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கும் அரசு தலையிட்டு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு, தொழில் வளர்ச்சியும் தேவை, அதே நேரத்தில் தொழிலாளர் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறைகொண்ட அரசு. வேண்டுமானால் ஆணையர் மட்டத்திலே பேசி, இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க ஆவன செய்யும்.

## 2. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து எட்டு முதல் முப்பத்து இரண்டு வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசுவதற்கான ஒரு வசந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய, அன்னைத் தமிழ்நாட்டை ஆளப் பிறந்த இன்பத் தமிழ்நாட்டின் எதிர்கால முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி)



2007 மார்ச் 28] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

கோடையிலும் வற்றாத ஜீவகங்கை, (மேசையைத் தட்டும் ஒலி) ஆடிக் காற்றிலும் அசைந்து கொடுக்காத அரண்மனை, புழுதி மண்ணுக்கும் புனிதத்தைக் கொடுத்துப் புது யுகம் படைக்கும் புரட்சிக்கான பூபாளம், கால வெள்ளத்தால் கரைந்து போகாத காவிய மாளிகை, காலத்தை வென்ற கவிதாயினி, அகிலம் புகழும் என் அரசியல் கீதை, அரசியல் ரீதியாக ஆயிரம் எதிர்ப்புகள் வந்தாலும், அரசியலில் புயலாகவும், தமிழுக்குத் தென்றலாகவும், பகுத்தறிவுப் பாசறைக்குப் படைத் தலைவியாகவும், அரசியல்ரீதியாக ஆயிரம் எதிர்ப்புகள் வந்தாலும், சிறைச்சாலையிலே அடைத்துச் சித்திரவதைகள் செய்தாலும், நீதிமன்றங்களிலே நெடிய வழக்குகளைத் தொடுத்தாலும், தரணி வாழ்த் தமிழரெல்லாம் தலைநிமிர, திராவிடப் பாரம்பரியத்தின் திசை காட்டும் தீபச் சுடராய் விளங்கும், தலைநகரின் தாகம் தீர்த்த தங்கத் தாரகை, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவின் இதயத்திலே வாழ்ந்து, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோபுரம்போல் உயர்ந்து, 6 கோடி மக்களின் உள்ளங்களிலே அலை பாய்ந்துகொண்டிருக்கிற உத்தமத் தலைவன், உன்னதத் தலைவன், மறைந்தும் மறையாமல் மக்கள் உள்ளங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்கள் தலைவன், மாணிக்கத் தலைவன், மாசற்ற தலைவனின் மனசாட்சியாகத் தமிழகத்திலே வலம் வந்துகொண்டிருக்கிற எங்களது சிங்க நிகர்த் தலைவி—மாசற்ற தலைவனின் மனசாட்சியாகத் தமிழகத்திலே வலம் வந்துகொண்டிருக்கிற எங்களது சிங்க நிகர்த் தலைவி, மகுடத்தோடு பிறந்த மாணிக்கத் தலைவி, மனிதப் புனிதவதி, எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்களுக்கு, இந்த மாமன்றத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) உரையாற்றுவதற்கான வாய்ப்பினைத் தந்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுத்து, கடமையாற்றுவதற்கான ஒரு வாய்ப்பினை அற்புதமாக வழங்கிய கலசப்பாக்கம் தொகுதி மக்களின் கனவுகளுக்குச் சிறகுகள் தயாரிக்க நான் எடுக்கின்ற முயற்சிகளுக்கும், வைக்கின்ற கோரிக்கைகளுக்கும் இந்த அரசாங்கம் செவிசாய்க்கும் என்று நினைக்கின்றேன்.

மக்களாட்சித் தத்துவத்திலே, ஆளுங்கட்சி அதிகாரத்திலே இருக்கிற கட்சி, எதிர்க்கட்சியின் தொகுதி என்று என்போன்றவர்களுடைய தொகுதியைக் கண்டுகொள்ளாமல் விடுவீர்களேயானால், அது ஜனநாயகத்திற்கு விடப்படுகின்ற சவால். மக்கள் மன்றத்திலே செய்யப்படுகின்ற மாபெரும் துரோகம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டின் வரலாற்றில் அதிக எண்ணிக்கை

[திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2007 மார்ச் 28

கொண்ட எதிர்க்கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சி ஒரு Minority Government. ஜனநாயகத்தின் சதை வடிவம் தந்த, சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டனில் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியை Shadow Government என்று சொல்வார்கள்; நிழல் அரசாங்கம் என்று சொல்வார்கள். ஆகவே, ஒரு நிழல் அமைச்சரவை, அதிலும் வலிமையான நிழல் அமைச்சரவை எங்கள் பக்கம். எங்கள் தரப்பு தொகுதி மேம்பாட்டுப் பணிகளிலுள்ள நியாயத்தை உணர்ந்து, அதை விரைந்து நிறைவேற்றித் தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதி மக்களுடைய மேம்பாடுகளுக்காக, கலசப்பாக்கம் தொகுதியிலே கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி அமைக்க வேண்டும். நவீன வசதிகளுடன்கூடிய மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பகுதிநேர கால்நடை மருத்துவமனைகள், துணை சுகாதார நிலையங்கள், ஜமுனாமருதூர் சுற்றுலா மையம் மற்றும் மலைவாழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான ஜாதிச் சான்றுகள் ஆகியவற்றை உடனடியாக வழங்க வேண்டும். தீயணைப்பு நிலையங்கள், பேருந்து வசதிகள், சாலை வசதிகள், நகரப் பேருந்து வசதிகள், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், தரைப் பாலங்கள், மேம்பாலங்கள்போன்றவற்றை அமைத்துத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

முற்பகல் 9–40

தென் கயிலாயம் என்று போற்றப்படுகின்ற பர்வத மலையை சுற்றுலாத் துறையின்மூலமாக மேம்பாடு செய்ய வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். கலசப்பாக்கம் பகுதியைத் தனித் தாலுகாவாக மாற்றித் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்திலே செயல்பட்டுக்கொண்டிருந்த அருணாச்சலா சர்க்கரை ஆலை தற்போது மூடப்பட்டிருக்கிறது. இந்த ஆலையை நம்பி 252 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஏறக்குறைய 4 இலட்சம் டன் கரும்பினை இன்றைக்குப் பயிர் செய்திருக்கிறார்கள். அந்தக் கரும்பை வெட்டி எடுப்பதற்குத் தேவையான சூழ்நிலை



2007 மார்ச் 28] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

இன்றைக்கு அங்கே இல்லை. எனவே, இந்தப் பிரச்சினையில் இந்த அரசு உடனடியாகத் தலையிட்டு, 252 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே, அவர்கள் பயிர் செய்த, 15 மாத காலமாகியிருக்கிற கரும்பினை உடனடியாக வெட்டி எடுத்து அருகிலே இருக்கிற sugar mill-களுக்கு அனுப்புவதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டும். ஏற்கெனவே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தங்களுடைய கரும்புகளை வெட்டி எடுக்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு போராட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அப்படிப் போராட்டம் நடத்திக்கொண்டு வருகிறவர்கள்மீது காவல் துறையைவிட்டு இந்த அரசு அடக்குமுறையின்மூலமாக அவர்களை அடக்க நினைக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிற பல்வேறு பிரச்சினைகளை இந்த அரசு கவனத்துடன் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொண்டு, அவற்றைச் செய்து தர வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை இங்கே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் விவசாயத்திற்காக oil engine-களைப் பயன்படுத்தும்போது அவர்களுக்கு மானிய விலையில் டீசல் வழங்கப்பட வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி மக்களின் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்ற என்னுடைய எதிர்பார்ப்பில், ஏன் என் தொகுதி மக்களின் எதிர்பார்ப்பில் ஏமாற்றம் நிகழ்ந்துவிடாத வகையில் இந்த அரசு செயல்பட வேண்டும் என்பதை இங்கே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில், கடந்து வந்த பாதையை சிங்கம் திரும்பிப் பார்த்துவிட்டு நடப்பதைப்போல, கடந்த காலங்களை நினைவுபடுத்திக்கொண்டு அதற்கு சாட்சியாகத் திருவள்ளுவரையும் துணைக்கு அழைத்து, 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்துள்ள வேளையில்

'கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை'

என்னும் வள்ளுவனின் வாய்மொழிக்கு இலக்கணமாக, எதிரியின் பாய்ந்து வருகின்ற ஈட்டி முனைக்குக்கூட மார்பு காட்டுகின்ற தீரர் கூட்டம்தான் எங்கள் அம்மாவினுடைய சிங்க நிகர்க் கூட்டம் என்று,

[திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2007 மார்ச் 28

தகுதி வாய்ந்த தலைமையினை எங்களுக்கு ஏற்று சிறப்பான முறையிலே 2001 முதல் 2006 வரை தமிழகத்திலே ஒரு பொற்கால ஆட்சியை நடத்தினாரே எங்களது சிங்க நிகர்த் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தக் கடந்த கால ஆட்சியையும் நாங்கள் திரும்பிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

2001 முதல் 2006 வரை நடைபெற்ற அம்மாவின் நல்லதோர் பொற்கால ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட, காலங்களால் அழிக்க முடியாத வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்களையெல்லாம் சிங்கத்தின் துணிச்சலோடு அறிமுகப்படுத்தி, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி நாட்டு மக்களுக்குப் பொற்கால ஆட்சியை நடத்தி சிங்க நடை போட்டு வந்தார்களே எங்கள் அம்மா, அந்தப் பாதையை நாங்கள் திரும்பிப் பார்க்கிறோம். புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செய்யப்பட்ட சாதனைகளாக ஒரு சிலவற்றை மட்டும் இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

யாராலும் பிடிக்க முடியாது என்று மிகைப்படுத்திக் கூறப்பட்ட சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனைப் பிடித்து, வீரப்பனுக்கும், வீரப்பனின் கூட்டாளிகளுக்கும் மரண அடி கொடுத்து, வீரப்பனுடைய கூட்டாளிகளுடைய முகமூடிகளைக் கிழித்தெறிந்தவர் எங்கள் அம்மா என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிறைவேற்றவே முடியாது என்று கைவிடப்பட்ட, காலங்களால், காயங்களால் வரலாற்றுச் சின்னங்களாக, காட்சிப் பொருட்களாக, கனவுத் திட்டமாக முன்னோர்களால் சொல்லப்பட்டு வந்த, முன்னோர்களால் செய்ய முடியாது என்று கைவிடப்பட்ட வீராணம் திட்டத்தை 13 மாத கால அவகாசத்தில் புதிய வீராணம் திட்டம் என்ற திட்டமாக உருவாக்கி, நிறைவேற்றி வரலாறு படைத்தவர் எங்களின் அம்மா என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைத்ததனுடைய காரணமாக, சென்னை நகர மக்களுடைய நன்றிக் கடனாக இந்த மாமன்றத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே அலங்கரித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.



2007 மார்ச் 28] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

(முற்பகல் 9-45

சென்னை மாநகரினுடைய மரியாதையை உலக விளையாட்டு அரங்குகளில் அரங்கேற்றும் வகையிலே, சர்வதேசத் தரத்தோடு நேரு விளையாட்டு அரங்கத்தை அமைத்துக் கொடுத்தவர் எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆசியாக் கண்டத்திலேயே சென்னை மாநகரில் அதிநவீன வசதிகளுடன்கூடிய பிரம்மாண்டமான அரசு பொது மருத்துவமனையை நிர்மாணித்தவர் எங்களின் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நாடே போற்றும், நல்லோர்கள் வாழ்த்தும் இலவச சைக்கிள் திட்டம், இலவசப் பாட நூல் வழங்கும் திட்டம், ஆலயம், தர்கா, கிறிஸ்தவ தேவாலயங்களில் அற்புதமான அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் தாயுள்ளம் கொண்ட எங்கள் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) கருவிலேயிருந்து கல்லறை வரை மனித குல வாழ்க்கையினுடைய மேம்பாட்டிற்காகக் கொண்டு வரப்பட்ட உன்னதமான திட்டம் உழவர் பாதுகாப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்னை தெரசா அவர்களே பாராட்டிய தொட்டில் குழந்தைத் திட்டம், உலகமே வியக்கும் மழை நீர் சேகரிப்புத் திட்டம், மகளிருடைய வாழ்வு மேம்பட மகளிர் சுய உதவிக் குழுக்கள், திருவண்ணாமலை, அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்திற்குத் தங்கத் தேர், காவல் துறையை நவீனப்படுத்தியது, திருட்டு வி.சி.டி. பிரச்சினையைத் தீர்த்து வைத்தது, மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்துவதன்மூலம் மணல் கொள்ளை தடுக்கப்பட்டு, அரசாங்கத்தினுடைய வருமான உயர்வுக்கு வழிவகை செய்தது, மதுபானக் கடைகளை அரசே ஏற்று நடத்துவதன்மூலம் அரசுக்கு வருவாயும், படித்த இளைஞர்கள் சுமார் 36,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கித் தரப்பட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கந்துவட்டி ஒழிக்கப்பட்டது. லாட்டரி டிக்கெட் அகற்றப்பட்டது. ரவுடியிஸம் ஒழிக்கப்பட்டது. தமிழகத்திலே சட்டம்ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. தமிழகத்திலே அமைதிப் பூங்காவான ஒரு நிலைமையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கிக் காட்டினார்கள் என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி அலை வந்தபொழுது, சுனாமி அலை வந்து திரும்புவதற்குள், பாதிக்கப்பட்ட இடங்களுக்குப் பறந்து சென்று, மீட்புப் பணி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடுமையான வறட்சி, விளைச்சல் இல்லை, ஆனால் விலைவாசியிலே ஏற்றம் இல்லை. கள்ள மார்க்கெட் வியாபாரிகளை அடக்கி வைத்தவர் ஜான்சி ராணி எங்கள் அம்மா என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசினுடைய மேம்போக்கான திட்டங்களையும், மலிவான வாக்குறுதிகளையும் அறிவித்து, தமிழக மக்களைத் திட்டமிட்டு ஏமாற்றுகின்ற கலைதான் இந்த நிதிநிலை அறிக்கை உரையிலே இருக்கிறது. சமுதாய மாறுதல்களுக்காகத் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், தாகம்கொண்டு அலைபவர்களுககும், வறுமையில் வாடி வதங்கிப் போய் வாழ்பவர்களின் விடியலுக்கான திட்டங்கள் ஏதுமில்லை இந்த உரையிலே. இந்த அரசினுடைய நிதிநிலை அறிக்கை, கோலிக் குண்டுகளை விதைத்துக் கோதுமை அறுக்கிறேன் வெந்நீரை ஊற்றி வெள்ளரிக்காய் பறிக்கப் போகிறேன் என்பதைப்போல இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் ஜிகினா தோரணங்களைக் கட்டிவிட்டு, மின்னல் என்று சாதிக்கிற நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. இந்த அரசினுடைய பட்ஜெட், தமிழ், தமிழ்நாடு, தமிழ்நாட்டு மக்களுடைய நலனைக் காக்கத் தவறிவிட்டது என்று நான் இங்கே குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டையே மீண்டும் வாசித்ததுபோல, அரைத்த மாவையே மீண்டும் நிதி அமைச்சர் அவர்கள் அரைத்துள்ளார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு, நோயும் தீர்ந்துவிடக் கூடாது, நோயாளியும் இறந்துவிடக் கூடாது என்று நினைத்துச் செயல்படுகின்ற மருத்துவரைப்போலச் செயல்படுகிறது. அன்றாடங்காய்ச்சிகளின் உதிரத்தில் அரண்மனைவாசிகளுக்கு வாழ்வளிக்கத் திட்டம் தீட்டியுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களெல்லாம் சுவர் இல்லாமலேயே தீட்டப்பட்ட ஓவியம், நதியில்லாமலே ஓடுகின்ற ஓடம், வண்ணங்களே இல்லாமல் உருவான வானவில், மலர்ந்தும் மணம் வீசாத மல்லிகை, பனியில்லாத மார்கழி, படையில்லாத மன்னவன், உயிரில்லாத உடல், ஆக, ஓட்டுமொத்தமாகச் சொல்ல





வேண்டுமென்றால், இந்த மைனாரிட்டி அரசு, சாக்கடையோடு சமாதானம் செய்துகொண்டு, கொசுக்களோடு போராட்டம் நடத்துவதைப்போல இருக்கிறது. (குறுக்கீடுகள்) தேர்தல் அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, காற்றிலே பறக்கவிடப்பட்ட, நிறைவேற்ற முடியாத பல்வேறு திட்டங்களையெல்லாம் இன்றைக்கு இந்த அரசு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no, no. நான் கணக்குப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். உரையை முடியுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு நிதியொதுக்கீடு இல்லை. நீண்ட தூரப் பயணக் கட்டணங்கள், இரயில் கட்டணத்தைவிட அதிகமாக இருப்பதைக் குறைத்து, இரயில் கட்டண அளவிற்கு பஸ் கட்டணத்தைச் சீராக்குவோம் என்று தேர்தல் அறிக்கையிலே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன். (குறுக்கீடுகள்) உரையை முடியுங்கள். 15 நிமிடங்கள்தான். அதற்குமேலே கிடையாது. 15 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது உங்கள் உறுப்பினருக்கு. (குறுக்கீடுகள்) முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ராஜன், பேசுங்கள்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு வயது முதல் தமிழுக்காகத் தமிழ்க் கொடி ஏந்தி வீர முழக்கமிட்ட தலைவர், தொடர்ந்து 70 ஆண்டு காலமாக உலகத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் உரிமைக்காகப் போராடி வரும் தன்னிகரில்லாத தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) கண்ட களம் அத்தனையிலும் வெற்றி கண்டு, தொடர்ந்து 50 ஆண்டு காலம் சட்டப் பேரவையில் தமிழகத்திற்காக, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பணி மேற்கொண்டிருக்கும் உன்னதத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மைனாரிட்டி அரசு என்றவர்களுக்கு ஆத்திரப்படாமல், நிதானமாக 'ஆம், கழக அரசு மைனாரிட்டி அரசுதான், மைனாரிட்டி மக்களுக்காகப் பாடுபடும் அரசு' என்று உணர்த்திய ஈடு இணையற்ற

தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நிதிநிலை அறிக்கையில் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கைமீது உரையாற்றிய எனக்கு, (குறுக்கீடுகள்) இந்தத் தொடரில் நிதிநிலை அறிக்கைமீது உரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் தரப்பு மக்களாலும் பாராட்டப்பட்டுள்ள தலைசிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையை, நிதி அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இரண்டாவது முறையாகச் சமர்ப்பித்துள்ள மாண்புமிகு இனமானப் பேராசிரியர். . .

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, கோஷமிட்டுக் கொண்டேயிருந்தனர்.)*

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) இல்லை, இல்லை, சொல்கிறேன் (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை எப்படி நடக்க வேண்டும் என்பது பற்றியும், அலுவல் ஆய்வுக் குழுவிலே எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடித்தான் முடிவெடுத்தோம். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா திரு. செங்கோட்டையன் அவர்களும், நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்களும் அந்த அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது, அ.தி.மு.க. சார்பிலே முதலிலே பேசுகின்றவர்களுக்கு 15 நிமிடம் தாருங்கள் என்று அவர்கள்தான் நேரத்தையே நிர்ணயித்தார்கள். அதை நாங்கள்கூட நிர்ணயிக்கவில்லை. இப்படி நேரத்தை அவர்களே நிர்ணயித்துவிட்டு, இன்று நீங்கள் 15 நிமிடம் கொடுத்ததற்குப் பிறகு, மற்றொருவரை நீங்கள் கூப்பிடுகின்ற நேரத்திலே, (கூச்சல்–குழப்பம்) அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சேர்ந்து கூச்சல் போடுவதென்பது நாகரிகமானதல்ல. அன்று அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே கலந்துகொண்ட தலைவர்கள், அவர்கள் கட்சி உறுப்பினர்களுக்குத் தயவுசெய்து அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சர் அவர்கள் சொன்னதைக் கேட்டீர்கள் அல்லவா? உட்காருங்கள்.

**திரு. அ. ராஜன்:** அனைத்துத் தரப்பு மக்களாலும் பாராட்டப்பட்டுள்ள தலைசிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையை, தான் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இரண்டாவது முறையாகச் சமர்ப்பித்துள்ள மாண்புமிகு இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத் தமிழகத்தின் வசந்தம், வணக்கத்திற்குரிய மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகப் பொருளாளர் மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் பெரும்பான்மையான வாக்குறுதிகளைக் கடந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் நிறைவேற்றிய தலைவர் கலைஞர் அவர்களின் அரசு, தற்போதுள்ள நிதிநிலை அறிக்கையில் ஏராளமான மக்கள் நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இதில் எல்லோருக்கும் ஆச்சரியம் அளிப்பது என்னவென்றால், இவ்வளவு நலத் திட்டங்களையும் அறிவித்துள்ள நிதிநிலை அறிக்கையின்மூலம் ஒரு காசுகூடத் தமிழக மக்கள்மீது புதிய வரியாகச் சுமத்தப்படவில்லை என்பதை என்பதை, உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்றவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றைக்கு முன்தினம் இந்த மாமன்றத்தில் உரையாற்றிய ஒருவர், ஏழைகளின் நிலைமை இந்த அரசுக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டார். நான் அவருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அரிசி கிலோ இரண்டு ரூபாய், சத்துணவில் வாரம் இரண்டு முட்டைகள், தற்பொழுது மேலும் ஒன்று சேர்த்து மூன்று முட்டைகள், சுமார் 7,000 கோடி ரூபாய் அளவிலான கூட்டுறவுக் கடன்கள் இரத்து, நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பத்திற்கு இலவச நிலம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச கேஸ் இணைப்பு மற்றும் அடுப்புகள்,

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின்மூலம் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூபாய் 15,000, கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் வீதம் ஆறு மாதத்திற்கு ரூபாய் 6,000, கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம், முதியோர், விதவை, ஊனமுற்றோருக்கு உதவித் தொகை, இவையெல்லாம் இந்த அரசுமூலம் தமிழக மக்களுக்கு வழங்கப்படுகிறதென்றால், ஏழைகளின் ஒட்டுமொத்த நிலைமை தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தெரிந்த காரணத்தால்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2007–2008 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்களுக்காக ரூபாய் 1,628 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதையும், பயிர்க் கடன்கள் வழங்க ரூபாய் 1,360 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதையும், விவசாயக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான வட்டி 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதையும் நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–55

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் காத்திருப்போர் பட்டியலில் அதிகம் பேர் காத்திருப்பதாகவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் நேற்றைக்கு முன்தினம் பேசும்போது இங்கே குறிப்பிட்டார். நான் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்; தலைவர் கலைஞர் அவர்களுடைய கடந்த 10 மாத ஆட்சியில் ஆசிரியர் பணியிடங்கள், மருத்துவப் பணியிடங்கள், போக்குவரத்துத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைப் பணியிடங்கள், வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் ஊழலுக்கு இடம் கொடுக்காமல் நிரப்பப்பட்டுள்ளன. ஆனால், அதே நேரத்தில் உங்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியில் நிரப்பப்பட்ட பணியிடங்களின் விலை ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு என்பதை உங்களுடைய மனசாட்சிக்கே நான் விட்டுவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் ஊறு விளைவிக்கும் வகையில் நதி நீர்ப் பிரச்சினைகள் உருவாவதைத் தடுத்திட, முதலில் தீபகற்ப நதிகளையாவது இணைத்திட வேண்டுமென்ற கோரிக்கையை அவசர, அவசியம் கருதி உடனடியாக நிறைவேற்றும் பணி மத்திய அரசால் தொடங்கப்படத் தமிழக அரசு தொடர்ந்து முயற்சி



மேற்கொள்ளும் எனக் குறிப்பிட்டுள்ளதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

காவிரிப் பிரச்சினை, முல்லை பெரியாறு அணைப் பிரச்சினை, பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பிரச்சினை போன்ற தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளையும் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பல்வேறு சிற்றாறுகளையும், வாய்க்கால்களையும் தூர் வாருதல் மற்றும் பாசனக் கட்டமைப்புகளைப் பழுதுபார்த்தல்போன்ற பணிகளுக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதைப் பாராட்டுகிறேன். கடந்த ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு, பாழாகிக்கொண்டிருக்கும் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குளங்களையும், வாய்க்கால்களையும் சீரமைத்திட நிதி ஒதுக்கீடு செய்து, நிறைவேற்றித் தந்திட மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் அன்பாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நேற்றைக்கு முன்தினம் இந்த மாமன்றத்தில் பேசிய பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், தற்போது ரௌடிக் கும்பல் தமிழகத்தில் அதிகரித்துவிட்டதாகவும், பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்; உங்களுடைய கடந்த ஆட்சியில் என்னுடைய நாகர்கோவில் தொகுதியில் நீதிமன்ற வளாகத்திற்குள் பட்டப்பகலில் ஒரு வாலிபர் வெட்டிக் கொல்லப்பட்டார். நாகர்கோவிலில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு வெடிகுண்டு வீசப்பட்டது. நாகர்கோவிலில் இருக்கின்ற சிறைச்சாலையில் இருந்த கைதி கழுத்து அறுத்துக் கொலை செய்யப்பட்டான். இவை எல்லாம் உங்களுடைய கடந்த ஆட்சியில் நடைபெற்ற ரௌடி சாம்ராஜ்யத்திற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத் தலைமை அறிவித்ததற்கிணங்க விவசாயப் போராட்டத்தில் சாதாரண மாட்டு வண்டி ஓட்டிச் சென்ற என்மீதும், கழகத்

தொண்டர்கள்மீதும், இரயில் தண்டவாளத்தை உடைக்கச் சென்றதாகப் பொய் வழக்குப் புனையப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தில் விசாரணையின்போது, நாங்கள் குற்றமற்றவர்கள் என்றும், அது உங்களுடைய அரசால் போடப்பட்ட பொய் வழக்கு என்றும் நிரூபிக்கப்பட்டதை நான் இந்த நேரத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 10 மாத காலக் கழக ஆட்சியில், வெளிச்சந்தையில் அரிசி விலை உயராமல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதைப் பாராட்டும் அதே நேரத்தில் பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தி, இப்பொருட்களை அரசே கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள்மூலமாகப் பொது மக்களுக்கு வழங்கிட முடிவு செய்யப்பட்டுளளதையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் நீதிமன்ற வழக்கு மொழியாகத் தமிழ் இடம்பெறுவதற்கான வாய்ப்பு உருவாகத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் ஒதுக்கப்பட்டிருக்கும் அதே நேரத்தில், நாகர்கோவிலில் இருக்கும் மிகப் பழைமையான நீதிமன்றக் கட்டடங்களை மாற்றிப் புதிய கட்டடங்கள் கட்டித் தந்திட நான் அன்பாய் வேண்டுகிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சியில் ஓடிய பேருந்துகள் எல்லாம் மிகவும் பழுதடைந்து, இன்னும் சொல்லப் போனால், பயணிகள் பயணம் செய்யும்போது பேருந்தின் உட்புறத்திலே குடை பிடித்துப் பயணம் செய்ய வேண்டிய நிலை இருந்ததை மாற்றி, இன்றைக்குப் பல்வேறு புதிய பேருந்துகள் விடப்பட்டுள்ளன. நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு நேரு அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் போக்குவரத்துத் துறை சம்பந்தமாக எந்தப் பிரச்சினைக்காக அவர்களிடம் சென்றாலும், முகமலர்ச்சியோடு அதை ஏற்றுக்கொள்வதில் அவருக்கு நிகர் அவரே. நான் இநத நேரத்தில் மனப்பூர்வமாக அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்வது, நாகர்கோவில் பகுதியில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பிற பணிகளைக் கருத்தில்கொண்டு, ஏற்கெனவே அவர்களிடம் நான் தெரிவித்தபடி, செட்டிக்குளம் பகுதியில் உள்ள அரசுப்



போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் ஒரு புதிய பணிமனை அமைத்துத் தந்திட அன்பாய் வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் பொன்முடி அவர்களும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு இணங்க கல்வித் துறையில் ஆற்றி வரும் அரும்பணிகளை யாரும் மறுக்க முடியாது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லப் பயன்படுத்தும் தனியார் ஒப்பந்த ஊர்திகளுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைத்திருப்பதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஏற்கெனவே என்னுடைய தொகுதியில் செய்ய வேண்டிய பணியாக நான் குறிப்பிட்டுள்ள பள்ளிக் கட்டடங்களையும் அவற்றின் சுற்றுச் சுவர்களையும் கட்டித் தந்திட அன்பாய் வேண்டுகிறேன்.

முற்பகல் 10–00

தொழிற்கல்வி படிப்பதற்கான பொது நுழைவுத் தேர்வை அகற்றி, கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகளின் கனவை நனவாக்கிய தலைவர் கலைஞர் அவர்களை நன்றிப் பெருக்கோடு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் கழகத்தின் மற்றொரு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை; எதையெடுத்தாலும் குறை சொல்பவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுக் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப் படிப்புப் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் கல்விக் கட்டணம் இரத்துச் செய்யப்பட்டு, உயர் கல்வி இலவசமாக வழங்கப்படுவதன்மூலம், ஏழை மாணவ, மாணவிகளின் இதயங்களில் என்றென்றும் தலைவர் கலைஞர் அவர்கள் இடம்பெற்றுள்ளார் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்வது, எங்களுடைய மாவட்டம் படித்தவர்கள் நிறைந்த மாவட்டம் என்று எல்லோரும் பெருமையாகக் கூறுகிறார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி. (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அ. ராஜன்:** கடைசியாக ஒரே ஒரு கருத்து, அரசு ஊழியர்களுக்குப் பல்வேறு சலுகைகளை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தமைக்குத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் ESMA, TESMA . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கரி. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற வரலாற்றில் 50 ஆண்டுகள் சிறப்பாகப் பணிபுரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்தக் கூட்டத் தொடரில் பொன் விழாக் கொண்டாடுகின்ற நாம், அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நல்ல முறையிலே செயல்பட அவர்களை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பல சாதனைகளைச் செய்திருக்கிறது. நமது பேராசிரியர் அவர்கள் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கை பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், அது 3 சதவிகிதத்திற்கு உள்ளாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையால் பல சலுகைகளை இன்றைக்குத் தமிழக மக்கள் அடைய இருக்கிறார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, எங்களது மாவட்டங்களுக்குக் குடிதண்ணீர் வேண்டும் என்று சொன்னபொழுது, குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் குடிதண்ணீரே கிடைக்காத நிலையிலே, ஒரு பெரிய திட்டத்திற்கு 30–1–2007–ல் தமிழக முதல்வர் அவர்கள் அங்கே வருகை தந்து 616 கோடி ரூபாய் அளவிற்குப் பணத்தை ஒதுக்கி, அந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்திருக்கிறார்கள்.

அதற்கு அடுத்தபடியாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுறவுத் துறைக்குத் தேர்தல் நடக்குமா என்ற எண்ணத்தோடு இருந்த நமக்கு, கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதாக இப்பொழுது சொல்லி இருக்கிறார்கள்.



அதேபோல, இன்றைக்கு விவசாயிகளுக்கு சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, 7 சதவிகிதமாக இருந்த கூட்டுறவுக் கடனுக்கான வட்டியை இன்றைக்கு 5 சதவிகிதமாக மாற்றி இருக்கிறார்கள்.

இதற்கெல்லாம்மேலாக, எங்களது மாவட்டத்திற்கு கிராபைட் தொழிற்சாலை கொண்டு வருவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். கிராபைட் தொழிற்சாலை என்பது பின்தங்கிய மாவட்டமான சிவகங்கைக்கு மிக, மிக அவசியமான ஒன்று. கிராபைட் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில், அங்கே 242 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அதிலே 30 இலட்சம் டன் கிராபைட் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தத் தொழிலை விரிவுபடுத்த வேண்டும். இப்போது நமது அரசு அதற்கான முதற்கட்ட வேலைகளை ஆரம்பித்திருப்பதாக நான் அறிகிறேன். இந்த கிராபைட்டை சுத்திகரிப்பதுடன் நிறுத்திவிடாமல், கிராபைட் மூலம் பிற தொழில்களாக ஏறத்தாழ 8 தொழில்களைச் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொழில்களையும் சிவகங்கை மாவட்டத்திலே ஏற்படுத்தித் தர அரசு முன்வர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

நமது நாடு சுதந்திரம் அடைவதற்காகப் பல தியாகங்களைச் செய்தவர்கள் எங்கள் பகுதியிலே நிறைய இருக்கிறார்கள். தேவகோட்டை, திருவாடனை, திருவேகம்பட்டு போன்ற எங்கள் பகுதிகளிலே 60 பேருக்குமேல் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள், 414 பேர் சிறை சென்றார்கள். இதுபோன்று பல துன்பங்களை அனுபவித்த பகுதி அது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தியாகிகளுக்கு இந்த அரசு உதவியாகச் செயல்பட வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தற்போது அவர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.3,000/– வழங்கப்படுகிறது. அதை உயர்த்தி, ரூ.5,000/– ஆக வழங்க வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு வழங்கக்கூடிய ஓய்வூதியத்தைப் பெறுபவர்களுக்குத் தமிழக அரசு 500 ரூபாய் உதவி வழங்குகிறது; அதை 2,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தியாகங்கள் பல செய்த எங்கள் பகுதியைச் சார்ந்தவர்களுக்கு நினைவு மண்டபம் ஒன்று திருவேகம்பட்டு

என்ற ஊரிலே—அங்கேதான் அதிகமான பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்; அங்கே அமைத்துத் தரும்படி உங்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள் பல வழிகளிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்நிய நாட்டினரால் ஏறத்தாழ 300–க்கும் மேற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள், பல பேர் காயம்பட்டிருக்கிறார்கள், பல கோடி ரூபாயை மீனவர்கள் இழந்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் விடிவு ஏற்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதற்கு முதற்படியாக நமது அரசு இப்போது சிறிய நடவடிக்கையை எடுத்திருக்கிறது. அந்த நடவடிக்கை விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் பயமின்றிக் கடலுக்குச் சென்று தங்களது தொழிலைச் செய்வதற்கு இந்த அரசு உதவியாக இருக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால், கடலிலே ஸ்ரீலங்காவிற்கும், நமக்கும் இருக்கக்கூடிய எல்லை எது என்பதுதான். அந்த எல்லையை மீனவர்கள் தெரிந்துகொள்வதற்கு உதவியாக, மிதக்கக்கூடிய மிதவைகளை அமைத்து நமது எல்லை எது என்பதை மீனவர்கள் எளிதிலே தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு ஓர் அமைப்பை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் படுகின்ற துன்பம் மிக மோசமான நிலையை அடைந்திருக்கிறது. அவர்கள் தங்களது தொழிலைச் சரிவரச் செய்ய முடியவில்லை. அவர்களுக்கு இப்போது நமது அரசு உதவிகளைச் செய்தாலும், இன்னும் பல உதவிகளைச் செய்வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலே இந்த ஆண்டு மழை போதாததால் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நில வரியை இரத்துச் செய்ய வேண்டும். அங்கே அவர்களுக்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்து தர வேண்டும். குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திலே நில வரி வசூல் மிக விறுவிறுப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அதை உடனடியாக நிறுத்தி, விவசாயிகளுக்கு உதவி செய்ய இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10–10

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தமட்டில், நமது அமைச்சரவர்கள் எங்கள் பகுதிகளிலெல்லாம் சுற்றுப் பயணம் செய்து, மருத்துவமனைகளை ஆய்வு செய்தார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், நமது மத்திய நிதி அமைச்சர் என எல்லோரும் வந்து ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்து, அந்த மருத்துவமனைகளுக்கு என்னென்ன தேவை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டார்கள். அதற்கான உத்தாவுகளையும் பிறப்பித்தார்கள். ஆனால், அவற்றைச் செயல்படுத்துவதிலே மருத்துவத் துறை அதிகாரிகள் இன்னும் தாமதப்படுத்துகின்றார்கள். அமைச்சர்கள் சொன்ன உத்தரவுகளின்படி, குறிப்பாக, தேவகோட்டை மருத்துவமனைக்கு எந்தவித வசதியும் இதுவரையிலே செய்து தரப்படவில்லை. அதேபோல, மருத்துவமனைகளில் பயன்படுத்தக்கூடிய X-ray film–களை நமது தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய Hindustan Photo Films போன்ற கம்பெனியிடமிருந்து நமது மக்கள் நல்வாழ்வுத் துறை கொள்முதல் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் போன்றவை அங்கே கொள்முதல் செய்கின்றன. ஆனால், நமது அரசு அதைச் செய்வதில்லை. இன்றைக்கு மருத்துவமனைகளிலே X-ray எடுப்பதில் மிகச் சிரமமான ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருவாடனையிலே இருக்கக்கூடிய மருத்துவமனை மிக, மிக சுகாதாரக் கேடான நிலையிலே இருக்கிறது. அந்த மருத்துவமனைக்குத் தேவையான நவீன இயந்திரங்களை வாங்கிக் கொடுத்து, சுகாதாரக் கேடான நிலை இருப்பதைச் சரி செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தொண்டியிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் தரத்தை உயர்த்தி, அரசு மருத்துவமனையாக ஆக்கித் தர வேண்டுமென்று நாங்கள் பல தடவைகளாகக் கோரி வருகிறோம். அதை இந்த ஆண்டிலாவது செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவமனையாக உயர்த்த வேண்டும். மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தமட்டில், இன்னும் பல மருத்துவர்களையும் நியமனம் செய்து தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பாக ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையிலே

[திரு. கரி. இராமசாமி] [2007 மார்ச் 28

இரண்டடுக்கு முறையைக் கொண்டு வர நாங்கள் முயற்சிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. அதைக் கொண்டு வருவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல கூட்டத் தொடர்களிலே அதை நான் வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், உள்ளாட்சித் துறைக்கு இன்னும் அதிகாரங்கள் வேண்டுமென்று நாம் பல தடவை சொல்லி வருகிறோம். ஆனால், போதிய அதிகாரங்கள் உள்ளாட்சித் துறைக்கு இன்னும் கிடைக்கவில்லை. குறிப்பாக, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட சமையல் கூடங்களுக்குத் தேவையான ஊழியர்களைக்கூட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் நியமிக்க முடியாத ஒரு நிலை இன்றைக்கு இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய உள்ளாட்சித் துறையைச் சார்ந்தவர்களே அவர்களைத் தேர்வு செய்வதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே எந்தவிதமான அரசுக் கல்லூரியும் கிடையாது. எனவே அரசுக் கல்லூரியை அந்தப் பகுதியிலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொண்டியைத் துறைமுகமாக ஆக்க வேண்டுமென்று பல தடவை நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். மத்திய அமைச்சர்களும், எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களும் இதை வற்புறுத்தி இருக்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டம் இன்றைக்குக் கிடப்பிலே கிடக்கிறது. அதைச் செயல்படுத்த நீங்கள் முழுமையான ஒத்துழைப்பைத் தந்து, நீண்ட நாள் கோரிக்கையான தொண்டியைத் துறைமுகமாக ஆக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

தமிழர்களினுடைய வீர விளையாட்டான மஞ்சுவிரட்டு, மாட்டு வண்டிப் பந்தயம் போன்றவை இன்றைக்குத் தமிழகத்திலே சில பகுதிகளிலே நடக்கின்றன. பல பகுதிகளிலே தடை செய்யப்பட்டிருக்கிறது. நமது நீதித் துறை ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலே நடத்தலாம் என்று சொல்லியிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். Time ஆகிவிட்டது.



2007 மார்ச் 28]

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கிராமப்புறப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் தங்களது வீர விளையாட்டை வெளிப்படுத்துவதற்கு ஒரு சரியான வாய்ப்பு. இந்த வாய்ப்பை நமது அரசு செய்து தர வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு சாம்பிராணிக்கு வரிவிலக்குக் கொடுத்திருக்கிறீர்கள். கடவுளுக்குப் பயன்படுத்தக்கூடிய சாம்பிராணிக்கு வரிவிலக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதேபோல, ஊதுபத்தி தயாரிப்பது என்பது மிக, மிகச் சிறிய தொழில். அந்தத் தொழிலைச் சாதாரண மக்கள் செய்து வருகிறார்கள். அந்த ஊதுபத்திக்கும் வரிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

***திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2007–2008* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கிற தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், தலைவர், அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள வரவேற்கக்கூடிய பல நல்ல அம்சங்களை வரவேற்கிறேன். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய அத்தியாவசியப் பொருட்களான பருப்பு, எண்ணெய் ஆகியவையும் சேர்த்து இனி வழங்கப்படும் என்ற திட்டத்தை வரவேற்கிறோம். அதிலே இன்னும் பல பொருட்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கல்வித் துறைக்கு 7,057 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதையும் வரவேற்கிறோம். அறிவியல் மற்றும் கலைக் கல்லூரிகளில் இலவசமாகக் கல்வி வழங்கப்படும் என்ற அறிவிப்பை வரவேற்பதோடு, நீண்ட காலமாக, கடந்த ஐந்தாண்டு காலமாக நாங்கள் குரல் கொடுத்து வருகிறோம்; அண்டை மாநிலங்களான கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே பொறியியல் கல்லூரிகளில்

15 ஆயிரம் ரூபாய் ஆண்டுக் கல்விக் கட்டணம் இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே ரூபாய் 30 ஆயிரத்திற்குமேல் கட்டணம் இருக்கிறது என்கிற காரணத்தினாலே, ஆண்டொன்றுக்கு 30 ஆயிரம் இடங்கள் இங்கே காலியாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினோம். எனவே, கல்லூரிகளில் இலவசக் கல்வி வழங்கப்படும் என்பதை வரவேற்கக்கூடிய நிலையில், பொறியியல் கல்லூரிகளிலேயும் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, மெட்ரோ இரயில் திட்டம். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மோனோ இரயில் திட்டம் கொண்டு வர முயற்சி செய்தபோது, எங்களுடைய நிறுவனத் தலைவர் அய்யா அவர்களும், அண்ணன் கோ.க. மணி அவர்களும், இந்தத் திட்டம் வீணான திட்டம், வேண்டாம் என்று சொன்னார்கள். இங்கே சட்டமன்றத்தில்கூட கருத்து மோதல்கள் எல்லாம் ஏற்பட்டன. அதையும் கேட்காமல் போனதனாலே எங்களுடைய தலைவர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, அதற்குத் தடையையும் பெற்றார்கள். அப்போது மெட்ரோ இரயில் திட்டம்தான் மக்களுக்கான திட்டம் என்று சொன்னோம். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, 9 ஆயிரம் கோடி ரூபாயிலே நிறைவேற்றுவதற்காகத் தமிழக அரசு இன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பது வரவேற்கக்கூடிய நல்ல திட்டம் என்று நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல, விவசாயிகளுடைய வாட்டத்தைப் போக்குவதற்காகப் பயிர்க்கடன்மீதான வட்டியை 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைத்ததை வரவேற்கின்றோம். அதேபோல, என்னுடைய தொகுதியில் ஏலகிரி மலைக்கு சுற்றுலாத் துறைமூலம் நிதி ஒதுக்கி இருப்பதையும் இந்த நேரத்திலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நீண்ட காலக் கோரிக்கையான, என்னுடைய திருப்பத்தூர் தொகுதிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொடுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்காததைக் கண்டு நாங்கள் வருத்தம் அடைகிறோம். ஏனென்று சொன்னால், இன்றைக்குப் பாலாறு பாழாய்ப் போய்விட்டது. எங்கள் குடிநீருக்கு ஆதாரமே இல்லை. தருமபுரி, வேலூர்போன்ற மாவட்டங்கள் எல்லாம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.



அண்ணன் திரு. ஞானசேகரன் அவர்களும் தொடர்ந்து இந்தத் திட்டத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். எத்தனையோ திட்டங்களுக்கு நீங்கள் நிதி ஒதுக்கி இருக்கிறீர்கள். ஆனால், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்காதது வருத்தமளிக்கிறது. அது வேலூர் வரை நீட்டிக்கப்பட வேண்டும். இன்னும் சொல்லப் போனால், பாலாற்றையும், காவிரி ஆற்றையும் இணைக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அய்யா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*முற்பகல் 10–20*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் குறைப்பட்டுக்கொள்கிறார். அந்தத் திட்டத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ள வாசகம் நிறைந்த பகுதியைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜப்பான் நாட்டின் உதவியோடு அது நடைபெறுவதாக ஏற்கெனவே திட்டம் தீட்டப்பட்டிருப்பதால், அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இல்லையென்றால் நாமே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடிப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அந்தப் பகுதியின் இறுதியில், 'இந்தத் திட்டத்தை ஒரு அறைகூவலாக ஏற்று நிறைவேற்றுவோம்' என்று குறிப்பிட்டிருக்கிறேன். அறைகூவல் என்ற வார்த்தைக்குப் பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்களுக்கு அர்த்தம் தெரியாமல் போனதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. தி.க. ராஜா, பேசுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதேபோல, இப்போது பாலாற்றின் குறுக்கே அணை கட்டுகிற விஷயம் மிகவும் பூதாகரமாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். இருந்தாலும்கூட, கடந்த வாரம்

'தினமணி' நாளேட்டிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆந்திர அரசு 5.5 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிவிட்டது, கூடிய விரைவிலே கட்டப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய முதலவர் அவர்கள் ஆந்திர முதல்வரிடத்திலே பேசி, பாலாற்று அணைத் திட்டம் நிரந்தரமாகக் கைவிடப்பட்டது என்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, அந்நியச் செலாவணி வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு இந்திய வரைபடங்களிலே வேலூர் மாவட்டம் கறுப்பு மாவட்டம் என்று சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. அந்த மாவட்டத்திலே நாங்கள் எல்லாம் இருக்கிறோம் என்பதே எங்களுக்கு வேதனையாக இருக்கின்றது. எனவே, அந்தக் கறுப்பு மாவட்டத்தைப் பசுமை மாவட்டமாக மாற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இன்றைக்குத் தோல் தொழிற்சாலைக் கழிவினால் ஒரு பக்கம் பாழாகிறது, மணல் கொள்ளையால் ஒரு பக்கம் பாழாகிறது. இதையெல்லாம் அரசு தடுத்து நிறுத்த வேண்டும். அரசுக் குறியீட்டு அளவுக்குமேல் மணல் எடுக்கக் கூடாது என்கின்ற உறுதியான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, காடுகள் வளர்க்கும் திட்டம் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். நிலம், நீர், காற்று மாசுபடாமல் தடுக்க இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும். மூன்றில் ஒரு பங்கு காடு இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கு 17 சதவிகிதம்தான் காடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, காடு வளர்ப்புத் திட்டத்தை அதிகமாக ஊக்கப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை. நம்முடைய மாநிலத்திலே மொத்த உற்பத்தியிலே 25 விழுக்காடாக இருந்த வேளாண்மை தற்பொழுது 13.3 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. பல்வேறு சலுகைகள், நலத் திட்டங்களை அரசு வழங்கினாலும்கூட இன்றைக்குச் சிறு, குறு விவசாயிகளுடைய எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இன்றைக்கு விளைநிலங்களை எல்லாம் விற்றுவிட்டு, கிராமங்களைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை எல்லாம் மாறுவதற்கு,



அவர்களுக்கு நவீன முறையிலே விவசாயத் தொழில்நுட்பத்தைப் புகுத்தி, விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அனைத்து விவசாயக் குடுமபங்களுக்கும் கடன் அட்டை வழங்கப்பட வேண்டும். விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்ய வேண்டும். சாதாரணமாக ஒரு குண்டூசி தயாரிப்பவர்கூட அந்த ஊசிக்கு விலையை நிர்ணயம் செய்கிறார். ஆனால், விவசாயிகள், அவர்கள் பயிரிடுகிற விவசாயப் பொருட்களுக்கு விலையை நிர்ணயிக்க முடியாத அவல நிலை இருக்கிறது. இடைத்தரகர்களால் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள். எனவே, இடைத்தரகர்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கியிலே பெற்ற விவசாயக் கடன்களை எல்லாம் தமிழக முதல்வர் அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்; வரவேற்கக்கூடிய விஷயம். அதேபோல, கூட்டுறவு வங்கி மற்றும் வணிக வங்கிகளிலே வாங்கியிருக்கிற 5,431 கோடி ரூபாய் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், கல்வி, பொருளாதார வளர்ச்சியில் மேம்பாடு அடைய வீட்டு வசதித் திட்டங்கள், இட ஒதுக்கீட்டுத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கட்டண உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, அரசு உதவிபெறுகின்ற தனியார் சுய நிதிக் கல்வி நிறுவனங்களிலே நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கை சரிவரப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய மருத்துவ வசதி சாதாரணக் குடிமகனுக்கும் கிடைக்கச் செய்யப்பட வேண்டும் என்று நல்வாழ்வுத் துறையிலே பாடுபட்டுக்கொண்டிருந்தாலும்கூட, இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், வட்ட, மாவட்ட மருத்துவமனைகளிலும் அனைத்துப்

பணியிடங்களும் காலியாக இருக்கின்றன; அந்தப் பணியிடங்களிலே செவிலியர்கள், மருத்துவர்கள், மருத்துவத் தொழில்நுட்பப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் ஆகியோரை நியமித்து, அந்தப் பணியிடங்கள் எல்லாம் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

முற்பகல் 10–25

ஒன்றியத்திற்கு 30 படுக்கைகள் கொண்ட தரமான ஒரு மருத்துவமனை தருவதாகச் சொன்னார்கள். கடந்த ஐந்து ஆண்டு காலமாகவும், இப்போதும் என்னுடைய தொகுதியிலே ஒரு ஒன்றியத்திற்குக்கூட 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை வழங்கப்படாதது எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. எனவே, அனைத்து ஒன்றியங்களுக்கும் தரமான மருத்துவ வசதியும், கட்டமைப்பு வசதியும் செய்து தரப்பட வேண்டும்.

அதேபோல, வேலை நியமனத் தடைச் சட்டத்தை நீக்கியிருக்கிறீர்கள். பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும். அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின்மூலமாக Group I பணிக்குத் தமிழகத்தில் காலியாக உள்ள இடங்களை நிரப்ப வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது சிமெண்ட் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்திருக்கிறது. ஜல்லி விலை, மணல் விலை எல்லாம் உயர்ந்திருப்பதனாலே இலட்சக்கணக்கான கட்டுமானத் தொழிலாளர்கள்தான் இன்றைக்குப் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். சாதாரண, நடுத்தரக் குடும்பத்தினர்கள் எல்லாம் இன்றைக்கு வீடு கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற தொழிலாளர்களுடைய வாழ்க்கையெல்லாம் பிரச்சினையாக இருக்கிறது. எனவே, தமிழக அரசு விலைவாசி உயர்வைக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, தமிழகத்திலே 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்குகின்றன. அவற்றிலே 20 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே 13 கூட்டுறவு நூற்பாலைகளை மூடிவிட்டார்கள். அதனால், 13 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்து, நடுத்தெருவிலே இருக்கிறார்கள். தமிழகத்திலே தற்போது ஐந்து ஆலைகள் இலாபத்திலே இயங்குகின்றன.



மூடிக் கிடக்கும் 13 நூற்பாலைகளையும் திறந்து, அந்த 13 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் வேலை வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, இன்றைக்குக் கிராமங்களிலே 60 சதவீதம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் குடிசை வீடுகளிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நல்ல தரமான வீடுகளிலே 40 சதவீதம் மக்கள் வாழ்வதாகப் புள்ளிவிவரம் சொல்லப்படுகிறது. எனவே, அந்த 60 சதவீதம் மக்களுக்கும் தீப்பிடிக்காத தரமான கான்கிரீட் வீடுகளை, 50 சதவீதம் மானியத்துடனும், 50 சதவீதம் 20 ஆண்டு காலத் தவணையுடன்கூடிய கடனாகவும் வழங்கி, கட்டிக் கொடுத்து, இந்த நாட்டிலே குடிசை வீடுகளே இல்லை என்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூருக்கு அடுத்து மிகப் பெரிய நகரம் என்னுடைய திருப்பத்தூர். திருப்பத்தூர் நகராட்சி தோன்றி 120 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே வருவாய்க் கோட்ட அலுவலகம் இருக்கிறது. தாலுகாத் தலைமையிடமாக இருக்கிறது. சட்டமன்றத் தலைமையிடமாகவும், நாடாளுமன்றத் தலைமையிடமாகவும் இருக்கிறது. திருப்பத்தூர் மாவட்ட வனக் கோட்டம், திருப்பத்தூர் மாவட்டச் சுகாதார அலுவலகம், திருப்பத்தூர் மாவட்ட மின்சார அலுவலகம் போன்ற அனைத்து மாவட்ட அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இப்போது திருப்பத்தூர் நாடாளுமன்றத் தொகுதியைக் கலைத்துவிட்டு, திருவண்ணாமலைத் தொகுதியாக ஆக்க இருக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது. திருப்பத்தூர், மாவட்ட அந்தஸ்து பெறக்கூடிய நிலையிலே இருக்கிற காரணத்தினாலே, எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பத்தூர் நாடாளுமன்றத் தொகுதி எங்களைவிட்டுப் போகக் கூடாது. அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எங்களுக்கு உதவி புரிய வேண்டும்.

நிர்வாக வசதிக்காக, மிகப் பெரிய வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகராகக்கொண்டு புதிய மாவட்டத்தை, Delimitation கமிஷன் பணிகள் முடிந்தவுடன் கொடுக்கிறேன் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனவே, நீங்கள் திருப்பத்தூரைத் தலைநகராகக்கொண்ட ஒரு மாவட்டத்தை உருவாக்கித் தர வேண்டும்.

மேலும் எங்களுடைய தொகுதியிலே, சுதந்திரம்பெற்ற பின்னர் இதுவரையிலும் ஒரு கல்லூரிகூடக் கிடையாது. 1980 வாக்கிலே அங்கெல்லாம் இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் தீவிரவாதத்தை நோக்கிச் சென்ற கதையெல்லாம் இருக்கிறது. எனவே, அந்த நாளிலேயிருந்து கேட்டு வருகிறோம். இன்று வரையிலே ஒரு அரசுக் கல்லூரிகூட இல்லை. நம்முடைய அமைச்சரைக் கேட்டால், ரூபாய் ஒரு கோடி, 5 ஏக்கர் நிலம் கொடுங்கள் என்று சொல்வார். நாங்கள் எங்கே போவது ரூபாய் ஒரு கோடிக்கு? எனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, மிக, மிகப் பின்தங்கிய பகுதியான எங்கள் திருப்பத்தூருக்கு—அங்கே விவசாயக் கூலிகள், பீடித் தொழிலாளர்கள், ஊதுபத்தி தயாரிக்கிற மக்கள்தான் எங்கள் பகுதியிலே இருக்கிறார்கள். எங்களால் ரூபாய் ஒரு கோடி வழங்க இயலாது. எனவே, கருணை உள்ளத்தோடு எங்களுக்கு ஒரு கல்லூரி வழங்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் மனது வைத்தால், கொடுக்க முடியும். அவர்தான் அங்கு ரூபாய் ஒரு கோடி கேட்கிறார். மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களும், அமைச்சர் அவர்களும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்தான் ரூபாய் ஒரு கோடி கேட்கிறார் என்றால், ஏதோ அவருக்காகக் கேட்கிறார் என்ற ஒரு பொருள் வந்துவிடும். அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டுமென்று அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்குக் கல்லூரி வேண்டுமென்று சொன்னால், பொது மக்கள் நிச்சயமாக அந்தப் பகுதியிலே விரும்பி நன்கொடை கொடுப்பார்கள். தேவைப்பட்டால் நானும், பொதுப் பணித் துறை அமைச்சரும் வந்து இருந்து, அந்தத் தொகையை வசூல் செய்து, அரசுக் கல்லூரி வருவதற்கு வழிவகை செய்கிறோம். (குறுக்கீடு)

முற்பகல் 10–30

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மக்களுடைய கல்விக்காக நான்கூட அந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஒரு கோடி ரூபாய் பணம் கொடுத்தால் நாங்கள் அனுமதி தருகிறோம் என்று, அரசுக்குத்தான் உயர் கல்வித் துறை அமைச்சர் கேட்கிறார். அதை



நாங்கள் உள் வாங்கிக்கொள்கிறோம். ஆனால், இன்றைக்குத் தனியார் கல்லூரிகள் தொடங்குவதற்குக்கூட 40 இலட்சம் ரூபாய் பணம் செலுத்தினால் போதும்; உடனடியாக அனுமதி தருகிறோம் என்கிற நிலை அரசில் இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, ஒரு கோடி ரூபாய் நீங்கள் தாருங்கள், நாங்கள் கல்வி நிலையம் தொடங்குவதற்கு உங்களுக்கு அனுமதி அளிக்கிறோம் என்று சொன்னால், இது எப்படிச் சாத்தியம் ஆகும்? ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, *ஆதி திராவிட, மலைவாழ் மக்களுடைய கல்விக்கு நம்முடைய அரசு எப்படி வழி காட்டும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளுக்கெல்லாம் ரூபாய் 40 இலட்சம் என்பது, அவர்களே எல்லாவற்றையும் கட்டிக்கொள்வார்கள். Construction எல்லாம் நடக்கும்; அவர்களே சம்பளம் கொடுத்துக்கொள்வார்கள். அரசுக் கல்லூரி என்றால் அப்படி இல்லை. அரசுக் கல்லூரிகளுக்குச் சம்பளம், அவற்றை நடத்துவது எல்லாமே அரசுக் கல்லூரியினுடைய பொறுப்பில் இருக்கிற காரணத்தினால்தான், முதலில் ஒரு கோடி ரூபாய் கட்டுங்கள் என்று சொல்கிறோம். எல்லாவற்றையும் அரசுக் கல்லூரியேதான் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, உரையை முடியுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** எங்களுடைய மண்ணின் மைந்தர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் எங்களுக்கு நல்லதொரு வாக்குறுதியைக் கொடுத்து இருக்கிறார். அவருக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருப்பத்தூர் நகருக்கு ஒரு புறவழிச் சாலை வேண்டும் என்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடத்திலே மனு கொடுத்து இருக்கிறேன்; அதற்கும் அவர் ஆவன செய்ய வேண்டும். ஜோலார்பேட்டையை இரண்டாகப் பிரிக்கக்கூடிய அந்த மேம்பாலம், இரயில்வே தொடர் வண்டி நிலைய அலகு எண் 86–க்கு மாநிலத்தினுடைய பங்காக 50 சதவிகித நிதியை அரசு ஒதுக்கித் தர வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

எங்களுடைய வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகராகக்கொண்ட மாவட்டம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய கரத்தால் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ் (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பொதுப் பணித் துறை அமைச்சர் இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் சொல்கிறபோது, வேலூர் மாவட்டத்திற்கு ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நீட்டிக்க வேண்டும் என்கிற பொருளில்தான் சொன்னார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கூறுகிறபோது, நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறோம்; ஜப்பான் நிதி உதவி கேட்டிருக்கிறோம்; ஜப்பான் நிதி உதவி கிடைக்காவிட்டாலும்கூட அறைகூவலாகவே எடுத்து நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு மட்டுமேயொழிய, வேலூர் மாவட்டத்திற்கு இல்லை. ஆகவே, என்னுடைய வேலூர் மாவட்டத்தையும் ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு, அந்த மாவட்டங்களோடு இதையும் சேர்த்து எடுத்துக்கொண்டால், 500 கோடி ரூபாய் மிச்சமாகும். அதற்குத்தான் நான் பேசுகிறபோது அரசுக்கு ஏற்கெனவே ஓர் ஆலோசனை வைத்தேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது—பொதுப் பணித் துறை அமைச்சர், மின்சாரத் துறை அமைச்சர், இப்போது முதல்வர் இல்லை; நிச்சயமாகக் கேட்டுக்கொண்டு இருப்பார்— எங்களுடைய மாவட்டத்தையும் இந்த ஆண்டே சேர்த்து, அறைகூவலாக எடுத்து இந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும், நிதிநிலை அறிக்கையை முன்வைத்த



மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் வரவேற்கிறது. விவசாயிகளின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம், பருப்பு, சமையல் எண்ணெய் ஆகியவற்றை அரசே கொள்முதல் செய்து நியாய நிலைக் கடைகள்மூலம் வழங்கும் திட்டம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பயிலும் அடித்தட்டுக் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து, பணிபுரியும் பெண்கள் விடுதி அமைப்பு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு சதவீதம் கூடுதல் நிதி, சிறுபான்மை மக்களுக்கென தனி இயக்குனரகம் அமைத்தல் போன்ற நல்ல அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்று இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் வரவேற்கிறோம். 'ஏட்டுச் சுரைக்காய்' என்றும் 'காகிதப் பூ மணக்காது' என்றும் சிலர் எள்ளி நகையாடுகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களை இந்த அரசு தருகிறபோது, தோழமையோடு வரவேற்கிறோம். மக்களுக்கு எது செய்ய வேண்டும் எனக் கருதுகிறோமோ, அதை நேர்மையான, அரசியல் தோழமை உணர்வோடு அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

பொது விநியோக முறையில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை வ்ரவேற்கக்கூடிய நாங்கள், கடத்தல் கும்பலிடமிருந்து அரிசியைக் காப்பாற்றி, ஏழை எளிய மக்களுக்கு முறையாக விநியோகிப்பதற்காக பாக்கெட்மூலமாக விநியோகம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். அரசு நேரடிக் கொள்முதல் செய்து, பருப்பு, சமையல் எண்ணெய்போன்ற பொருட்களோடு உளுத்தம் பருப்பு, மிளகாய் வற்றல், மல்லி, காய்கறிகள் உட்பட அனைத்தையும் பாக்கெட்டுகளில் அடைத்து வெளி மார்க்கெட் விலையைவிடக் குறைவாக விற்பனை செய்ய அரசு முன்வர வேண்டும். கடும் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்தில் ஏழை எளிய, நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தமிழக அரசிடமிருந்து இதை எதிர்பார்க்கிறார்கள்.

முற்பகல் 10–35

புதிய ரேஷன் கார்டுகளுக்கு, ஏற்கெனவே கடந்த கூட்டத் தொடரில், மண்ணெண்ணெய் வழங்க மத்திய அரசைக் கேட்போம் என வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆகவே, புதிய ரேஷன் கார்டுகளுக்கும்,

கிராமப்புறத்தில் ஒரு சிலிண்டர் வைத்து இருப்பவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். அரிசி பெற முடியாத வெள்ளை நிற கார்டுகளை மாற்றிக் கொடுக்கவும், இந்த மன்றத்தில் பல உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதைப்போன்று, மனு செய்தால் தகுதியான அனைவருக்கும் புதிய ரேஷன் கார்டுகள் வழங்கவும் அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மேக்கோடு கிராமம், ஒட்டலிவிளை ஆதி திராவிட மக்கள் கைவசம் இருந்த நிலத்திற்கு வேறு நபர்களுக்குப் பட்டா கொடுத்ததை இரத்துச் செய்ய வேண்டுமென்ற எனது கோரிக்கையை ஏற்று, ஆதி திராவிட இன மக்களுக்கு அதே நிலம் மார்ச் 17 ஆம் தேதி பட்டா கிடைக்கச் செய்தமைக்கு அரசுக்கு நன்றி கூறுகிறேன்.

10 ஆண்டுகளுக்கும்மேலாகக் குடியிருக்கும் ஏழைகளுக்கு, குடிசைகளுக்கான பட்டா வழங்கும் அரசின் திட்டம் பாராட்டுக்குரியது ஆகும். ஆனால் 6 மாதங்களுக்குள் வழங்குவது என்பது, யதார்த்தத்தில் சிரமமானது. தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களை வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியவர்கள்தான் செய்ய வேண்டியுள்ளது. ஊழியர் பற்றாக்குறை காரணமாக, குறித்த காலத்தில் பட்டா வழங்குவது சிரமமானது. ஆகவே, தேவையான பணியாளர்களைக் கூடுதலாக நியமித்து, மேலும் 6 மாத கால நீட்டிப்புச் செய்து பட்டா வழங்கிட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

தனியார் ரப்பர் தோட்ட முதலாளிகள், சுய நிதிக் கல்லூரி உரிமையாளர்கள், அறநிலையத்தார், டிரஸ்ட்டுகள் ஆக்கிரமித்து வைத்திருக்கும் அரசுப் புறம்போக்கு நிலங்களை அரசே கையகப்படுத்த வேண்டும். இதற்கு எமது கட்சி முழு ஒத்துழைப்பும் தரத் தயாராக இருக்கிறது.

சமூகத்தில் சரிபாதி பெண்களே ஆவார்கள். மார்ச் 8—உலகப் பெண்கள் தினத்தைத் தமிழக அரசும், சமூக நலத் துறையும் கொண்டாடியதை வரவேற்கிறோம். அகில உலகப் பெண்கள் தினத்தின் வரலாற்றுப் பின்னணியைத் தமிழக அரசின் ஆரம்ப, உயர் கல்விப் பாடத் திட்டத்தில் சேர்ப்பதற்குத் திட்டமிட வேண்டுகிறோம். 33 சதவீத இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நிதிநிலை அறிக்கைமூலம் மத்திய அரசை வலியுறுத்துவதை



வரவேற்கிறோம். அதே சமயத்தில், தமிழகப் பெண்கள் ஆணையத்திற்கு உரிய சட்ட அந்தஸ்து வழங்கக்கூடிய சட்டமுன்வடிவை இந்தக் கூட்டத் தொடரிலே கொண்டு வரும்படிக் கேட்டுக்கொள்கிறோம். மத்திய அரசினுடைய குடும்ப வன்முறை எதிர்ப்புச் சட்டத்தைத் தமிழகத்தில் அமலாக்குவதற்கு சமூக நலத் துறை என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதையும் அந்தச் சட்டத்தைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு சமூக நலத் துறை என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை)*

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம கூலி வழங்கியிருப்பதை வரவேற்கிறோம். ஆனால், சிவகங்கைபோன்ற மாவட்டத்தில் சம கூலிமுறை சரிவரக் கடைப்பிடிக்கப்படவில்லை. கண்காணிப்புக் குழுமூலம் இது கண்காணிக்கப்பட வேண்டும். கான்ட்ராக்ட் முறை, கருவிகளைப் பயன்படுத்தும் முறை தவிர்க்கப்பட வேண்டும். என்ன கூலி என்பதையும், எப்படிப் பணி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மக்களுக்கு அரசு தனது இலாகாமூலமாக, சுவரொட்டிமூலமாக, பத்திரிகைமூலமாக, தொலைக்காட்சிமூலமாக விழிப்புணர்வு ஊட்ட வேண்டும். தமிழகத்தில் இன்றைக்கும் பெண்களில் அதிகமானோர் உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். 1¼ இலட்சம் முந்திரி ஆலைப் பெண் தொழிலாளர்கள் 15 ரூபாய் முதல் 35 ரூபாய் என்ற குறைந்த கூலிக்கு 10 முதல் 12 மணி நேரம் வரை வேலை செய்கிறார்கள். அண்டை மாநிலமான கேரளாவில் ஒரு கிலோ முந்திரிக் கொட்டை உடைத்தால் 13 ரூபாய் 6 காசு. ஆனால், அதே முதலாளிகளால் தமிழகத்தில் நடத்தக்கூடிய ஆலைகளில் தொழிலாளர்களுக்கு ஒரு கிலோ முந்திரிக் கொட்டை உடைத்தால் 4 ரூபாய் 30 காசு. எத்தனையோ ஏற்றத்தாழ்வுகள், இதைப்போன்று peeling, grading, tinning என அனைத்து section-களிலும் இதே நிலை தொடர்கிறது.

அதைப்போன்று, தமிழகத்தில் பல தனியார் ஜவுளி நிறுவனங்கள், மருந்துக் கடைகள், தனியார் மருத்துவமனைகள், fancy store-கள், வீட்டு வேலைகள் ஆகியவற்றில் பெண்களை மாதம் 500 ரூபாய் முதல் 1,000 வரை குறைந்த கூலிக்கு அமர்த்தி, பல மணி நேரம் உழைப்பில் ஈடுபடுத்துகிறார்கள். இத்தகைய நவீன உழைப்புச் சுரண்டலிலிருந்து தமிழகத்தினுடைய இளம் பெண்களை மீட்டெடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தற்பொழுது தொழிலாளிகள் வாங்கிக் கொண்டிருக்கும் கூலியையும் கணக்கிலெடுத்து, குறைந்தபட்சக் கூலிச்

சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறோம். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு ஊழியர்களாக, அங்கன்வாடி ஊழியர்களாக 1¼ இலட்சம் பெண்கள் கால் நூற்றாண்டாக வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்குப் பணி வரன்முறை, ஓய்வு பெறும்பொழுது பென்ஷன் போன்றவற்றை வழங்க வேண்டுகிறோம்.

*முற்பகல் 10–40*

முதியோர்களுக்கு ஆண் வாரிசு இருந்தாலும் O.A.P. வழங்கப்படும் என்று கடந்த நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தின்போது அறிவித்தபடி அரசாணை இன்னும் வரவில்லை. ஆகவே, முதியோர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள்; அரசாணை வெளியிட வேண்டுகிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக நிதியை அதிகரித்து ஒதுக்கீடு செய்ததை வரவேற்கிறோம். ஆனால், அண்டை மாநிலங்கள் மொத்த வருவாயில் 30 முதல் 50 சதவீதம் நிதியை உள்ளாட்சிகளுக்கு வழங்குகின்றன என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறோம்.

கிராமப் பஞ்சாயத்துக்களில் மின் கட்டணம் கட்டுவதற்கு நிதி போதவில்லை. காரணம், குடிநீர் வழங்குவதற்கான மின் கட்டணம், கழிப்பறை வசதிகள், தெரு விளக்குகள், குறிப்பாக, சோடியம் மின் விளக்குகள், இவை யாவும் மின் கட்டண உயர்வுக்குக் காரணங்களாகும். ஆகவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

கால் நூற்றாண்டாகப் பணியாற்றி, பென்ஷன், பணிக்கொடை, பணி நிரந்தரமின்றித் தவிக்கும் கிராமப் பஞ்சாயத்து தினக் கூலி குடிநீர் இயக்குநர்கள், பேரூராட்சிப் பொறியாளர்கள் ஆகியோரைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுகிறோம்.

மனிதக் கழிவை மனிதனே தலையில் சுமக்கும் நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் தமிழக அரசின் கொள்கை மிக, மிகப் போற்றுதலுக்குரியது. ஆனாலும், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் சமூகத்தில் ஆதி திராவிடர்களின் அவல நிலை தொடர்கிறது என்பதைக் கவனப்படுத்துகிறோம்.

சச்சார் குழுவின் அறிக்கைப்படி இஸ்லாமிய மக்கள், கடும் வறுமையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும் சமூகத்தின்



கடைக்கோடியில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கெனத் தனி இயக்குனரகம் அமைத்ததை வரவேற்பதோடு, கல்வி, வேலைவாய்ப்புகளில் அவர்களை முன்னேற்றுவதற்கு அரசு நல்ல திட்டங்களை வகுக்க வேண்டுகிறோம்.

சட்டம்-ஒழுங்கு. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையில் காவல் துறை இன்னமும் விழிப்போடு செயல்பட வேண்டியுள்ளது. தமிழகத்தில் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் மத நல்லிணக்கத்தோடு வாழ்வதும், சாதிக் கலவரங்கள் இல்லாமல் ஒற்றுமையோடு வாழ்வதுமே காவல் துறையின் முக்கியக் கொள்கையாக அமைதல் வேண்டும்.

குமரியில் புகழ்பெற்ற 12 சிவாலயக் கோயில்களில் ஐந்தாவது கோயில், பொன்மனை தீம்பிலான்குடி மகாதேவர் கோயில். 17–2–2007–ல் பக்தர்களுடைய காணிக்கைப் பணம் முழுவதையும் அங்கிருந்த சிலர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். நேரடியாகப் பார்த்த அறங்காவல் துறை ஊழியர்கள் புகார் செய்தும், காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்கக் கோரிப் போராட்டம் நடத்தியதால், எமது கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் வகுப்புவாத சக்திகளால் தாக்கப்பட்டார். குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இவ்விஷயத்தில் காவல் துறை ஒருதலைப்பட்ச நிலை எடுக்கிறதோ என்ற சந்தேகம் அங்கிருக்கிற மக்களிடத்தில் எழுந்துள்ளது. மேலும், அழிக்கால் கிராமத்தில் குருசடியை இடித்துத் தரைமட்டமாக்கிய சம்பவத்திலும் நடவடிக்கை இல்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு, தீர விசாரித்து நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னை, மெரினா கடற்கரையில் மீண்டும் கண்ணகி சிலையை வைக்க எடுத்துக்கொண்ட முயற்சியைப்போன்று, இடிக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத் திடலான சீரணி அரங்கத்தில் மீண்டும் அங்கே பொதுக் கூட்டம் நடத்துவதற்கான ஜனநாயகத்தையும், உரிமையையும் மலரச் செய்ய வேண்டுகிறோம்.

கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட நல்ல முயற்சியின் காரணமாக, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் தருவதற்குக் கேரளச் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. எனவே, கேரள அரசோடு தொடர்ந்து பேசி, தண்ணீர் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

திருவட்டாறுத் தொகுதியில் முட்டச்சிக்காயல் நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டுகிறோம். குளங்கள், கால்வாய்கள், அணைகளைத் தூர் வாரி, உடைப்புகளைச் சீர் செய்து, பாசனத்திற்கும், குடிநீருக்கும் நீர் தேக்கி வைக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டுகிறோம்.

குமரி மாவட்டம், களியல் வருவாய் கிராமம், வலியஏலா பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா, குடிநீர், மின்சாரம், சாலைபோன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் சுமார் 60 ஆண்டு காலமாகச் சிரமப்படுகிறார்கள். இவர்கள் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்துக் குடியேறி இருப்பதாக வனத் துறை குறுக்கீடு செய்ததன்பேரில் இந்த அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டுள்ளன. இது உண்மை அல்ல. நாடு விடுதலை அடைவதற்கு முன்னால், திருவிதாங்கூர் திவான் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின்போது இவர்களின் முன்னோர்கள் அங்கே குடியமர்த்தப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே, இவர்களுக்குப் பட்டா, மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலில் மீனவர்கள் காணாமல் போவது தொடர்கதையாகவே உள்ளது. எனவே, கடலில் காணாமல் போகும் மீனவர்களை உடனுக்குடன் தேடிக் கண்டுபிடிக்க, கன்னியாகுமரி மாவட்டத்திலேயே ஹெலிகாப்டர் வசதியை ஏற்படுத்த வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ் மொழிக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் பலருக்கு நிறுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் வழங்கவும், இறந்து போன அத்தகையோரின் வாரிசுகளுக்கு ஓய்வூதியம் வழங்கவும் வேண்டுகிறேன்.

அதேபோன்று, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பராமரிப்புக் கோட்டத்தைத் தென்காசிக்கு மாற்றம் செய்தது ஏமாற்றம் அளிக்கிறது. ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு, மீண்டும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பராமரிப்புக் கோட்டத்தைக் குமரி மாவட்டத்திற்குத் தர வேண்டுகிறோம்.



அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்குக் கடந்த 35 மாதச் சம்பள உயர்வை வழங்கவும், கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்குப் போக்குவரத்துக்காகப் பயன்பட்டு, தற்போது தடை செய்யப்பட்ட படகுப் போக்குவரத்தை உடனடியாகச் செயல்பட வைக்கவும் வேண்டுகிறேன்.

முற்பகல் 10-45

வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலிச் சட்டம் புதுப்பித்து வழங்கப்பட வேண்டும். வன விலங்குகளால் பயிர்கள், வீட்டுக் கூரைகள், மனிதர்கள் பாதிக்கப்படுவதால், சூரிய மின் வேலி அமைத்துத் தர வேண்டுகிறோம்.

மணலோடை, அரசு ரப்பர் கழகக் குடியிருப்புக்களுக்குக் காலம் தாழ்த்தாமல் நிர்வாகம் மின்சாரம் வழங்க வழிவகை செய்ய வேண்டுகிறோம்.

Sanctuary என்று கூறி, வனத் துறை குறுக்கே நிற்பதால் கீரிப்பாறை பாலம் கட்டப்படாமல் உள்ளது. தேவையின் கட்டாயத்தினைக் கருதி, மறு சீரமைப்புக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுகிறோம்.

மேலும், திக்குறிச்சி—வள்ளக்கடவுப் பாலம், வெள்ளாங்கோடு—பாரதப்பள்ளிப் பாலம்போன்ற பாலங்களுக்கு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தபடி, இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நிதி ஒதுக்குமாறு வேண்டுகிறேன்.

முறைசாரா தொழிலாளர்கள் அதிக அளவில் நல வாரியங்களில் பதிவு செய்த மாவட்டமான குமரி மாவட்டத்தில் பயனாளிகள் மனுக்களை ஆய்வு செய்ய தூத்துக்குடிக்குச் செல்ல வேண்டிய நிலையைத் தவிர்க்க, நாகர்கோவிலை மையமாகக்கொண்டு தொழிலாளர் ஆய்வு அலுவலகம் அமைக்கப்பட வேண்டுகிறோம்.

குமரி மாவட்டத்தை notified marketing area—வாக அறிவித்து, ரப்பருக்கு VAT வரியோடு ஒரு சதவீதம் சந்தைக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இதனால் ரப்பர் விவசாயிகள், சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுவதாலும், அரசுக்கு VAT வரிமூலம் வர வேண்டிய வருவாய் வராமல், ரப்பர் வேறு மாநிலங்களுக்குக் கடத்தப்படும் நிலை தொடர்வதாலும், சந்தைக் கட்டணம் ஒரு சதவீதத்தைக் குறைத்திட வேண்டுகிறோம்.

பள்ளிக்கூடங்களில் vocational group காலியிடங்களில் போடப்பட்ட ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்படக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு பீடித் தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு வழங்கும் உதவித் தொகை, அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆண்டுதோறும் புதுப்பித்துச் சான்றிதழ் வழங்கினால் மட்டுமே என்ற நிலையை அகற்றி, அனைத்து மாணவர்களுக்கும் உதவித் தொகை கிடைக்க வழிவகை செய்ய வேண்டுகிறேன்.

மாநிலம் முழுவதும் நடுநிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள் நியமனம் நடைபெறுகிறது. ஆனால், குமரி மாவட்டத்தில் தமிழ் ஆசிரியர் காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நாடு சுதந்திரமடைந்து இன்னும் மின்சாரத்தைப் பார்க்காத கிராமங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கு மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

பழங்குடியின மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைப்பதில் இருக்கும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும்.

பழங்குடியின மக்களுக்கு சாலை, குடிநீர், மின்சாரம்போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்க, திருவட்டாறு, அரூர்போன்ற மலைப் பகுதிகளைக்கொண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்குள் இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதைக் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. கே. உலகநாதன்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களால் 2007–2008 ஆம் ஆண்டுக்காக வைக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

வரியில்லாத வரவு–செலவுத் திட்டத்தில் 2006–2007 ஆம் ஆண்டு சுமார் 7,000 கோடி ரூபாய் விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்ததோடு, இந்த நிதியாண்டில் ரூபாய் 1,628 கோடி ஒதுக்கீடு செய்தும், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டியை முதலில் 9 சதவீதத்திலிருந்து



7 சதவீதமாகக் குறைத்ததையும், அது மீண்டும் இப்போது 5 சதவீதமாகக் குறைக்கப்படும் என்ற அறிவிப்பையும் வரவேற்கிறேன்.

விவசாயக் கூட்டுறவுக் கடன் சுமார் 7,000 கோடி ரூபாயை தள்ளுபடி செய்தது. 31-3-2006 ஆம் நாளில் நிலுவையிலிருந்த 31–3–2006–க்கு விவசாயத்திற்கு முன்பு தொடக்க வேளாண் வங்கிகளில் வாங்கிய கடனை முழுமையாகத் திரும்பச் செலுத்திய விவசாயிகள் பற்றியும், கேட்பதையெல்லாம் வாரி வழங்கும் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பாதுகாக்க நீர்ப்பாசன வசதிகளை முறைப்படுத்துவதற்கு ரூபாய் 100 கோடி தொடக்க மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின்மூலம் வழங்கப்படும் என்பதை வரவேற்கிறேன்.

அதேபோன்று, தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தப்படாமல் உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தலைக் கட்டாயம் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, 1,100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நவீன எடை இயந்திரங்கள் அளிக்கப்படும் என்பதை வரவேற்கிறேன். சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரியும் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுகிறேன்.

கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் சுமை தூக்கும் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்து அவர்களுக்கு மாத ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2000 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் கொண்டு வரப்பட்டு, அப்போது நல வாரியத்தில் ஏழரை இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டார்கள். ஏழரைக் கோடி ரூபாய் அரசிடம் இருந்தும், அதற்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நல வாரியத்தைக் கலைத்து, முடக்கி, உழவர் பாதுகாப்புத் திட்டம் எனக் கொண்டு வந்தார்கள். பதிவு செய்யப்பட்ட நல வாரிய உறுப்பினர்களுக்குப் பாதிப்புக்கேற்ப எந்தப் பலனும் கிடைக்கவில்லை. தமிழகத்தில் 5–வது முறையாக

முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் கொண்டு வந்துள்ளதைப் பாராட்டி, அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, குடும்பத் தலைவருக்கு மட்டுமின்றி, வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்கள் அனைவருக்கும் தனித்தனியாக சமூகப் பாதுகாப்பு அட்டை வழங்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூபாய் 152 கோடி ஒதுக்கீடு செய்து இருப்பதை வரவேற்கிறோம். மேலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

முல்லை பெரியாறு அணைப் பிரச்சினையில் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பினைக் கேரள அரசு அங்கீகரிக்க வேண்டும். காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்க தஞ்சை ராஜராஜ சோழன் சிலை முதல் வேதாரண்யம் ராஜாஜி பூங்கா வரை 110 கிலோ மீட்டர் தூரத்தில் மனிதச் சங்கிலி கண்டது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி; 16 ஆண்டுகளுக்குப் பிறகு, காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றம் ஓர் இறுதித் தீர்ப்பினை வழங்கியுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்த, அரசியல் பார்க்காமல் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுத்த முடிவினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் கால்வாய் தூர் வாருதல், நீர்ப்பிடிப்புகளைப் பாதுகாத்தல், மழை நீர் சேமிப்புபோன்ற நல்ல நோக்கத்தோடுகூடிய திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும். இப்பணிக்கு ரூபாய் 40 கோடி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுவதோடு, மேலும், வெள்ளக் காலங்களில் பொது மக்களையும், விவசாயத்தையும் பாதிக்கச் செய்யும் திருத்துறைப்பூண்டித் தொகுதியிலுள்ள வளவனாறு, மரைக்கா கோரையாறுபோன்ற ஆறுகளையும் இந்த ஆண்டு தூர் வாரித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கடந்த கால ஆட்சியில் வேலை நியமனத் தடைச் சட்டம் இருந்ததால், அரசு அலுவலகங்களில் காலியாக இருந்த பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே, அரசு அலுவலகங்களிலுள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், பொதுப் பணித் துறையில் பத்து ஆண்டு காலம் N.M.R. ஆகப் பணியாற்றுகிற 1,056 பேர்களை நிரந்தரம்



செய்வதற்கான முயற்சியை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவுடைமைச் சிற்பி ப. ஜீவானந்தம் அவர்களின் நூற்றாண்டு விழாவை நமது அரசு இந்த ஆண்டு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு முயற்சி எடுப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்கு அறிமுகமான சுதந்திரப் போராட்ட வீரர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த திரு. பி. சீனிவாச ராவ் அவர்களின் நூற்றாண்டு விழா வருகிற ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி துவங்கவுள்ளது. திரு. ஜீவா அவர்களுக்கு எவ்வாறு நமது தமிழக அரசு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறதோ, அதேபோல திரு. சீனிவாச ராவ் அவர்களுக்கும் நூற்றாண்டு விழாவை அரசு நடத்த வேண்டும். அதேபோல, திருத்துறைப்பூண்டியில் ஒரு மணிமண்டபமும் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்குவதை வரவேற்கிறோம். அதே நேரத்தில், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் சாதாரண, நடுத்தர மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அரிசி, பருப்புபோன்ற அத்தியாவசியப் பொருட்களை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள்மூலம் விநியோகம் செய்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

On-line வர்த்தக முறையை முற்றிலும் தடை செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர், பழங்குடி மாணவ, மாணவிகளில் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள்பெறும் பத்து மாணவ, மாணவிகளைத் தேர்வு செய்து, அவர்களது விருப்பப்படித் தமிழகத்திலுள்ள தலைசிறந்த மேல்நிலைப் பள்ளிகளில் பதினோராம் வகுப்பில் சேர்ந்து சிறந்த முறையில் அவர்கள் படிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது, அவர்களுக்குக் கல்விக் கட்டணம் மற்றும் உறைவிடச் செலவினை அரசே ஏற்கும் இந்தத் திட்டத்திற்கு ரூபாய் 2 கோடி ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எங்கள் தொகுதி மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும்விதத்தில், எனது திருத்துறைப்பூண்டித் தொகுதியில் ஒரு அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–55*

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு பட்ஜெட்டில் திருவாரூர் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிவிப்பிற்கு எங்களுடைய திருவாரூர் மாவட்ட மக்களின் சார்பில் அவர்களுக்கு எங்களது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, எங்களுடைய திருவாரூர் மாவட்டத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும் நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, திருத்துறைப்பூண்டி நகரம் வளர்ந்து வரக்கூடிய ஒரு நகரமாகும். அந்த நகரத்தில் போக்குவரத்து நெரிசல் என்பது மிகக் கடுமையாக இருக்கிறது. ஆகவே, நமது மரியாதைக்குரிய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சுற்றுச் சாலை அமைத்துத் தர வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி நகரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பழைய கட்டடத்தில் தனித் தனியாக இயங்கி வருகின்ற நிலையை மாற்றி, ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தர வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டித் தொகுதியில் ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கிட்டத்தட்ட 500–க்கும் மேற்பட்ட வெளிப்புற நோயாளிகள் வந்து செல்கின்றார்கள். போதிய வசதி இல்லாத காரணத்தினால், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்பட்ட சுகாதார மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருத்துறைப்பூண்டித் தொகுதியில், முத்துப்பேட்டைப் பேரூராட்சி வளர்ந்து வரக்கூடிய பேரூராட்சியாகும். கடந்த முறை நான் பேசுகிறபோது, முத்துப்பேட்டைப் பேரூராட்சியைத் தலைநகராகக் கொண்டு ஒரு வட்டத் தலைநகரம் அமைக்க வேண்டுமென்று



கேட்டுக்கொண்டேன். அந்த அடிப்படையில் அதைத் தாலுகாத் தலைநகரமாக மாற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முத்துப்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு சிறிய சுகாதார நிலையமாக இருக்கிறது. கிட்டத்தட்ட 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழக்கூடிய அந்தப் பேரூராட்சியில் அதனை மேம்பட்ட சுகாதார நிலையமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருத்துறைப்பூண்டி நகராட்சி வேகமாக வளர்ந்து வரக்கூடிய நகராட்சியாகும். அந்த நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர வேண்டுமாய் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டித் தொகுதியில் இடும்பாவனம் என்பது ஏழை எளிய மீனவர்கள் அதிகம் வாழக்கூடிய பகுதியாகும். அந்த மீனவர்கள் அந்தப் பகுதியிலிருந்து மருத்துவமனைக்கு வர வேண்டும் என்று சொன்னால், கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள முத்துப்பேட்டை அல்லது திருத்துறைப்பூண்டிக்கு வர வேண்டும். ஆகவே, அந்த இடும்பாவனம் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டியில் மூன்று தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர் ஆகிய மூன்று ஒன்றியங்களில் தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. அந்தத் தீயணைப்பு நிலையங்கள் இன்றைக்குத் தனியார் இடத்தில் வாடகைக்குத்தான் இயங்கி வருகின்றன. ஆகவே, அந்தத் தீயணைப்பு நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேதாரண்யம் பகுதியில் கோடியக்காடு, வேதாரண்யம், அண்டர்காடு, பன்னாள் கிராமக் கூட்டுறவு வங்கிகளில் உப்பளத் தொழிலாளர்கள், உப்பள விவசாயிகள் வாங்கிய கடன்களைக் கட்ட முடியாமல் இன்றைக்கு மிகப் பெரிய சிரமத்திற்குட்பட்டிருக்கிறார்கள். வறட்சியால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் சுமார் ரூ.7,000 கோடியை எப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தள்ளுபடி செய்தார்களோ, அந்த அடிப்படையில் ஏழை உப்பள விவசாயிகளின் கடன்களையும் தள்ளுபடி செய்து, அந்தப் பகுதியினுடைய விவசாயத் தொழிலாளர்களையும்,

அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய உப்பள விவசாயிகளையும் பாதுகாக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பழங்குடியின மக்கள் சாதிச் சான்றிதழ் வாங்குவதில் உள்ள பிரச்சினைகளைப் போக்கிட வேண்டும். 2007–2008 ஆம் ஆண்டு தட்சணம், மருதவனம் ஆகிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அ,வர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்குப் பல்வேறு சிறு குடிசைத் தொழில்களுக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதேபோல, ஏழை எளிய மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய கடலை மிட்டாய்க்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மின் வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் இன்றைக்குப் புதியதாக நான்கு மாவட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதில் தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களையும் சேர்க்க வேண்டுமாய்க் கேட்டு, சிறப்பான இந்த நிதிநிலை அறிக்கைமீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி.

*முற்பகல் 11–00*

**DR. OSCAR C. NIGLI:** Hon'ble Speaker Sir, this is my second-time speech on the budget as a second-time M.L.A., thanks to the fifth-time Chief Minister of Tamil Nadu Dr. Kalaignar, (Thumping of desks) who has protected the minorities, protected minority rights and minority schools. I would like to make this statement, as one of our leading newspapers, 'The Hindu' last year said. After this Government came to power, the journey for our Chief Minister began in May 2006. There was no honeymoon, the six months' customary honeymoon which most people and the Governments have. This Chief Minister has started his work immediately and many of the promises have already been fulfilled in



less than one year. It is something, which is very very strange. (Thumping of desks). In fact, considering the way the Chief Minister is progressing, he will have to find out new avenues and new promises to keep in the next few years. I think the Government has to change the slogan 'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்'. We will have to say 'சொல்லாததையும் செய்வோம்'. (Thumping of desks)

One thing I must definitely say. Today we have as our Chief Minister here, a person who is not just going to celebrate 50 years in the Legislative Assembly but also more than 60 years in public life in his contribution to Tamil Nadu's history, Tamil Nadu's culture and Tamil Nadu's political field. In fact, last year in the budget allocation, one of the things our Chief Minister said was that with regard to the Police Department, what we required was sensitization and change of attitude in the Police. But what I would say today is we require change of attitude and sensitization of our politicians. The reason is, very often people say there is law and order problem, there is terrorism etc Let us remember one thing. Law and order problem, terrorism and mosquito menace cannot be tackled just by the Government alone. It needs people's support. It needs people's co-operation. Only then any Governmental organisation can deliver the goods. That is why we say that it is very very important that we realise our responsibility. The Indian citizen, when he goes abroad, is more responsible. Why is that he just cannot do it here? The thing is, there is a spate of issues about terrorism and all this is false propaganda. One thing I would like to say. Let us realise that terrorism is not a local issue. It is not an issue pertaining to Tamil Nadu alone. It is not an issue just of the country, but it is a global issue. So, we have to understand and try to find out solutions for this and just not make accusations because it is due to the problem in Sri Lanka. It is said that there is so much of our support for them. I would like to ask one question. The violence in Sri Lanka has been going on for the past two and a half years. Does it mean that the previous Government is responsible? No. Similarly, this Government is also not responsible for what is happening. Whatever needs to be done, is being done.

I would now like to come to the Budget. There are a few things which we have to bear in mind. The first thing I will talk about is Education. Though I don't want to go into the details about this, one clear thing is that 24,642 posts of teachers have already been filled up. For the last five years, no posts were sanctioned and posts occupied by people who retired were left as they were. (Thumping of desks) Today we have already filled up many posts and 3,337 posts are to be filled up.

One of the things I must really want to place on record is about the English Laboratories which are to be set up at a cost of Rs.130 lakhs. I have been touring all over Tamil Nadu and in many of the schools they have been telling me that this is one of the best schemes and that this will help the pupils. We have to remember that Tamil Nadu is not an island. Today people are talking about the anti-English sentiment. I agree, we do not want Hindi. If Hindi is imposed, then English and Tamil would suffer. But let us not forget that English is extremely important if we are to go beyond the borders of Tamil Nadu. The Tamilian is not remaining within Tamil Nadu only. He is going to other States and he is going all over the world. Yet, unfortunately people who preach against English, all of them, have their children studying in English medium schools and Anglo-Indian schools. This is the unfortunate thing.

முற்பகல் 11–05

We have one rule for a person and another rule for somebody else. and therefore, I would like to quote what the great Statesman Rajaji said, 'English is Saraswathi's gift to India'. We have to remember this and realise this. In Higher Education, the shift system which has been introduced is of great importance.

Regarding industries, many Members have spoken about many industries, industrial parks, etc. But what is important is that Rs.7,000 crores of investment has come into Tamil Nadu and 96,000 people are going to be appointed, thanks to the MoU-s signed between the Tamil Nadu Government and all these industries.

As far as tourism is concerned, a lot has been done. A High Level Monitoring Committee is to be appointed. I would request the Hon. Chief Minister to see that the minorities are well represented here in this case.

I welcome the initiatives taken in the field of education again. We have received a lot of support from the Government, from the minority institutions and from the minority schools. In fact, yesterday, one of the Members said that we should divide the Education portfolio into three—Higher Education, School Education and Primary Education. I oppose this move tooth and nail. There was a famous saying in English which says, 'Too many cooks spoil the broth' which means, I would rather put it in this way— சமையல்காரர்கள் அதிகமாக இருந்தால் உணவு நன்றாக இருக்காது. So, the same thing is here. இங்கு சமையல்காரர்கள்' நன்றாக இருக்கிறார்கள். சமையல் நன்றாக





இருக்கிறது. உணவு நன்றாக இருக்கிறது. So, why should we spoil it? We have got performing Ministers—the Higher Education Minister and the School Education Minister. In fact, yesterday, no less a person than my friend in the Congress, Dr. K. Jayakumar said that our School Education Minister has been making a very good performance. If such is the case, why do you want to break things further? This is not going to solve the problem. And not only that. As I have said the cook is good and the head of the family, what we say as "குடும்பத் தலைவர்" Dr. Kalaignar is the best. (Thumping of desks)

For the first time, the State Board for Anglo-Indian Education which was not functioning for the last five years has been restored. This is the first time that the Education Minister has met all the heads of schools and this is where I would like to say that let us be very very careful in the matter of common syllabus. A lot of things have been said. Even recently in the Press there was a statement that there was an education gap and it is because of this education gap, we need to have a common syllabus. Well, let me tell you that this syllabus—we are having the S.S.L.C., we are having the Anglo-Indian Schools and the Matriculation Schools have been there in Tamil Nadu for more than 70 years. Let us be very very careful when we talk about this common syllabus and about the so-called gap which people are talking about. The same people, unfortunately, send their children to these schools but they talk about this education gap. We have to remember that Tamil Nadu, particularly Chennai is the Intellectual Capital of the country and we have to be very very careful when we make such moves which will isolate our country.

Next, I would like to talk on the minorities about which I am deeply concerned. Coming to the welfare of the minorities, on behalf of the minorities, I would like to thank the Government for paying special attention and starting the Socio-economic development of Minorities Board. Yesterday, one Member made a statement. He said that the minorities have not been looked after. This is something which all of us have to laugh at. But my friend John Joseph spoke in the morning about it. The word 'Minority Government' was used at least ten times yesterday. Sir, I am very happy. We can call it a 'Minority Government' because this is a Government which is for the minorities. Therefore, it is a minority government. (Thumping of desks) Probably I must thank my friend for having said that yesterday so many times. Let all these people realise that the welfare of the minorities is extremely important. I would also like to talk about one thing. Every Christian, Muslim, Sikh or Parsi asks one question,

namely, what about the Anti-conversion law which was there in the previous Government, which affected so many Christian and Muslim Schools? They said, 'Let all of us speak out'. What has happened to all these schools, institutions which suffered by this draconian Anti-conversion law which was abolished, which was scrapped, the moment this Government came to power? (Thumping of desks) We have not forgotten this. (Interruptions) No, I want to know just what my friends are saying. That is all.

*முற்பகல் 11–10*

The other thing is, today, talking about this Budget, as an economist I would like to react and make one point on this. The total receipts of the Government is Rs.44,532 crores. Expenditure is Rs.44,663 crores, which means the deficit is Rs.101 crores only and the total fiscal deficit which you all know is the difference between the revenue deficit and fiscal deficit. The revenue deficit is the difference between the income and the expenditure. The fiscal deficit is including the capital expenditure taking place and the fiscal deficit is only Rs.7,000 crores which is less than 3% of the allowable fiscal deficit all over the country. This is something which means that the Finance Minister and all his team have done an excellent job in containing the fiscal deficit to less than 3%. (Thumping of desks) In fact it is a very, very comprehensive budget which covers all areas of the field. At this point of time, I would just like to make a mention about a point raised here. As far as this is concerned, it is a comprehensive budget because it has been talking about growth plus change. What is interesting is that State budget is similar to that of the Central budget. The thrust is on agriculture. But I must say that this budget is an improvement over the Central budget, because it has not only spoken about agriculture, given a thrust on agriculture, it has spoken about growth, it has talked about 9% growth. That is also talking about long term growth. Very often Chief Ministers only worried about short term promises. What our Hon. Chief Minister has kept in mind is the progress of Tamil Nadu, not now, not in the elections for the next 5 years, but the progress of Tamil Nadu for the next 10 years and this is where we are different.

I have just got a petition to-day from Coimbatore. It seems that there is an interim order which has been passed. People from Amaravathi and the neighbouring districts of Coimbatore are little bit agitated because of an interim order which has been passed awarding 4 t.m.c.ft. of water from Amaravathi river to Kerala. The people around there are agitated and I would appeal to our Hon. P.W.D. Minister, who is an expert on this, to please assure the House so



that the people there in Coimbatore and Tamil Nadu will be at rest and not feel agitated about this, to know what we can do to assuage their feelings. I would appeal to you, sir, on this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிர்பாராமல் நிகிலியிடமிருந்து அமராவதிப் பிரச்சினை வந்திருக்கிறது. அதாவது, இப்போது தந்திருக்கிற நடுவர் தீர்ப்பின் அடிப்படையில் அமராவதியிலிருந்து 3 டி.எம்.சி. நாம் தர வேண்டும். அதனாலே இப்போது அங்கேயிருக்கிற விவசாயிகள் மத்தியிலே— எனக்கும் ஒரு செய்தி வந்திருக்கிறது. தங்களுடைய பாசனத்திற்குப் பாதிப்பு ஏற்படுமோ என்று அமராவதி ஆயக்கட்டுதாரர்கள் பயப்படுவதாகவும் எனக்குச் செய்தி வந்திருக்கிறது. நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அமராவதியிலேயிருந்து நமக்கு மொத்தம் 8 டி.எம்.சி. வருகிறது. கீழே நாம் dam கட்டி வைத்திருக்கிறோம். ஏற்கெனவே அவர்கள் ஒரு டி.எம்.சி. உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது, மேலும் 2 டி.எம்.சி அவர்களுக்குப் போகிறது. ஆக 8 டி.எம்.சி. யிலே 3 டி.எம்.சி.யைக் கேரளா பயன்படுத்திக்கொண்டாலும், 5 டி.எம்.சி. தண்ணீர் நமக்கு வரும். அமராவதி dam–னுடைய கொள்ளளவு 4 டி.எம்.சி. தான். ஆகையினாலே பாதிப்பு வராது. இரண்டாவது, அந்தத் தீர்ப்பிலே ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், இந்தத் தண்ணீரை நாம் இங்கிருந்து 3 டி.எம்.சி. அமராவதியிலே தருகிறோம்; பவானியிலே 6 டி.எம்.சி. தருகிறோம். இந்தத் தண்ணீரைக் கேரளா உபயோகப்படுத்திக்கொள்கிற வரையில் அவை எல்லாவற்றையும் தமிழ்நாடு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று வந்திருக்கிறது. எனவே, உடனடியாக எந்தவிதமான பாதிப்பும் அமராவதியில் இருக்கிற பாசனதாரர்களுக்கும், பவானியிலே இருக்கிற பாசனதாரர்களுக்கும் ஏற்படாது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது பவானியிலேகூட அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை. ஏற்கெனவே பவானியிலே நமக்கு என்ன? ஏற்கெனவே ஒரு டி.எம்.சி., ஒன்றரை டி.எம்.சி., அவர்கள் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு அட்டபாடி ஒப்பந்தத்திலே இரண்டரை டி.எம்.சி. கொடு[illegible] நாம் திருவனந்தபுரத்திலே கேட்டோம். ஏற்[illegible] அவர்கள் use பண்ணிக்கொண்டிரு[illegible]கிறார்கள். நான்கு [illegible]

227560
சென்னை-600 00[illegible]

வரையிலும் வேண்டுமானாலும்கூட use பண்ணலாம். நம்முடைய வாதத்தைத் தமிழ்நாட்டின் சார்பிலே எடுத்து வைத்தோம். ஆனால், அவர்கள் ஆறு டி.எம்.சி. என்று சொல்லியிருக்கிறார்கள், பவானியிலே. ஆகையினாலே, ஒன்பது டி.எம்.சி. நாம் கொடுப்பதனாலே பாதிப்பு ஏற்படாது. அதையெல்லாம் நான் வெளிப்படையாகச் சொல்ல விரும்பவில்லை. இப்போது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரை முழுக்க உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய நிலையில் கேரளா இல்லாத காரணத்தால், அவர்கள் உபயோகப்படுத்துகிற வரையில் தமிழ்நாடு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தீர்ப்பு இருக்கிற காரணத்தினாலும், தற்போது எந்தவிதமான பாதிப்பும் விவசாயிகளுக்கு வராது. இருந்தாலும், இந்தக் குமுறலைச் சட்ட நுணுக்கத்தின்மூலமாகவோ அல்லது technical அடிப்படையிலோ Tribunal-ஐ அணுகலாமா என்பது குறித்தும் நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–15*

**HON'BLE SPEAKER:** What do you want?

**TMT. BADER SAYEED:** I want to get a clarification from the learned Member. He spoke about the minorities. (Interruptions)

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்த பிறகு சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* Mr. Nigli.

**DR. OSCAR C. NIGLI:** Yes, I am carrying on.

**HON'BLE SPEAKER:** Put an end to your speech. (Interruption)

**DR. OSCAR C. NIGLI:** I am sure, I will finish off within my time definitely.

**HON'BLE SPEAKER:** No, you please put an end to your speech.

**DR. OSCAR C. NIGLI:** Yes, I will. I have still got a few more minutes, Sir. With these few words, I would like just to talk about the budget. Because, I think, I am the most competent person to talk about, as far as minorities are concerned. I would also like to talk about the budget. It is a populist budget as has been reported in the Press. Yes, it is true. It is a budget for the people. So, it is a populist budget. But, for the first time, you have a populist budget that keeps in mind the growth and the development of the economy of Tamil Nadu. This is what I would like to mention. So, this is where we made a difference.



Of course, towards the end I would say, regarding the farmers we all know the facts. Still everyone keeps talking about it. A lot has been done and what is more important is, apart from the waiver of loans, the reimbursement ordered to the co-operatives. The Government is giving a sum. Apart from that, funds for crop loans, farm education, election to the co-operative bodies, which have not been held so long and protection of the farmers have been given.

Above all, the Budget talks about giving land to the landless. This is something which our Chief Minister had always dreamt about and he has succeeded. 71,117 acres have been given to 71,755 farmers. Despite doubts raised by some people, he has been able to do today what he has said and promised.

I would also like to talk lastly about the Police Force. I am winding up, Mr. Speaker Sir. Before that, I would just like to mention one thing here. Again, close to my home-town Coimbatore, in T.N.P.L., there are almost 2,000 contract workers and I would request that these contract workers in T.N.P.L. be regularised. They have been in this position for many years.

As far as the Police Force is concerned, mention has been made in the Budget about the Third Police Commission, i.e., Rs.20 crore allotment for the D.G.P.'s Office and Rs.21 crores for the Commissioner of Police office. Above all these great things, as far as the Tamil Nadu Police is concerned, they have long term benefits. In fact, the latest report today is that the Tamil Nadu Police— I am talking as of now, in the last few months—is the most well prepared among all the Police Forces across the country. This is the fact that I have just got the prevailing crime rates. The crime rate has come down by 5%. Illicit liquor has been removed and even the revenue got from TASMAC sales is something to be appreciated. Some people spoke about introducing prohibition. Well, I would say, economically, it is the ** thing to talk about re-introduction of prohibition, because, many years ago, in Bombay, Morarji Desai was worshipped by all the illicit liquor people. The reason was, illicit liquor was able to flow very well. So, when you have prohibition, you will only encourage illicit liquor.

The traffic congestion in Chennai has been eased, thanks to the number of fly-overs, subways, etc.. These are all because of the vision and the thought of one man, namely our Local Administration Minister, who is working hard to ease this traffic congestion. (Thumping of desks) (Interruption) It is okay,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

I know. I should complete. The Speaker is here to tell me that. After this, in fact one Member said. (Interruptions) Please, let me finish Sir. (Gong was sounded) Sir, let me finish. (Interruption) No, I am not yielding. I am yet to finish. I am not yielding. (Interruptions) I would like to finish. (Interruptions) I would like to finish. I have almost finished. Sir, I will finish. (Interruptions) I am not yielding. (Interruptions) I am not yielding. (Interruptions) I am not yielding Sir. I want to finish my speech. (Interruptions) I will finish.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், அவர் பேசி முடித்துவிடட்டும்.

**DR. OSCAR C. NIGLI:** Velmurugan Sir, (Interruptions)

**HON'BLE SPEAKER:** Mr. Velmurugan, I will give you time.

**DR. OSCAR C. NIGLI:** Velmurugan Sir. நான் முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடியுங்கள்.

**DR. OSCAR C. NIGLI:** I just want to admit one thing. Somebody has said that, recently because of what has been done regarding water, the 7 M.L.A.s were elected. Now, I must tell you that in the next 5 years, because of what has been achieved in Chennai by the Local Administration Minister, next time all the 15 M.L.A.s will be from the allies, the partners. (Thumping of desks)

With these few words (Interruptions) I am finishing up. I would . .

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், அவர் உரையை முடித்துவிடட்டும். (குறுக்கீடு) I will give you time. Sit down. *(குறுக்கீடுகள்)*

**DR. OSCAR C. NIGLI:** With these few words, I would like to congratulate the Government for the excellent budget. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரது உரையில் ** என்ற வார்த்தை சொன்னார் அல்லவா? அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எடுக்கச் சொல்லியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், அவர் சொன்ன வார்த்தையை நீக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) அந்த ** என்ற வார்த்தையை எடுத்துவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* Mr. Nigli, finish your speech.

**DR. OSCAR C. NIGLI:** I will finish. With these words, I would like to congratulate the Government. . . (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You come to the end.

**DR. OSCAR C. NIGLI:** I will come to the end. They do not allow me to finish. I would like to congratulate the Government for the excellent work, the excellent budget and I am sure Tamil Nadu can go . . . (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உட்காருங்கள்.

**DR. OSCAR C. NIGLI:** They don't even allow me to finish Sir. (Interruption) Probably, they don't comprehend with what I say. I would like to finish by thanking the Government for this excellent budget. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**DR. OSCAR C. NIGLI:** Don't talk to me. உட்காருங்கள். You are nobody to tell me that. Don't tell me that. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் யாரும் பேசக் கூடாது. *(குறுக்கீடு)*

**DR. OSCAR C. NIGLI:** Who are you to tell me that? (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. அந்த அம்மா பேசிவிடட்டும். நான் சொல்கிறேன். உங்களுக்கு time தருகிறேன். (குறுக்கீடு) அந்த அம்மா பேசட்டும்.

**TMT. BADER SAYEED:** Hon. Speaker, Thank you for giving me the opportunity. Our learned Member Dr. Nigli has made some very fabulous

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

statements over here. He has said that the Anti-conversion law which was there earlier was repealed by this Government. This Government only exhumed that dead body. It was already buried. It was exhumed by them. However, (Interruption) However, may I say that the learned Member ...(Interruption)

**HON'BLE SPEAKER:** You see, You can ask for clarification, but this is not the time for expressing your views. (Interruption) You cannot express your views here now. This is not the time. What do you say? You cannot give your expression here. Mr. Velmurugan.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் நான் பேசுகின்றபோது தமிழக அரசு பூரண மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வர வேண்டும், அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தை நான் பதிவு செய்தேன். பதிவு செய்கின்றபோது, முன்னாள் தமிழகத்தினுடைய முதல்வர் மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய கொள்கையையும், தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்தையும் இந்த மன்றத்தில் நான் பதிவு செய்து பேசினேன். திராவிடப் பாரம்பரியத்தினுடைய அடிப்படையில் இன்றையதினம் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் தலைவர்களுடைய கருத்துகளுக்குத் தாங்கள் மரியாதை அளிப்பீர்களா என்ற வகையில்தான் என்னுடைய பேச்சு அமைந்தது. இன்றைக்கு அதே இயக்கத்தினுடைய ஆதரவோடு நியமன உறுப்பினராக வந்திருக்கிற அருமைத் தோழர், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தக் கொள்கை ** என்கிறார். ** என்கிறார். ஆக, இதற்கு முன்பு இந்தத் தலைவர்களுடைய அந்தக் கொள்கையையும், இவர் ** என்று இந்த அவையில் பதிவு செய்கிறார். அதை இந்த அவை அனுமதிக்கிறது என்று சொல்வதை நான் இங்கே கடுமையாக எதிர்ப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. தி. வேல்முருகன்:** அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் எழுந்து, அதற்கு உங்களிடத்தில் கருத்தைச் சொன்ன பிறகு குறிப்பேட்டிலிருந்து நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, ஓர் இயக்கத்தினுடைய கருத்து, எங்கள் கட்சியினுடைய கொள்கை, இந்த நாட்டினுடைய பெரும்பான்மை மக்களுடைய வாழ்க்கையும், இன்னும் சொல்லப் போனால், ஆயிரக்கணக்கான தாய்மார்கள் விதவைக் கோலம் பூணுகின்ற இந்தச் சூழலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு தடுத்து நிறுத்துவார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. இன்னும் சொல்லப் போனால், தமிழகத்திலிருக்கிற ஆயிரக்கணக்கான சுய உதவிக் குழுக்களை நடத்துகிற பெண்கள்—முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்திருக்கிற பெண்கள், 'இன்றைக்கு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குகிறீர்களே, அரிசி விலையை நீங்கள் ஒரு ரூபாய் ஏற்றிக்கொள்ளுங்கள்; ஆனால், பூரண மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வாருங்கள்' என்று மாண்புமிகு முதலமைச்சருக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையின் அடிப்படையில்தான் என்னுடைய கருத்தைப் பதிவு செய்தேன். ஆனால், இவர்கள் ஒரு கடுமையான வார்த்தையை இந்த அவையில் பயன்படுத்துவதை ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன அந்த ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லியாகிவிட்டது. அதை யாரும் சொல்லிச் சொல்லவில்லை. ** என்ற வார்த்தை unparliamentary word. உட்காருங்கள், திரு. வேல்முருகன். ** என்பது unparliamentary word என்று சொல்லி, I have ordered to remove that word. (Interruption)

**DR. OSCAR C. NIGLI:** Speaker Sir, Can I just clarify this? (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி. (குறுக்கீடுகள்)

**DR. OSCAR C. NIGLI:** Can I just clarify this? (Interruption)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** Speaker Sir, Point of Clarification. (Interruption)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**DR. OSCAR C. NIGLI**: Sir, I just want to clarify this. Sir, can I clarify this? (Interruption)

**HON'BLE SPEAKER:** No.

**DR. OSCAR C. NIGLI**: Sir, I just want to clarify. When I said ** I was referring to the policy— economic policy. I only said the economic policy (Interruption)

**HON'BLE SPEAKER:** Your speech is over. *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி. (குறுக்கீடுகள்)* No, Sit down. *(குறுக்கீடுகள்)* No, Sit down. *(குறுக்கீடுகள்)* You are not allowed. *தேன்மொழி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–25*

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண, நடுத்தர விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த என்னை நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற மாபெரும் இயக்கத்தின் வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்து வெற்றிபெறச் செய்த, நாங்கள் நித்தம் வணங்கும் எங்கள் குல தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து கோடானு கோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த மனிதநேய மிக்க நிலக்கோட்டைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காக அயராது பாடுபட்ட கழக உடன்பிறப்புகளுக்கும் தோழமைக் கட்சி சகோதரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைப் பாதம் பணிந்து தெரிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.

*'பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்*
*பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்'*

என்றார் பாரதியார். அந்த வைர வரிகளுக்கு இலக்கணமாய், திராவிடப் பேரியக்கத்தின் ஈடு இணையற்ற தளகர்த்தராய், பாரம்பரியமிக்க திராவிட வரலாற்றின் துருவ நட்சத்திரமாய், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் காண விரும்பிய இலட்சியக் கனவுகளை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நடைமுறைப்படுத்திக்கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் தலை நிமிர்ந்து வாழ, சொந்தக் காலில் நின்று சாதிக்கப் பெண் கல்வி அவசியமாகும். பெண்களின் இன்றியமையாமையை உணர்த்தவே எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள், குழந்தைகளின் பெயருக்கு முன்னால் தாயின் எழுத்தை இனிஷியலாகப் போட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள்.

வாழ்க்கையில் அழிக்க முடியாத செல்வம் கல்விச் செல்வம். அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தைப் பெறுவதற்காக மாணவ, மாணவிகளுக்குப் பல உதவிகளை அளித்த அம்மா அவர்கள்தான் அதற்கெல்லாம் முத்தாய்ப்பாக இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தினார். உலகில் பெண்களுக்கு முன்னுரிமை தந்தவர் எங்கள் அம்மா. தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதன்மூலம் தமிழகத்தில் பெண் சிசுக் கொடுமையைத் தடுத்தவர் எங்கள் அம்மா. எல்லோரும் கல்வி கற்க 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை இலவசப் பாட நூல்களை வழங்கியவர்கள் எங்கள் அம்மா.

அனைத்து மகளிர் காவல் நிலையம், மகளிருக்கான சுகாதார வளாகங்கள், உழவர் பாதுகாப்புத் திட்டம், லாட்டரிச் சீட்டுத் தடைச் சட்டம், கந்துவட்டித் தடுப்புச் சட்டம், ஆலயங்களில் அன்னதானத் திட்டம், புதிய வீராணம் திட்டம், சந்தனக் கடத்தல் வீரப்பன் கதையை முடித்த சகாப்தம், ரவுடிகளின் ராஜ்ஜியத்தை ஒழித்துக் கட்டியது என இப்படிப் பல சாதனைகளைப் படைத்தவர்தான் எங்கள் குல ஒளி விளக்கு, இந்தியாவின் இரும்பு மங்கை, நாடு போற்றும் பெண்ணரசி, உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் உள்ளங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, நாங்கள் வணங்கும் நடமாடுகின்ற தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

'சொன்னதைச் செய்வோம்' என்று தோள் தட்டும் மைனாரிட்டி அரசு, 'முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்கள்' என்ற தலைப்பில் கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையில், தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் பேருந்துக் கட்டணங்கள் இரயில்வே கட்டண அளவிற்குக் குறைக்கப்படும் என்று கூறியதை மறந்துவிட்டு, கலர் டி.வி., இரண்டு ஏக்கர் நிலம் தருவதாகக் கூறி, தி.மு.க.வினருக்கு மட்டும் கொடுத்து, மக்களை ஏமாற்றுகின்றார்கள். இரயில்வே

கட்டணத்திற்கு இணையாக பஸ் கட்டணத்தைக் குறைத்தால் கோடானு கோடி ஏழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள்.

நிலக்கோட்டைத் தொகுதியில் உள்ள பல கிராமங்களின் மக்கள் . விவசாயத் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். மழை பெய்தால் மட்டுமே விவசாயத்திற்கான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சகோதரி தேன்மொழி அவர்கள் பேசும்போது நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள் என்று ஒரு வார்த்தை சொன்னார்கள். நேற்றையதினம் சேப்பாக்கம் தொகுதியிலே நடைபெற்ற வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகின்ற விழாவிலேகூட நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்னையிலே ஒவ்வொரு தொகுதியிலேயும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களுக்கு, யார், யார் அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்ற பட்டியலைப் படித்தபோது, முதலமைச்சர் அவர்கள் இடையிலே தடுத்து நிறுத்தி, அ.தி.மு.க.வினர் யார், யார் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெற்றார்களோ, அவர்களுடைய பெயர்களை எல்லாம் படிக்க வேண்டாம் என்று பெருந்தன்மையோடு கேட்டுக்கொண்டார். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க. என்பதே அல்ல. யாராக இருந்தாலும், யார் குடும்ப அட்டை வைத்திருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுப்பது என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அதில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த பல பேர்களுக்கு நானேகூட வழங்கி, பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள் அம்மா. (குறுக்கீடுகள்) என்னங்க? (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேளுங்கள். முதலில் Subject-ஐப் பேசச் சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செ.ம. வேலுசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, ஒரு கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை வைத்துக்கொண்டிருக்கிற இந்த இயக்கத்தில் உள்ளவர்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதைத் தனியாகப் பிரித்து அமைச்சர் காட்டுகிறாரா? தி.மு.க.காரர்களுக்குப் பெரும்பாலாகக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்களே தவிர, எல்லா மக்களுக்கும் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்களே தவிர, எல்லா மக்களுக்கும் தருவதிலே, ஏழையெளிய மக்களுக்குத் தருவதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அண்ணா தி.மு.க. கட்சிக்காரர்களுக்கு மட்டும்தான் தருகிறோம், நாங்கள் அந்தப் பட்டியலைப் போட்டுக் காட்டுகிறோம், தாங்கள் கௌரவமானவர்கள் என்று சொல்லும்போது, நாங்கள் கேட்கிறோம்; உங்கள் திட்டங்கள் என்ன? உங்கள் திட்டத்தின்மூலம் ஏழையெளிய, வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிற மக்களுக்கு வழங்குகிறீர்களா? அல்லது குறிப்பாக அண்ணா தி.மு.க. என்று சொல்லி, அதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறீர்களா? எங்களைக் கொச்சைப்படுத்துகிறீர்களா என்பதை மட்டும் இந்தச் சபையின்மூலமாக நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா செங்கோட்டையன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, யாரையும் கொச்சைப்படுத்த வேண்டுமென்று எண்ணக்கூடியவர்கள் நாங்கள் அல்ல. நான் சொல்ல வந்தது, மாண்புமிகு அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளெல்லாம் தி.மு.க.காரர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்று சொன்ன காரணத்தினால் நான் குறிப்பிட்டேன். ஆனால், ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய கட்சிக்கு அப்பாற்பட்ட அனைத்து மக்களுக்கும் இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கிறோமே, அதில்கூட அரசியல் கிடையாது. அனைத்து மக்களுக்கும் ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்குத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திருமதி எஸ். தேன்மொழி:** என் தொகுதியில் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த யாருக்கும் கொடுக்கப்படவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செம. வேலுசாமி, திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர் அவையின் நடவடிக்கைகளுக்கு அடிக்கடி இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். எச்சரிக்கையாகச் சொல்கிறேன். பார்த்துக்கொள்ளுங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** நிலக்கோட்டைத் தொகுதியில் உள்ள பல கிராமங்களின் மக்கள் விவசாயத் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். மழை பெய்தால் மட்டுமே விவசாயத்திற்கான நீரைக் கிணறுகளிலிருந்து பெறுகிறார்கள். பல ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய நீராதாரம் இல்லாத காரணத்தால், பிழைப்பிற்காக வெளிமாநிலங்களுக்கு வெளியேறுகின்றார்கள். திண்டுக்கல் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வரும் நீரோடைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட புல்லுவெட்டி கிராமக் கண்மாயிலிருந்து நிலத்தடி நீரைப் பெருக்க கூலம்பட்டி, ஒட்டுப்பட்டி, மெகல்பாளையம் வழியாகப் புதிய வடிகால் வாய்க்கால் அமைத்தால், சுமார் 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும். எனவே, புதிய வடிகால் வாய்க்கால் அமைக்க வேண்டுகிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், குடகனாறு அணையிலிருந்து பிரியும் கூழையாற்றிலிருந்து வரக்கூடிய உபரி நீர் வீணாகிக்கொண்டிருக்கின்றது. எனவே, நிலக்கோட்டை, வத்தலக்குண்டு ஒன்றியங்களிலுள்ள கண்மாய்களுக்கு நீராதாரத்தைப் பெருக்கவும், சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பாசன வசதியைப் பெருக்கி விவசாயம் செய்யவும் தற்பொழுது கால்வாய்கள் இருந்தும் அவை சீர்செய்யப்படாமல் உள்ளன. எனவே, சிமெண்ட் கால்வாய்களை அமைத்து, நீராதாரத்தைப் பெருக்கி, முறைப்படி அந்தந்தக் கண்மாய்களுக்கு நீராதாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுகிறேன்.

நிலக்கோட்டையைச் சேர்ந்த மக்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் வெறும் கானல் நீராகவே இருந்து வருகிறது. சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் எங்கள் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் முடுக்கிவிடப்பட்டுப் பணிகள் நடைபெற்று வந்தன. தற்பொழுது பணிகள் நடைபெறவில்லை. மேலும், சிறுமலை நீர்த்தேக்கத் திட்டப் பணிகளுக்கு ரூபாய் 5.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எங்கள் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மேலும் கூடுதலாக ரூ.3 கோடி அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட திட்டமாகும். குறிப்பாக, விவசாயிகளிடம்



கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு எங்கள் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. இந்தத் திட்டம் முடிவுபெறும் தருணத்தில், தற்பொழுது பணிகள் நடைபெறாமல் உள்ளன. எனவே, சிறுமலை நீர்த்தேக்கத் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுகிறேன்.

கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியான நிலக்கோட்டையில் கலை மற்றும் அறிவியல் ஆண்கள் கல்லூரியும், பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளும் அமைக்க வேண்டுகிறேன். இதேபோன்று, ஏற்கெனவே உள்ள அரசுப் பெண்கள் கல்லூரியில் அரசு விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டைத் தொகுதியில் வத்தலக்குண்டு, விருவீடு பகுதிகளில் தக்காளி மற்றும் முருங்கைக்காய் அதிகமாக விளைவதால், தக்காளி மற்றும் முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டுகிறேன். நிலக்கோட்டையில் மல்லிகைப் பூக்கள் அதிகமாக விளைவதால், சென்ட் தொழிற்சாலை அமைக்க அம்மா அவர்களின் ஆட்சியில் 2005 ஆம் ஆண்டு அறிவித்த திட்டத்தைச் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டைக்கு அருகில் வைகை ஆற்றில் அமைந்துள்ள பேரணைக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். இதுபோன்று, இங்கு பிரசித்திபெற்ற அருள்மிகு வீர ஆஞ்சநேயர் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வருகின்றனர். எனவே, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, பேரணையைச் சுற்றுலா மையமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

முற்பகல் 11–35

கிராமங்களில் மருத்துவ வசதிகள் இல்லாமல், கிராமப்புற மக்கள் நோயின் தன்மை அறியாமல் பலர் இறந்து விடுகின்றனர். எனவே, எதிர்காலத்தில் கிராமப்புற மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மருத்துவக் கல்லூரிகளில் படித்து வெளியேறும் மாணவர்கள் அனைவரும் கட்டாயமாகக் கிராமப்புறங்களில் மருத்துவராகப் பணியாற்ற வேண்டுமென்ற சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

[2007 மார்ச் 28

**திருமதி எஸ். தேன்மொழி:** கடந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்த ஆட்சியில் அறிவித்த பல திட்டங்களையே இன்னும் தொடங்காத நிலையில், போகாத ஊருக்கு வழி காட்டுவதுபோல, ஆயிரம் கோடி, ஐயாயிரம் கோடி என்று வெறும் கையில் முழம் போட்டுக்கொண்டிருக்கின்றீர்கள்.

கடந்த நிதிநிலை அறிக்கையில், சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகரங்களில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வணிக மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று சொன்னீர்கள். அந்தத் திட்டம் இன்னும் அறிவிப்பாகவே உள்ளது. இதுபோலத்தான் தரிசு நிலங்களில் முந்திரிச் சாகுபடி என்று அறிவித்த திட்டமும் அப்படியே உள்ளது.

சட்டம் ஒழுங்கைச் செம்மையாகப் பராமரிப்பதிலும், பயங்கரவாதம் தலைகாட்டாமல் தடுப்பதிலும் இந்த அரசு விழிப்புடன் செயலாற்றி வருவதாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை 12 ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருப்பதைப் படித்தவுடன் சிரிப்புத்தான் வருகிறது. கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நாள்தோறும் நடைபெறுவதைப் பத்திரிகைகளைப் படிக்கும் பொது மக்கள் நன்கு அறிவார்கள். உண்மை நிலை இப்படியிருக்க, சட்டம் ஒழுங்கைச் செம்மையாகப் பராமரித்து வருவதாக உங்களை நீங்களே பாராட்டிக்கொள்வது வேடிக்கையாக உள்ளது.

அதுபோன்று, பயங்கரவாதம் தலைகாட்டாமல் தடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருப்பதும் நகைப்பிற்குரியது. தி.மு.க. ஆட்சி வந்தவுடனேயே விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகரித்துவிட்டது. வெடிகுண்டுகளைக் கடத்தும் காரியங்களும் ஆரம்பித்துவிட்டன. இதற்கெல்லாம் காரணம், பயங்கரவாதிகளுக்கு உங்கள்மீது இருக்கும் நம்பிக்கைதான். நீங்கள் எதுவும் செய்யமாட்டீர்கள், வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பீர்கள் என்று அவர்கள் தெம்பாக இருக்கின்றார்கள். அதுபோல, தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் ரேஷன் அரிசிக் கடத்தல், மணல் கொள்ளை நடைபெறுவது வாடிக்கை. அது இப்போது நடந்துகொண்டிருக்கிறது. விலைவாசி விஷம்போல் ஏறிவிட்டது. புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திரைப்படத்தில், 'இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' என்று பாடினார்கள். இப்போது தமிழ்நாட்டு மக்கள் இந்த ஆட்சியைப் பற்றி இப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கும் இந்த மைனாரிட்டி. . .



2007 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிறது, சீக்கிரம் உரையை முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கும் ** இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சி மீண்டும் எப்பொழுது மலரும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்தியது பொற்கால ஆட்சி, இப்போது நடப்பது கற்கால ஆட்சி. இந்த ஆட்சிக்கு விடை கொடுக்க மக்கள் தயாராகிவிட்டார்கள். விரைவில் வரவிருக்கும் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்கள் இதை நிரூபிக்கும். வரவிருக்கும் புத்தாண்டில் அம்மா அவர்கள்தான் ஆட்சிக்கு வருவார்கள் இது உறுதி, உறுதி என்று கூறி, எனக்குப் பேச வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. இராஜேந்திரன்.

***திரு. ஆ. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் வாழும் தமிழர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவராய், தமிழகத்தினை நல்வழி நடத்திச் செல்கின்ற நம்முடைய தலைவர் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். நம்முடைய மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு வரியில்லா பட்ஜெட்டை இங்கே நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து, நாட்டு மக்களுடைய வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றக்கூடியவிதமாக இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதற்கு உறுதுணையாக நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி அவர்கள் பேசும்போது ** என்று சொன்னார்கள். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*முற்பகல் 11–40*

**திரு. ஆ. இராஜேந்திரன்:** அரசியல் குடும்பத்தில் பிறந்த என்னை, அரசியல்ரீதியாகவே வளர்த்து, உண்மையான தொண்டனாக வளர்த்து, இந்த இயக்கத்திற்கும், தலைவருக்கும், தலைவருடைய குடும்பத்திற்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு என்னை ஆளாக்கிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இன்றைக்கு அனைவருடைய மனதிலும் நீங்காத இடம்பெற்று, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், அவருடைய வழி நின்று, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு எனக்கு வாய்ப்பளித்து. விடைபெற்று, வானிலிருந்து வாழ்த்திக் கொண்டிருக்கக்கூடிய என்னுடைய அன்புச் சகோதரன் செழியன் அவர்களை வணங்கி உரையைத் தொடர்கிறேன். 'அவர் இல்லையென்று சொன்னாலும், இதோ நான் இருக்கிறேன், குடும்பத்தினுடைய மூத்த அண்ணனாக நான் இருக்கிறேன், நீ எதற்கும் கவலைப்படாதே' என்று சொல்லி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பொறுப்பினைத் தந்து, இன்றைக்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக்கி என்னை அழகு பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே சமயத்தில், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட அனைத்துக் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும், எனக்குப் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய சட்டமன்ற கொறடா அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய வீரபாண்டி சட்டமன்றப் பேரவை வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் வாசிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை இன்றைக்குச் சாதாரணமாக ஏழை எளிய பாமரனும் புரிந்துகொள்ளகூடிய அளவிற்கு ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கையாக இங்கே வழங்கியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பக்கம் 74, பத்தி 165–ஐப் படித்துப் பார்த்தால், அது அனைவருக்கும் மிக எளிதாக விளங்கக்கூடியதாக அமைந்திருக்கிறது. அவர்களுடைய உரையில், நம்மால் முடியுமா என்ற நம்பிக்கையைக் குலைக்கும் கேள்விக்குறி எழுமேயானால்,



எவ்வளவுதான் வலிமையுள்ளவர்களாக இருந்தாலும், அவர் மேற்கொள்ளும் செயலில் உறுதி இல்லாதவராக இருந்தால் அவரை உலகம் மதிக்காது.

*"எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு"*

என்ற அந்தக் குறள் வழிகாட்டி ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கையைப் படைத்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில்தான், இன்றைக்கு யாராக இருந்தாலும், விவசாயியாகவோ, நெசவாளராகவோ, வணிகர்களாகவோ, அரசு அலுவலர்களாகவோ அல்லது எந்த வகையிலேனும் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருப்பவர் என்ற முறையில், அவரும், அவரைச் சார்ந்தோர் அனைவரும் வாழ்வில் வளம் பெற்றுத் திகழ்ந்திட இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இசைவோடு நம் இனமானப் பேராசிரியர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள், தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிகளையும், அதேபோல, கடந்த கால ஆட்சியில் பறிக்கப்பட்ட நலத் திட்டங்களையும், அதோடு இன்னும் புதிய பல்வேறு நலத் திட்டங்களையும் இங்கே வாரி வழங்கியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆட்சிப் பொறுப்பையேற்ற, பதவியேற்ற அதே மேடையில், பாரதியாருடைய பாடலை நினைவுபடுத்தக்கூடியவிதமாக,

*"தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடு வோம்"*

என்று பாரதியார் அவர்கள் பாடினார்கள். இன்றைக்கு அந்தப் பாடலை நினைவுபடுத்தக்கூடியவிதமாக, நனவாக்கக்கூடியவிதமாக, தமிழகத்திலே யாராக இருந்தாலும், அது உயர்ந்தவர்களாக, நடுத்தரக் குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களாக, ஏழைப் பாமரர்களாக இருந்தாலும்கூட யாரும் பசியோடு இருக்கக் கூடாது என்ற அந்த நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கருதி, ரேஷன் கடையிலே ஒரு கிலோ அரிசி ரூபாய் இரண்டிற்கு வழங்கிய மாபெரும் தலைவர்தான் இன்றைய தமிழகத்தின் முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கிய பயிர்க் கடன் ஏறத்தாழ 7 ஆயிரம் கோடி ரூபாயை அடியோடு இரத்துச் செய்த தலைவரும் நம்முடைய தலைவர்தான்.

அதேபோல, பள்ளியிலே படிக்கின்ற குழந்தைகளுக்குத் தரமான கல்வி கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அந்தக் குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவு சத்தான உணவாக இருக்க வேண்டும். எனவே, அதனை மனதிலே கொண்டுதான், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற சத்துணவில் வாரம் இரண்டு முட்டை என்று இருந்ததை, இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் மேலும் ஒரு முட்டையைக் கூட்டி, மூன்று முட்டைகளைப் பெருந்தலைவர் காமராஜர் புகழை நினைவுபடுத்தக்கூடியவிதமாக வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய தலைவர், நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோலத்தான், கடந்த ஆட்சியில் எத்தனையோ நலத் திட்டங்கள் பறிக்கப்பட்டன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் ஊக்கத் தொகை, பொங்கல் திருநாளில் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், இலவச வேட்டி, சேலை, படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகை, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊக்கத் தொகை, அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, தொழிலாளர்களுக்கு என்று பல்வேறுதரப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகையும், போனசும் கடந்த ஆட்சியிலே பறிக்கப்பட்டன என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். ஆனால், இன்றைக்கு ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த ஆட்சியில் பறிக்கப்பட்ட நலத் திட்டங்களை மீண்டும் வழங்கியதோடு, இன்றைக்கு அதையெல்லாம் உயர்த்தியும் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதன் அடிப்படையிலேதான் இன்றைக்கு முதியோர் உதவித் தொகை ரூபாய் 200-லிருந்து 400 ரூபாயாக உயர்த்தித் தரப்படுகிறது. ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை ரூபாய் 200-லிருந்து 500 ரூபாயாக உயர்த்தித் தரப்படுகிறது. பொங்கல் திருநாளில் ஏழை எளியவர்களுக்குப் பயன்படக்கூடியவிதத்தில் மீண்டும் இலவச வேட்டி, சேலைத் திட்டம் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது.



*முற்பகல் 11-45*

அது மட்டுமல்ல, ஏற்கெனவே பறிக்கப்பட்ட பல்வேறு சலுகைகளை அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இன்றைக்குத் திருப்பி வழங்கியதோடு, தொழிலாளர்களுக்கு போனஸையும் இந்த அரசு வழங்கி, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றியிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த ஆட்சியில் ஒரு பெண் முதலமைச்சராக இருந்தபோதுகூட, படித்த பெண்ணுக்கு வழங்கப்பட்ட அந்தத் திருமண உதவித் தொகையை நிறுத்தினார்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகையை நிறுத்தினார்கள். ஆனால், இன்றைக்குத் தாய் உள்ளத்தோடு இருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள், படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூபாய் 15 ஆயிரத்தையும், அதேபோல, கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பிரசவக் காலத்திற்கு முன் 3 மாதங்கள், பின் 3 மாதங்கள் என இன்றைக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவிற்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தாய் உள்ளத்தோடு, பெண்கள் தேவையறிந்து, பரிசீலித்து நடைமுறை செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், இவையெல்லாம் கடந்த ஆட்சியில் நிறைவேறாததற்கு என்ன காரணம் என்று சொன்னால், ** என்ற காரணத்தினால், படித்த பெண்களுக்குத் *(மேசையைத் தட்டும் ஒலி)* திருமண உதவித் தொகையையும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவித் தொகையையும் வழங்காமல் விட்டுவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். *(கூச்சல்—குழப்பம்)*

அதேபோல, *1989* ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதோடு, மீண்டும் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில், உழவர்களுடைய நலன் காப்பதற்கு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருளை நேரடியாகக் கொள்முதல் செய்து, கை நிறையப் பணம் ஈட்டக்கூடியவிதமாக உழவர் சந்தை அமைத்துக் கொடுக்கப்பட்டது. உழவர் சந்தை அமைத்ததோடு மட்டுமல்லாமல், உழவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருளை இலவசமாக அரசுப் பேருந்திலே எடுத்துச் சென்று, விவசாயிகள் பயன்படக்கூடிய முறையில் நம்முடைய அரசு நிறைவேற்றித் தந்தது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அது மட்டுமல்ல, முறையாகக் கடனைச் செலுத்தியவர்களுக்கு 7 சதவிகித ஊக்கத் தொகை நம்முடைய கழக அரசால், தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டது என்பதை நான் மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (கூச்சல்–குழப்பம்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் பட்ஜெட் புத்தகத்தைத் தூக்கி வீசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் . . . (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) நான் சொல்கிறேன், கேளுங்கள்—அவை முன்னவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) பொறுங்கள், நான் சொல்கிறேன், முதலில் அவை முன்னவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய . . . குறுக்கீடுகள்)

(அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் இருக்கையைவிட்டு எழுந்து வந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போங்கள். இடத்திலே உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவையிலே எல்லோரும் அவரவர்கள் இடத்தில் உட்காருங்கள், அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன் இல்லையா? போய் உட்காருங்கள், போங்கள். (கூச்சல்–குழப்பம்) திரு. ஜெயக்குமார், நான் சொல்கிறேன். நீங்கள் போங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசிக்கொண்டிருக்கிறார். போங்கள். அவை முன்னவர் பேசிய பிறகு சொல்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசிய வார்த்தையில் ** என்ற அந்த வார்த்தைகளை நீக்கிவிட வேண்டும், அவை மரபுக்கு ஒத்து வராத வார்த்தைகள் அவை. அவற்றை நீக்கிவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து, ** என்கிற வார்த்தை நீக்கப்படுகிறது. (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். போய் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இந்த ** என்கிற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம், நீங்கள் பட்ஜெட் புக்கையெல்லாம் தூக்கி வீசியதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த மாதிரியெல்லாம் நடந்துகொள்ளக் கூடாது. அவையிலே. அது சரியா? அது முறையல்ல. உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். சட்டமன்றத்திலே பட்ஜெட் புக்கைத் தூக்கி வீசுவது முறையா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. இராஜேந்திரன் பேசுங்கள்.

முற்பகல் 11–50

**திரு. ஆ. இராஜேந்திரன்:** இன்றைக்குத் தமிழகத்தினுடைய . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் பேசுகிறார்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இந்த அவையில் 1962–வது ஆண்டிலிருந்து ஆறு முறை சட்டப் பேரவை உறுப்பினராக இருந்து பணியாற்றிக்கொண்டிருப்பவன். அப்போது ஆளுங்கட்சியாக காங்கிரஸ் கட்சி, எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம்; அதேபோல, எம்.ஜி.ஆர். அவர்கள்கூட முதலமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சி வரிசையிலே, மேலவையிலே இருந்து பணியாற்றிய அனுபவம் எல்லாம் பெற்றிருக்கின்றோம். அரசாங்கத்தினுடைய தவறுகளை அல்லது செய்ய வேண்டியதைச் சுட்டிக்காட்டிப் பேசுகின்றபோது, முன்வரிசையிலே இருக்கின்ற அமைச்சர்கள் அதற்குரிய பதிலைத் தந்தால், அப்படிப்பட்ட வாதங்களை எடுத்து வைத்த உறுப்பினர்கள் அதிலே திருப்தி அடையாவிட்டால், விளக்கம் கேட்பதற்குக்கூட இன்னும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை மீண்டும்கூட பேரவைத் தலைவர்கள் தந்திருக்கின்றார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2007 மார்ச் 28

அதற்குப் பின்னாலே அமைச்சர் ஒரு பதிலை, விளக்கத்தைத் தந்துவிட்டால், அந்த அளவோடு அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, அடுத்த பிரச்சினைக்குத்தான் போய் இருக்கின்றார்கள். இன்னொன்று, ஆளுங்கட்சியின் சார்பிலோ, எதிர்க்கட்சியின் சார்பிலோ ஓர் உறுப்பினர் கடுமையாக, அதாவது, பேரவையின் விதிமுறைக்கு உட்படாத வகையிலே கண்ணியக் குறைவாகப் பேசினால், அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று ஓர் உறுப்பினர் அமைதியாக எழுந்து, அதைப் பற்றி எழுப்பலாம். உறுப்பினரேகூட, அதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிடலாம். இல்லாவிட்டால், பேரவைத் தலைவராகிய நீங்கள் அதைப் பார்த்து, இது சட்டமன்ற விதிக்கு உட்பட்டதல்ல, மரபை மீறிய சொல் என்றும், அவையிலே அந்தக் குறிப்பு இடம்பெறக் கூடாது என்றும் தீர்ப்பு அளிக்கின்ற அதிகாரம் முழுமையாக உங்களிடத்திலேதான் இருக்கின்றது. இவற்றையெல்லாம் பெறுவதற்கு அவையினுடைய பேரவைத் தலைவரைப் பார்த்து ஒருவர் கேட்கலாம்; பேரவைத் தலைவர்தான் தீர்ப்பு வழங்கலாம். ஆனால், தொடர்ந்து ஒட்டுமொத்தமாக, பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. விலே இருப்பவர்கள்— முன்வரிசையிலே அவர்களுடைய துணைத் தலைவர் இருக்கிறார், கொறடா இருக்கிறார், மற்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்; பின்வரிசையிலே இருக்கக்கூடிய சில மாமன்ற உறுப்பினர்கள் முன்வரிசைக்கு வந்து சொல்லக்கூடிய வார்த்தைகள், இங்கே record–லே பதிவாகாவிட்டாலும்கூட, எங்களுடைய செவிகளிலே விழுகின்ற அளவிற்குத் தடிப்பான வார்த்தைகளை, ஏதோ அவர்களுக்குத்தான் பேசத் தெரியும், அப்படிப் பேசுவதன்மூலம் எங்களை அடக்கிவிடலாம் என்ற உணர்வோடு அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை இந்த அவையிலே நீங்கள் அனுமதிக்கக் கூடாது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் Sir.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நீங்கள் அனுமதிக்கக் கூடாது. அப்படித் தொடர்ந்து இங்கே இந்தப் பேரவையிலே அது நடைபெறுமானால், தொடர்ந்து அப்படி நடக்கக்கூடிய காரணத்தினாலேதான், அதனுடைய எதிர்விளைவாக இந்தப் பகுதியிலிருந்து சில பேர் பேசுவதற்கும், உணர்ச்சிவசப்படுவதற்கும் அது காரணமாக அமைந்துவிடுகிறது. (குறுக்கீடு) அதைப் பொதுவாகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) பொள்ளாச்சி ஜெயராமன் போன்றவர்கள், அதேபோல கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள், மாண்புமிகு உறுப்பினர்



2007 மார்ச் 28] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

சண்முகம் போன்றவர்கள், இன்னும் சிலர் அப்படிப்பட்ட வார்த்தைகளை, அவர்கள் மற்றவர்களுக்கு உணர்ச்சி ஊட்டக்கூடிய வகையிலே, தூண்டிவிடக்கூடிய, ஆத்திரப்படக்கூடிய அளவிலே வார்த்தைகளை—எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் இருக்கிறார், சொல்கிறோமா? அல்லது கொறடா இருக்கிறார், Point of Order raise செய்கிறார்; சில நேரங்களில் விளக்கம் பெறுவதற்கு அவர் எழுகிறார், ஆனால், அதிலே நாங்கள் ஆத்திரப்படுகிறோமா? முறையாக, அவையினுடைய விதிமுறைகளுக்குட்பட்டு, இந்த அவையிலே வாதத்தை, பிரதிவாதத்தை எடுத்து வைப்பதற்குப் பதிலாக, உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய வகையிலே பிரதான எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் தொடர்ந்து பேசுவது இந்த அவையினுடைய மரபை மீறக்கூடிய செயல். இதற்கு ஒரு கட்டுப்பாட்டினை, விதிமுறைகளை நீங்கள் தெளிவுபடுத்தி, அந்த முறையிலேதான் உறுப்பினர்கள் point of order எழுப்புவதாக இருந்தாலும், clarification பெறுவதாக இருந்தாலும், விளக்கங்களைப் பெறுவதாக இருந்தாலும், அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். இந்தப் பகுதியிலே நாங்களெல்லாம் அமைச்சர்களாக உட்கார்ந்திருக்கிறோம். ஆளுங்கட்சியில் இருக்கின்ற சட்டப் பேரவை உறுப்பினர்களும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். ஆகவே, எங்களைத் தூண்டிவிடக்கூடிய அளவிற்கு, நாங்களே ஆத்திரப்படக்கூடிய அளவிற்கு அவர்கள் நேரடியாக இப்படி வாதத்தைச் சொல்லக் கூடாது. ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் ஓரளவிற்குத்தான் பேரவைத் தலைவருக்குக் கட்டுப்பட்டும், அரசாங்கப் பொறுப்பிலே நாம் இருக்கிறோம் என்றும் இருக்க முடியுமே தவிர, தொடர்ந்து ஏதோ எங்களை அடக்கிவிடுவதைப்போன்ற ஒரு சூழ்நிலையை இந்த அவையிலே உருவாக்குவது கூடாது. (குறுக்கீடுகள்) அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள் சார். கலைராஜன், உட்காருங்கள். பேரவையில் உரையாற்றாமல் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுடைய இருக்கைகளில் இருக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பேரவை விதி 87–லே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள்

உரையாற்றும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள், பேரவை விதி 88 மற்றும் 92 ஆகியவற்றிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாகப் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் சில நேரங்களில் பேரவையின் விதிகளுக்கு மாறாகவும், அவையின் கண்ணியத்திற்கு மாறாகவும் நடந்து, பேரவைத் தலைவரின் அனுமதியின்றி ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று, கூச்சலிட்டுப் பேரவையின் அலுவல்களுக்கு அடிக்கடி இடையூறு செய்கின்றீர்கள். அவையில் நடைபெறும் விவாதத்தில் உறுப்பினர் ஒருவர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது மற்ற உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே, உரையாற்றும் உறுப்பினரை விமர்சனம் செய்வதை வழக்கமாகக்கொண்டிருக்கின்றீர்கள். இதுபோன்ற செயல்கள் பேரவை சுமுகமாக நடைபெறுவதற்கு வழிவகுக்காது. மேலும், பேரவை விதி 88-ன்படிப் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று, அவர் பேசுமாறு அழைத்த பின்னரே பேச வேண்டும். உறுப்பினர் உரையாற்றும்போது பேரவைத் தலைவரை நோக்கிப் பேச வேண்டும். உறுப்பினர்களை நோக்கிப் பேசக் கூடாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையின் மரபையும், கண்ணியத்தையும் காக்கும் வகையில், அவை சுமுகமாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இரண்டு பக்கமும்தான். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இப்போது ஒன்றைப் படித்துக் காட்டினீர்கள். அதை எப்பொழுது நீங்கள் தயாரித்தீர்கள் என்பதுதான் எங்களுக்குத் தெரியவில்லை, ஒன்று. இரண்டாவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். ஏற்கெனவே இருக்கிறது. விதி முன்னாலேயே இருக்கிறது. நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபோதே இந்த விதி இருக்கிறது. அந்த விதியைத்தான் படித்தேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதியை உங்களுக்கு முன்னாலேயே படித்திருக்கிறேன். எங்களுக்கும் விதியெல்லாம் தெரியும். நீங்கள் அதைப் பட்டியல் போட்டு, எதிர்க்கட்சி எல்லாம் இப்படி நடந்துகொண்டிருக்கிறது என்று நீங்கள் சொன்னீர்களே, அதற்குச் சொன்னேனே தவிர, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, உணர்ச்சிவசப்படுகிறார்கள், எங்களுக்கும் உணர்ச்சி இருக்கிறது



என்றெல்லாம் சொன்னார்கள். அவருடைய மகன் பேசியது சரியா என்பதை மட்டும் உங்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அவர் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தினார்? இந்தச் சட்டமன்ற மரபிலே இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. செங்கோட்டையன், உட்காருங்கள். நான் சொல்கிறேன், கேளுங்கள். நீங்கள் முதலில் உட்காருங்கள். ஏதாவது கருத்துச் சொல்ல வேண்டுமானால், உங்கள் கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கு இருக்கிறார். நீங்கள் கொறடா இருக்கிறீர்கள். நீங்கள் இரண்டு பேரும் சொல்லுங்கள். என்ன? மற்றவர்களெல்லாம்—பேசுபவரைத் தவிர, வேறு யாரும்—எப்பொழுதும் இந்த மாதிரிக் குறுக்கீடு செய்யக் கூடாது. நீங்கள் இரண்டு பேரும் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். நீங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கிறீர்கள், நீங்கள், கொறடா இருக்கிறீர்கள். நீங்கள் எழுந்து கருத்தைச் சொல்லுங்கள். நான் அனுமதி தருகிறேன். ஒட்டுமொத்தமாக எல்லோரும் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத மாதிரி எழுந்து நின்று கத்துவது முறையல்ல. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் தரப்பிலே இருக்கின்ற ஆளுங்கட்சி உறுப்பினர் சில வார்த்தைகளை, சபை மரபை மீறிய வார்த்தைகளை, கண்ணியக் குறைவான வார்த்தைகளை இங்கே பேசியதன் அடிப்படையிலேதான் உணர்ச்சிவசப்பட்டோமேயொழிய, மற்றபடி ஒன்றுமில்லை. ஆனால், நடைமுறையை அவை முன்னவர் அவர்கள் எழுந்து சொன்னார், அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டுமென்று. நீங்களும் நீக்கி இருக்கிறீர்கள். அதற்குப் பின்னால், சட்டப் பேரவைத் தலைவர் சில வழிமுறைகளை, விதிமுறைகளைச் சொல்லி, தொகுத்து, அதில் எதிர்க்கட்சிகள் என்று மட்டும் நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் அது பொருந்தும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, அதிலே பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், விதிகள் 87, 88, 92, இவையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் பொருந்தக்கூடியவை.

நண்பகல் 12–00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மறுபடியும் ஒரு முறை அதைப் படித்துக் காட்டினால் நல்லது. ஏனென்றால், அனைவருக்கும் என்றுதான் சொன்னீர்களே தவிர, எதிர்க்கட்சிகளுக்கு என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அனைவருக்கும் என்றுதான் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வது, ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் அது பொருந்தும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் பொருந்தும். உட்காருங்கள். பார்த்தீர்களா? நான் இவ்வளவு சொன்னதற்குப் பிறகும் திரும்ப எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? சொல்லியாகிவிட்டது, உங்களுக்கு மாத்திரம் அல்ல. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் அது பொருந்தும் என்று சொல்லியாகிவிட்டது அல்லவா? உட்காருங்கள். கருத்தைச் சொல்லியாகிவிட்டது நீங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. ஆ. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதெல்லாம் தமிழகத்தினுடைய முதலமைச்சராகக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்கிறாரோ, அது விவசாயிகளாக இருந்தாலும், நெசவாளர்களாக இருந்தாலும், தொழிலாளிகளாக இருந்தாலும், அரசு ஊழியர்களாக இருந்தாலும், அனைவருக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்பட்டன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் அடிப்படையிலேதான், மூன்றாம் முறையாக முதலமைச்சராக இருந்தபொழுது, விவசாயிகளுடைய நலன் காப்பதற்காக இலவச மின்சாரத் திட்டம் வழங்கப்பட்டது. பிறகு இடையிலே ஏற்பட்ட அதி.மு.க. அரசு அதை இரத்துச் செய்த காரணத்தினால், நம்முடைய தலைவர் அவர்களும், மற்ற தோழமைக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களெல்லாம் போராட்டம் நடத்தி, பின்னர் மீண்டும் இலவச மின்சாரம் பெற்றுத் தந்ததோடு, இன்றைக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மீண்டும் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், முன்பு இவ்வளவு நல்ல காரியங்களை, பல்வேறு நலத் திட்டங்களை விவசாயிகளுக்காகச்



செய்திருந்தாலும்கூட விவசாயிகளுடைய வாழ்க்கை இன்னும் ஒளிபெறவில்லை; அவர்கள் இன்னும் துன்பத்தில் இருக்கிறார்கள்; கடனிலிருந்து மீளவில்லை என்பதை உணர்ந்த தலைவர் என்ற காரணத்தால்தான் தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிக்கேற்ப, பொறுப்பேற்ற அதே மேடையில், விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கிய பயிர்க் கடன் ஏறத்தாழ 7 ஆயிரம் கோடி ரூபாயை அடியோடு இரத்துச் செய்த மாபெரும் புரட்சித் தலைவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் அடிப்படையிலேதான், இன்றைக்கு விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ததோடு, கடனில்லாச் சான்றிதழை மாவட்டம்தோறும் ஒவ்வொரு அமைச்சரும் சென்று விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருந்தாலும்கூட, மேலும் விவசாயிகளுடைய வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, பயிர்க் கடன்களுக்கு 7 சதவீதம் வட்டி என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, கடனை முறைப்படி செலுத்தக்கூடிய விவசாயிகளுக்கு, அவர்களை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் வட்டி 5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டு, விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதேபோல, இங்கே பேசிய பலரும் தரிசு நிலங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தரிசு நிலங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்திலே மன்ற உறுப்பினர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு இந்த அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 71,755 பேர்களுக்கு நிலம் வழங்கியிருக்கிறது என்று சொன்னால், எதன் அடிப்படையிலே வழங்கியிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து, சிந்தித்துப் பார்த்து உரையாற்ற வேண்டும். ஏதோ குற்றம் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசின்மீது பழிபோட நினைப்பது எந்தவிதத்திலும் நியாயப்படுத்துவதாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். யார், யாரெல்லாம் தரிசு நிலங்களை உபயோகப்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டு, ஆராய்ந்து, முதலிலே அந்த நிலத்தை உழுதுகொண்டிருப்பவர்களை அந்த நிலத்திற்கு உரிமையாளர்களாக ஆக்கியிருக்கக்கூடிய ஒரே அரசு நம்முடைய கழக அரசு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆ. இராஜேந்திரன்] [2007 மார்ச் 28

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு இராமசாமி பயன்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலத்தைத் திடீரென்று எடுத்து குப்புசாமிக்குக் கொடுப்பது தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அல்ல. யார், எந்த விவசாயி பயன்படுத்துகிறாரோ முதலிலே, அவர் கண்டறியப்பட்டு, அவரை உரிமையாளர் ஆக்க வேண்டும். ஏனென்று சொன்னால், பல ஆண்டு காலமாக நிலம் இருந்தும் அனாதைகளாக இருந்தவர்களுக்கு இன்றைக்குத்தான், இந்த அரசு எடுத்த முயற்சியின் காரணமாகத் தலைவர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த திட்டத்தின் காரணமாகத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்மூலமாக அவர்கள் உரிமையாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த விவசாயிகள் நன்றிக் கடனோடு நம்முடைய தலைவரின் பின்னால் நிற்பார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–05*

அதேபோல, இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பைப் பற்றியும், அரசினுடைய நடவடிக்கை பற்றியும் நமது தமிழக விவசாயிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையிலே இங்கே கருத்துகளை எடுத்து வைத்தார்கள். ஆனால், உண்மை என்னவென்று சொன்னால், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்பும், இப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய நமது ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும்தான் மேட்டூர் அணை நீர் மட்டம் தொடர்ந்து சரித்திரச் சாதனை படைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே பதிய வைக்க விரும்புகின்றேன். ஆனால், இதற்கு முன்னால் இருந்த நிலை என்னவென்று சொன்னால், இன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்தபொழுது, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்களை, முன்னாள் முதல்வர் அவர்களைக் கடவுளின் பெயராலே பாராட்டினார்கள். கடவுளின் பெயரால் பாராட்டியதோடு மட்டுமல்லாமல், பேசியவர்கள் எல்லாம் அன்னை ஆதிபராசக்தியே! என்றும், பல்வேறு கடவுள்களின் பெயரைச் சொல்லிப் பாராட்டிய நேரத்தில், அகண்ட காவிரியே! என்று காவிரியைப் பற்றியும் சொன்ன காரணத்தினால், அன்றைக்கே காவிரி வற்றிவிட்டது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2007 மார்ச் 28] [திரு. ஆ. இராஜேந்திரன்]

அதேபோலத்தான், விவசாயிகளுக்குப் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு நன்மைகள் செய்த நேரத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இலவச மின்சாரத்தைப்போல நெசவாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல் நேரத்தில் தந்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடியவிதமாகத்தான் கைத்தறி நெசவாளர்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரம் 100 யூனிட் வரை, அதேபோல விசைத்தறியாளர்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரம் 500 யூனிட் வரை இலவசம் என்று சட்டமாக்கப்பட்டு, இப்போது இலவசமாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த முறை என்ன நிலைமை என்பதை நான் இந்த மன்றத்திலே பதிய வைக்க விரும்புகின்றேன். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு நெசவாளர்கள் கஷ்டப்படக்கூடிய அளவிற்கு CENVAT வரி போடப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த கட்சித் தலைவர்களும், மத்தியிலே நம்முடைய அரசு அமைந்தால் கட்டாயமாக CENVAT வரி நீக்கப்படும் என்று சொன்னதற்கேற்ப, மத்தியிலே ஆட்சிப் பொறுப்பையேற்ற ஒரு மாத காலத்தில் நெசவாளர்களுக்கு CENVAT வரியை நீக்கி, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி விளக்கேற்றியது நம்முடைய தலைவர் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு இலவச மின்சாரம். ஆனால், கடந்த காலத்தில் அந்த CENVAT வரி போடப்பட்டிருந்தபொழுது, நெசவாளர்களுடைய துயரத்தை அந்த அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று கருதிப் பல்வேறு அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்தியபொழுது, கஞ்சித் தொட்டிகள் திறந்தபொழுது, நெசவாளர்களுடைய துயரத்தை அந்த அரசுக்குத் தெரிவிப்பதன்மூலம் அந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று பல்வேறு நிலைகளில் போர்ராட்டங்களை நடைமுறைப்படுத்தியபொழுது, அன்றைக்கு ஆட்சியில் இருந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் எந்த அளவிற்கு நெசவாளர்களை அவமானப்படுத்தினார்கள், கேவலப்படுத்தினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோல, கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்ட இடங்களுக்கு அருகிலே அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், அன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருந்தவர்கள் சாமியானா போட்டு முட்டையுடன்கூடிய பிரியாணியை உண்டு, நெசவாளர்களை எந்த அளவிற்குக் கேவலப்படுத்தினார்கள், அவமானப்படுத்தினார்கள் என்பதையெல்லாம் இந்த நாட்டு மக்கள்

யாரும் மறந்துவிட முடியாது. அதன் அடிப்படையிலேதான் இன்றைக்கு மீண்டும் நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றவுடன் விவசாயிகளைத் தொடர்ந்து, நெசவாளர்களுக்கும் பல்வேறு சலுகைகள் செய்து இருக்கிறது.

இன்று சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு ஆரோக்கியமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்குச் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளதாலும், நமது முதலமைச்சர் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களின் சிறப்பான செயல்பாடுகளாலும் பன்னாட்டு நிறுவனங்கள் தொழில் தொடங்கத் தமிழகத்தைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதற்கு இதைவிட சிறப்பான உதாரணம் வேறு என்ன வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கழக ஆட்சியில் காவலர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கியதுடன், தேர்தல் வாக்குறுதியில் கூறியவாறு தற்பொழுது தனியாக கமிஷன் அமைத்துள்ளது. அது மட்டுமல்ல; நடப்பு நிதியாண்டு அறிக்கையில் காவல் துறைக்கு ரூ. 2,136 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ளது.

அதேபோலத்தான் உள்ளாட்சித் துறை. இப்போது உள்ளாட்சியிலே நல்லாட்சியை ஏற்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் எந்த அளவிற்கு உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்களை வாரி வழங்கியதோடு, நிதியையும் பங்கிட்டுத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இன்றைக்குத் தமிழகத்திலுள்ள நகராட்சியாக இருந்தாலும், மாநகராட்சியாக இருந்தாலும், அனைத்துப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றித் தரப்பட வேண்டும், கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றித் தரப்பட வேண்டும் என்று அவர் எடுத்த முயற்சியின் காரணமாகத்தான், அனைத்துப் பகுதிகளுக்கும் இப்படிப்பட்ட திட்டங்கள் கிடைத்திருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–10

அதேபோல, தலைவர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, இன்றைக்கு ஆண்களுக்கு நிகராக அவர்களும் வாழ்க்கையில் சம நிலையோடு விளங்குவதற்கும், சுயமாகத் தொழில்



செய்து சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும், ஆண்களை நம்பி ஏமாறாமல் இருப்பதற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு வகைகளிலே மானியங்கள் வழங்கி, அந்தக் குழுக்கள் எல்லாம் சிறப்பாகச் செயல்படுவதற்கு வழிவகை காணப்பட்டிருக்கிறது.

அதேபோலத்தான், சேலத்தைப் பொறுத்தவரை நம்முடைய பெருந்தலைவர் ராஜாஜி அவர்கள் நகராட்சி மன்றத் தலைவராக இருந்த காலத்திலிருந்து இன்று வரை எடுத்துப் பார்த்தால், முன்பு சேலம் மாநகராட்சி எந்த அளவிற்கும் விரிவாக்கம் செய்யப்படவில்லை. ஆனால், நான்காவது முறையாக நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள் இருந்தபோதுதான், சேலம் மாவட்டத்திற்கு என்று பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்பட்டன. குறிப்பாகச் சொல்லப்பட வேண்டுமென்று சொன்னால், கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் சரி, திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டமாக இருந்தாலும் சரி, 4 கோடி ரூபாயிலே மருத்துவமனையாக இருந்தாலும் சரி அல்லது scan போன்ற பல்வேறு வசதிகளாக இருந்தாலும் சரி அல்லது பெரியார் பல்கலைக்கழகமாக இருந்தாலும் சரி அல்லது இன்னும் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களாக இருந்தாலும் சரி, கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அவை நிறைவேற்றித் தரப்பட்டன. அதன் அடிப்படையிலேதான், இப்போது ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், மத்திய அமைச்சர்களுடைய உதவிகளோடும், அதேபோல, அவருடைய சீரிய முயற்சியினாலும், இன்றைக்கு சேலம் மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக ஒருங்கிணைந்த கட்டடம் ஏறத்தாழ 26 கோடி ரூபாய் அளவிலும், அதேபோல, ரூபாய் 130 கோடி அளவிலே super speciality மருத்துவமனையும், அதேபோல, இரயில்வே கோட்டமும், மேட்டூர் அரசுக் கலைக் கல்லூரியும், கூட்டுக் குடிநீர்த் திட்டமும் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. எனவே, அப்படிப்பட்ட முதல்வருக்கு நாங்கள் மீண்டும் ஒரு முறை சேலம் மாவட்ட மக்களின் சார்பாக எங்களுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

அதேபோல, இன்றைக்கு விமான நிலையங்களானாலும் தொழிற்சாலையானாலும், தேசிய நெடுஞ்சாலைகளானாலும், மாநில நெடுஞ்சாலைகளானாலும், மத்தியிலே நம்முடைய அமைச்சர்கள் சகோதரர் மாண்புமிகு தயாநிதிமாறன் அவர்களும், அண்ணன் டி.ஆர். பாலு அவர்களும், முன்னாள் அமைச்சர் டி.ஜி. வெங்கட்ராமன்

அவர்களும், மறைந்த அண்ணன் தா. கிருட்டிணன் அவர்களும், முன்பு மாநில நெடுஞ்சாலைத் துறைக்கும் பொறுப்பேற்ற மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களும் . . . (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ஆ. இராஜேந்திரன்:** இப்போது மாநில நெடுஞ்சாலைத் துறைப் பொறுப்பேற்றிருக்கிற அண்ணன் சாமிநாதன் அவர்களும் எடுத்துக்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாகத்தான் பல்வேறு விரிவாக்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதன் காரணமாகத்தான், இன்றைக்கு சாலையிலே நாம் சொகுசாகப் போகிறோம். விமானங்களிலே ஏறி நாம் பறந்து, வெளிநாடுகளுக்குச் செல்கிறோம். இப்படியெல்லாம் நாம் பல ஆயிரம் மக்களுடைய நிலங்களை எடுத்து விரிவாக்கம் செய்த காரணத்தினால்தான், இப்படிப்பட்ட சலுகைகளை எல்லாம் நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, ஒன்றை மட்டும் நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்றபோது, இந்த பட்ஜெட் வெறும் நாமம் போடக்கூடிய பட்ஜெட் என்றும், நாமக்கட்டி, விபூதிக்கு மட்டும்தான் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்திலே குறிப்பிடுவது, அதே பக்கத்தில் பல்வேறு பொருட்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த அளவிற்குச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு மண்ணெண்ணெய் ஸ்டவ்வாக இருந்தாலும் சரி, விதைகளாக இருந்தாலும் சரி, செயற்கை வைரங்களாக இருந்தாலும் சரி, கோதுமையாக இருந்தாலும் சரி, மரவள்ளிக் கிழங்காக இருந்தாலும் சரி, நோய் அறிவதற்கான சோதனைக் கருவிகளாக இருந்தாலும் சரி, அதேபோல, நெசவாளர் இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்களாக இருந்தாலும் சரி, இன்றைக்கு அனைத்திற்கும் வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டு, இந்த அரசு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், இதையெல்லாம் மறைத்துப் பேசக்கூடிய . . . (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் சார். பேசி முடியுங்கள், இராஜேந்திரன்.



**திரு. ஆ. இராஜேந்திரன்:** முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான். நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன். ஆக, இவ்வளவு நலத் திட்டங்களை வழங்கியபோதும், இதையெல்லாம் கண்டுகொள்ளாமல், இந்த அரசு பட்டை நாமம் போடக்கூடிய அரசு என்று சொல்லக்கூடியவர்கள், பேசக்கூடியவர்கள்தான் இன்றைக்குப் பட்டை நாமம் போடக்கூடியவர்களாக இருக்கின்ற காரணத்தினால்தான், இந்த நாட்டு மக்கள் நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும், அதையடுத்து உள்ளாட்சி அமைப்புத் தேர்தலிலும் அவர்களுக்குப் பட்டை நாமம் போட்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒரு தாயின் பிரசவ வேதனையைப்போல, அனைத்து வரிகளையும் இந்த அரசின் முதலமைச்சரே ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு ஒரு வரியில்லாத பட்ஜெட்டை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த பட்ஜெட்டைப் பாராட்டுவதைவிட வேறு எதுவும் இருக்க முடியாது என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வேல்முருகன் அவர்கள் உரையாற்றும்போது ** என்கிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். ** என்கிற அந்த வார்த்தையை ஆதி திராவிடர் என்று மாற்றி அமைத்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடிந்துவிட்டது.

*பிற்பகல் 12–15*

## 4. அறிவிப்பு

### பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 9–4–2007 திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை 10–4–2007 செவ்வாய்க்கிழமை அன்றும், 10–4–2007 செவ்வாய்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை 9–4–2007 திங்கட்கிழமை அன்றும் எடுத்துக்கொள்ளப்படும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதேபோன்று, 7–5–2007 திங்கட்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகியவை 8–5–2007 செவ்வாய்க்கிழமை அன்றும், 8–5–2007 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை), மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) ஆகியவை 7–5–2007 திங்கட்கிழமை அன்றும் பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது விவாதம் தொடர்கிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

***திருமதி பெ. கமலாம்பாள்:** ஐந்தாவது முறையாக அரியணை ஏறிய, அஞ்சுகம் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களே, இந்தப் பேரவையிலே பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பெண் விடுதலைக்குப் போராடுகின்ற பெண் உரிமைக் காவலர், சமூக நீதிப் போராளி, மலை குலைந்தாலும் நிலை குலையாத மக்கள் காவலர், பெண் உரிமைக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தியாகச் செம்மல், தலைவர் கோ.க. மணி அவர்களே, உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)*

மக்கள் தொகையிலும், வாக்கு உரிமையிலும் சரிபாதியாக உள்ளவர்கள் பெண்கள்.

*"மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல*
*மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!"*

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அன்று பாடியுள்ளார். இப்படிப் பெண்களைப் போற்றினார்கள். அது மட்டுமல்ல, நாம்



பேசும் மொழி தமிழ், நாம் வசிக்கும் நாடு தாய் நாடு. நதிகளுக்கெல்லாம் பெண்களின் பெயர்களைச் சூட்டினார்கள். கங்கை, யமுனா, கோதாவரி, சரஸ்வதி, பவானி, காவிரி என்று அழைத்தார்கள். இயற்கையை அன்னை என்றார்கள். கல்விக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும் பெண்கள் பெயர்களைச் சூட்டினார்கள். இப்படி எல்லாம் அன்று பெண்களைப் போற்றினார்கள், மதித்தார்கள், புகழ்ந்தார்கள். ஆனால், இன்றோ, அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு, அரசியல் எதற்கு, இட ஒதுக்கீடு எதற்கு என்று கேட்கிறார்கள்? 30 சதவிகிதம் பெண்களுக்குக் கேட்டுக் கோரிக்கையை எத்தனை முறை பேசினாலும் (குறுக்கீடு) அதுதான். 33 சதவிகிதம் பெண்களுக்குக் கேட்டுக் கோரிக்கையை எத்தனை முறை பேசினாலும், ஒத்த கருத்தை ஏற்படுத்த முடியவில்லை என்று மத்தியில் உள்ள தலைவர்கள் சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்று கேட்டால், அலை எப்போது ஓய்வது, எப்போது நாம் குளிப்பது என்பதுபோல் இருக்கிறது. அலை எப்போது ஓயப் போகிறது, நமக்கு எங்கே 33 சதவிகிதம் கிடைக்கப் போகிறது என்ற நிலையில்தான் இன்னும் இருக்கிறது. கொடுக்கமாட்டார்கள். அந்த உரிமையை நாமே எடுத்துக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே நம்முடைய கலைஞர் அவர்கள்கூட உணர்வோடு மகளிர்மீது பாசம் வைத்து, பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என்று மகளிர் அணியைத் திரட்டி, 33 சதவிகிதத்தை வலியுறுத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) பேரணி நடத்தினார்.

*பிற்பகல் 12–20*

அதேபோல எங்களுடைய பா.ம.க. தலைவர் அவர்கள் அதை வரவேற்றார், உளப்பூர்வமாக வரவேற்றார்; போற்றினார்; அது பற்றி என்னிடத்தில் சொன்னார்; அதுபோல நீங்கள் எல்லாம் செய்ய வேண்டுமென்று சொன்னார். நான் காஞ்சிபுரத்திலே அந்தப் பணியைச் செய்தேன். அதேபோலப் பெண் உரிமைக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் அதனை முக்கியமாகக் கருதுவதால், மகளிரைக்கொண்டு மருத்துவர் அய்யா ஆணைப்படி 33 சதவிகிதத்தை வலியுறுத்தி சென்ற ஆட்சியிலே நாங்களெல்லாம் டெல்லியிலே ஆர்ப்பாட்டம் செய்தோம். ஆனால், இன்னும் அந்தப் பலனை நாங்கள் அனுபவிக்காமல் தவித்துக்கொண்டிருக்கிறோம். பெண்கள் இந்த நாட்டின் கண்கள். விழிப்புணர்வு உள்ள பெண்கள், படித்த பெண்கள் உள்ள நாடு வளர்ந்த நாடாக, சிறந்த நாடாக விளங்குகிறது.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற நிலை மாறி வருகின்றது. அடுப்படியில் அடக்கப்பட்டு, அடிமையாக்கப்பட்டு

வாழ்நாள் முழுவதும் சம்பளம் இல்லாத வேலைக்காரியாக இருந்து வரும் பெண்களின் இழிநிலை மாறி, அரசியலிலும், ஆட்சிப் பொறுப்பிலும், உள்ளாட்சியிலும், அரசு நிர்வாகத்திலும், தனியார் நிர்வாகத்திலும் பங்கேற்று வருவது மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த நிலை மேன்மேலும் மாற வேண்டும், வளர வேண்டும் என்பது பெண்களின் எதிர்பார்ப்பு. பா.ம.க. மகளிர் அணியினர் இதற்குப் பல்வேறு வகைகளில் குரல் கொடுத்து வருகின்றார்கள், எங்கள் அய்யா ஆணைப்படி. எங்கள் பெண் உரிமைக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் இது குறித்து இதுவரை 15,000–க்கும் மேற்பட்ட பெண்களுக்குப் பயிற்சி கொடுத்து, மகளிர் மேம்பாட்டுக்குப் புத்துயிர் ஊட்டி வருகின்றார். சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் வற்புறுத்துகிற மாதிரி, எங்கும், எதிலும், எல்லா நிலைகளிலும் பெண்களுக்குச் சம உரிமை, சம வாய்ப்பு, சம அந்தஸ்து, சம பங்கு கொடுக்க வேண்டும். இதுவே பெண் உரிமைக்கான வழியாகும். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் சிறுபான்மையினப் பெண்கள் உயர் கல்விக்குச் சிறப்பு முன்னுரிமை வாய்ப்பு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, மது. இதுதான் எனக்கு மிகவும் மன வருத்தத்தை அளிக்கின்றது. ஏனென்றால், இந்த மதுவினால் கஷ்டப்படும் பெண்களின் அவல நிலை எங்கள் குடும்பத்திலேயும் இருந்தது. எங்கள் அப்பா நிறையக் குடித்து செத்தே போய்விட்டார், எங்களையெல்லாம் நடுத் தெருவிலே விட்டுவிட்டு. நாங்கள் எல்லாம் எப்படியோ படித்து முன்னேறி, இந்த அவையிலே பேசுகின்ற அளவிலே எங்கள் அய்யாவும், எங்கள் அம்மாவும் என்னை இந்த நிலையிலே வைத்திருக்கிறார்கள், அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மது அருந்துவதால் குடும்பங்களுக்கு ஏற்படும் பாதிப்பு, அதிலும் குடிப் பழக்கத்தால் கணவனை இழந்த விதவைப் பெண்களின் அவல நிலை, விதவைப் பெண்களின் குழந்தைகள் கல்வி பாதிப்பு என்றுள்ள பெண்களின் நிலைகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணராதவர் இல்லை. எனவே, பெண்களின் கண்ணீரைத் துடைக்க டாஸ்மாக் கடைகளைப் படிப்படியாக மூடி, அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனப் பெண்கள் சார்பிலும், பா.ம.க. சார்பிலும் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கின்றோம். அதே நேரத்தில், காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஊர்ப் பெரியவர்கள், இளைஞர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின்



ஒத்துழைப்போடு கள்ளச் சாராயத்தை உடனடியாக அறவே ஒழிக்க வேண்டும். இதில் கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமெனப் பா.ம.க. சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினை. காஞ்சிபுரம் என்றாலே, நம்முடைய பேரறிஞர் அண்ணாதான் நமக்கு நினைவுக்கு வருவார் முதலில். காஞ்சிபுரம் என்றாலே, அடுத்தது பட்டு நினைவுக்கு வரும். அதற்குமேலே காஞ்சிபுரம் என்றாலே, கோயில்கள். அதற்குமேலே ஏரிகள் நிறைந்த ஊர், இவையெல்லாம் உதாரணங்கள். இதிலே காஞ்சிபுரம் பட்டுக்குப் பெயர் போனது. ஆனால், அந்தப் புகழ்பெற்ற பட்டு, இப்போது பட்டுப் போய்விட்டது. அதனால் நெசவாளர் குடும்பங்கள் துன்பத்திற்கு ஆளாகிவிட்டார்கள். கூட்டுறவு வங்கியில் அவர்களுடைய கடனைக் கட்ட முடியாமல் நடுத் தெருவிலே நிற்கின்ற அவல நிலைக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். அதனால் கருணைகூர்ந்து முதல்வர் அவர்கள் அந்தக் கடனை இரத்துச் செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ததுபோல, காஞ்சிபுரம் தொகுதியில் நெசவாளர்கள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று கனிவோடு கேட்டுக்கொள்கிறேன். தூய சரிகைக்கு 4 சதவிகிதம் வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–25

அடுத்து, இரண்டாவது பிரச்சினை, பெரிய பிரச்சினை, மருத்துவமனைப் பிரச்சினை. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இருக்கிறார். காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம் ஒரு சிறந்த தலைநகரமாக இருக்கிறது. அதைச் சுற்றி அந்தப் பக்கம் செய்யாறு, இந்தப் பக்கம் அரக்கோணத்தில் இருந்தெல்லாம் காஞ்சிபுரம் பெரிய ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள். காஞ்சிபுரம் நகரத்தைச் சுற்றி எல்லாக் கிராமங்களிலிருந்தும் ஐந்தாயிரத்திற்கும்மேல் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகிறார்கள். ஆனால், அங்கே போதிய மருத்துவர்கள் இல்லை. வெளியூரிலிருந்து, கன்னியாகுமரியிலிருந்து இங்கே நியமிக்கிறார்கள், அவர்களும் வருகிறார்கள். இங்கே போட்டவுடனே இரண்டு நாட்களில் திரும்ப அதே மந்திரிகளின் சிபாரிசு பெற்றுப் போய்விடுகிறார்கள். திரும்ப இன்னொரு மந்திரி சிபாரிசால் வருகிறார்கள்; திரும்பவும் போய்விடுகிறார்கள். அதனால் 30 பேர் என்பது 15 பேர்களாகி, ஐந்தாயிரம் பேர் அங்கே வைத்தியம் பார்க்க முடியாமல் நிலைகுலைந்து நிற்கிறார்கள். அந்த நிலை மாற வேண்டும்.

மந்திரிக்கே தெரியும். அவ்வப்போது என்னைப் பார்த்தாலே, ஐயோ அந்த அம்மா ஏதோ சொல்லப் போகிறது என்று இப்படி, அப்படித் திரும்பிக்கொள்வார். என்னைத் துரத்திக்கொண்டே வருகிறார் என்று சொல்வார். அதனால், போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், கருவிகள் மற்றும் கட்டடங்கள் இல்லாததால், ஏழையெளிய மக்கள் பெரிதும் பாதிப்படைகிறார்கள். இதைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும்.

அண்ணா புற்றுநோய் மருத்துவமனையிலே எங்களுடைய மருத்துவர் சின்ன அய்யாமூலமாகத் தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கின்ற அளவிலே அங்கே அதிநவீனக் கருவிகள் வந்துவிட்டபடியால் கருவிகளை வைப்பதற்குப் போதிய கட்டடங்கள் இல்லை. அதனால் போர்க்கால அடிப்படையில், கருவிகள் கெட்டுவிடாமல் இருக்க அரசு நிதி ஒதுக்கி, கட்டடங்கள் கட்டித் தர முன்வர வேண்டும்.

காஞ்சிபுரம் தொகுதியைச் சுற்றியுள்ள சுகாதார நிலையங்கள் அனைத்திற்கும் மக்கள் சென்று வருகின்றனர். ஆனால், அங்கே போதிய அளவு மருத்துவர்களும், செவிலியர்களும் இல்லாததால் மக்கள் துன்பம் அடைகின்றனர். திருப்புட்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்கும், பிரசவம் பார்ப்பதற்கும் போதிய அளவு வசதி இருந்தும், நீர் இல்லாத காரணத்தினால் அறுவை சிகிச்சை நிறுத்தப்பட்டுள்ளது. அதனால் இப்பகுதியிலிருந்து அறுவை சிகிச்சை செய்வதற்காகக் காஞ்சிபுரம் தலைமை மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறார்கள். திருப்புட்குழி சுகாதார நிலையத்தில் மருத்துவர்களும், செவிலியர்களும் தங்குவதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். பழைய கட்டடம் பழுதடைந்து, அதிலே பாம்புப் புற்றுதான் இருக்கிறது. அதைப் போய் நான் பார்த்துவிட்டும் வந்தேன். அமைச்சர் அவர்கள் அதைப் பார்க்க வேண்டும்.

ஆர்ப்பாக்கம் சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பில் செவிலியர்கள் தங்குவது இல்லை. ஏனென்றால், அங்கு கட்டடம் பழுதடைந்து, செடி, மரங்கள் எல்லாம் வளர்ந்து புதராக இருக்கிறது. அதனால் உடனே அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்க்கத் தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் வரலாற்றுச் சிறப்பு மிக்க அண்ணா பிறந்த ஊர். அதேபோல் எனக்குக் கொஞ்சம் கூடுதலாக 5 நிமிடங்கள் கொடுங்கள், எனது தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு என எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.





போக்குவரத்துத் துறை. காஞ்சிபுரம் முதல் சென்னை வரை போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க 76B, 76C, 79 ஆகிய வழித்தடப் பேருந்துகளைக் கூடுதலாக இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து உயர் கல்வி கற்று வருகின்ற மாணவ, மாணவிகள் வந்து செல்வதற்கு ஏதுவாகக் காலையிலும், மாலையிலும் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க வேண்டும். காஞ்சிபுரத்திலிருந்து பெங்களூருக்கு அதிக அளவில் பட்டு சரிகை வியாபாரிகள் சென்று வருகின்றனர். அதனால் பெங்களூருக்குப் பேருந்து இயக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம், கோயில்கள் அதிகம் உள்ள நகரம். அங்கிருந்து கும்பகோணம், தஞ்சாவூர் கோயில்களுக்குப் போக வேண்டும். பக்தர்கள் கும்பகோணத்தில் 9 நவக்கிரகக் கோயில்களையும், தஞ்சைப் பெரிய கோயிலையும் பார்ப்பதற்குச் சென்று, வர ஒன்றிரண்டு பஸ்கள் கொடுக்க வேண்டும். வந்தது என்று சொன்னார்கள். எனக்குத் தெரியவில்லை, என்ன நிலை என்று. அதைப் பற்றிப் பிறகு சொல்ல வேண்டும்.

காஞ்சிபுரம் தலைமைப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு பொன்னேரிக்கரையில் இடம் ஒதுக்கியும், கட்டாமல் தள்ளிப் போவது வருந்தத்தக்கது. உடனடியாகத் தலைமைப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வர வேண்டும். பொன்னேரிக்கரையில் வெளியூர்ப் பேருந்துகள் வந்து செல்வதற்கும், காஞ்சிபுரம் மக்கள் வெளியூர் செல்வதற்கும் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

*பிற்பகல் 12–30*

இது முக்கியமான கோரிக்கை. மாநிலத்திலேயே மகளிர் சுய உதவிக் குழுக்கள் அதிகமாக உள்ள தொகுதி காஞ்சிபுரம் தொகுதியாகும். அதனால், சுய உதவிக் குழுக்கள், பெண்கள் குழுவிற்கு சிறு, சிறு தொழிற்கூடம் அமைத்துப் பயிற்சியளித்து, வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும்.

அதேபோல, பட்டு நெசவுத் தொழில் நலிவடைந்துவிட்ட காரணத்தால், அங்கே அவர்களுக்கு மாற்றுத் தொழிலாக . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உறுப்பினர், உரையை முடித்துக்கொள்ளுங்கள். பாக்கியை அப்புறம் பேசலாம்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** அவர்களுக்கு வேலை கொடுத்துப் பயிற்சியளித்து, வேலைவாய்ப்பைத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** கொஞ்சம் இருங்கள் அய்யா.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உரையை முடித்துவிடுங்கள். பாக்கியை அப்புறம் பேசலாம்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** அடுத்து, ஏரிகள் மற்றும் குளங்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏரி, குளம் உள்ள பகுதிகளில் எல்லாம் இப்போது மழை பெய்யாமல் வறண்டுவிட்டதனால், அங்கே குடிநீர்த் தட்டுப்பாடு ...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன் அவர்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** குடிநீர்த் தட்டுப்பாடு. மக்களுக்கும், கால்நடைகளுக்கும் குடிநீர்த் தட்டுப்பாடெல்லாம் இருப்பதனாலே, அங்கேயுள்ள ஏரிகளையெல்லாம் தூர் வாரி, அவற்றைச் செப்பனிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீதிமன்றம். காஞ்சிபுரம் தொகுதியிலே மகளிர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மண்ணில் அண்ணா பெயரில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் அரசுக் கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். (குறுக்கீடுகள்) உரையை முடித்துவிடுகிறேன்.

காஞ்சிபுரத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கைலாசநாதர் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், காமாட்சியம்மன் கோயில் எல்லாம் இருப்பதனாலே அங்கே வெளிநாட்டினர்கள் எல்லாம் வருகிறார்கள். பக்தர்கள் தங்குவதற்கு அங்கே இலவசத் தங்கும் விடுதிகள் கட்டித் தர அரசு முன்வர வேண்டும்.

காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த 50 ஆண்டு காலமாகப் பலர் குடுகுடுப்பைத் தொழில் செய்கிறார்கள். அவர்களெல்லாம் படிக்கவில்லை. (குறுக்கீடு) இதோ முடிந்துபோய்விட்டது அய்யா. எல்லாப் பிள்ளைகளும் படிக்கிறார்கள்; எங்கள் பிள்ளைகளெல்லாம் படிக்கவில்லையே என அவர்கள் ...



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** அதனால் அவர்கள் தங்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கக் கேட்டுக்கொண்டார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உரையை முடியுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** அவர்களோடு நானும் அந்த மண்ணிலேயே உட்கார்ந்துகொண்டு பட்டினிப் போராட்டத்தில் கலந்துகொண்டேன். அதனால் அவர்களுக்கு உடனடியாக நீங்கள் சாதிச் சான்றிதழ் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டு ...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உரையை முடியுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன் அவர்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அருமைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, தலைவர் இருக்கிறார்; வருவார். (குறுக்கீடுகள்) தலைவர் வருவார். (குறுக்கீடுகள்) சென்னை நகரத்திலே கடந்த 37 ஆண்டு காலமாக இருப்பவன் நான். சென்னை நகரம் 37 ஆண்டுகளுக்கு முன்னாலே எப்படியிருந்தது என்பது பல மூத்த உறுப்பினர்களுக்குத் தெரியும். வயது குறைந்த உறுப்பினர்களுக்கு எந்த அளவுக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியாது. ஏன் இதை நான் முதலிலேயே குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், தமிழகத்தைச் சுற்றியிருக்கின்ற 3 மாநிலங்கள், ஆந்திரா, கர்நாடகா, கேரளா. சென்னை நகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினைக்கு பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாயைத் தமிழக சர்க்கார் செலவழித்து வருகிறது.

கிருஷ்ணா நதி நீர். கிருஷ்ணா நதி நீர் என்று சொன்னாலே, சென்னைக்குக் குடிநீர்த் திட்டம் என்று பொருள். காவிரி என்று சொல்கின்றபோது, விவசாயத்திற்காகக் கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் என்று பொருள். முல்லை பெரியாறு அணை என்று வருகின்றபோது கேரளாவிலிருந்து தமிழகத்திற்கு, விவசாயத்திற்குத் தண்ணீர் என்று பொருள். இப்படித் தண்ணீர்ப் பிரச்சினையிலே தமிழகத்தினுடைய நிலையை 1967–க்கு முன்பு, 1967–க்குப் பின்பு என்று பார்க்கின்றபோது, நிலைமைகள் மாறி, மாற்றப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம், மாறி, மாறி, திராவிட இயக்கங்கள் நீங்கள்தான், நாங்கள்தான் என்று சொல்லிவிட்டு, கடைசியிலே டெல்லியைக் கையைக் காண்பிப்பீர்கள். இங்கே ஏற்பட்டதுபோல டெல்லியிலே பல ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தச் சூழ்நிலைகள் வருகின்றபோது, இங்கே அளிக்கப்படுகின்ற பட்ஜெட்டை 11 ஆண்டு காலமாக இந்த அவையிலே நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–35

நான் மூன்றாவது முறை சட்டமன்ற உறுப்பினர். இன்றைக்கு இங்கே 44,532 கோடியே 28 இலட்சம் ரூபாய் வரவு என்றும், 44,633 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவு என்றும், 101 கோடியே 38 இலட்சம் ரூபாய் பற்றாக்குறை என்றும், புதிய வரிகளே போடாமல் பல நல்ல திட்டங்களை, நல்ல பணிகளை அறிவித்துச் செயல்பட்டு வருகின்ற தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மக்கள் பாராட்டுகிறார்கள். ஏன், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்கூட மனதளவிலே பாராட்டுகிறார்கள்; வெளியே பாராட்ட முடியாத சூழ்நிலை. அதற்குக் காரணம், காலையிலேகூட அவையிலே ஒரு பிரச்சினையை உருவாக்கினார்கள். இந்தக் கட்சிக்குத்தான் டி.வி. கொடுக்கிறார்கள், அந்தக் கட்சிக்குத்தான் டி.வி. கொடுக்கிறார்கள் என்பது இல்லை. கிராமப்புறங்களிலே குடும்ப அட்டை யார் வைத்துக்கொண்டு இருக்கிறார்களோ, அத்தனை பேருக்கும் அந்த டி.வி.–யும், gas அடுப்புகளும் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதுதான் உண்மை. அங்கே காங்கிரஸ் கிடையாது. P.M.K. கிடையாது. A.D.M.K. கிடையாது, D.M.K. கிடையாது, கம்யூனிஸ்ட்டு கிடையாது, எந்த ஜாதிக் கட்சிகளும் கிடையாது. அந்தக் கிராமத்திலே ரேஷன் கடையிலே குடும்ப அட்டை இருக்குமானால், அவர்களுக்கு இவை எல்லாம் போய்ச் சேர்ந்துகொண்டு இருக்கின்றன. இதுதான் உண்மை. யதார்த்தமான உண்மை. இந்த





உண்மைகளையெல்லாம் புரிந்துகொண்டு, இன்றைக்கு நாம் என்ன பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிற வேளையிலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

குடிநீருக்கு இன்றைக்குப் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் சென்னை நகரத்திற்கு மட்டும் நாம் செலவழித்துக்கொண்டிருக்கின்ற வேளையிலே, வேறொரு திட்டம் ஒன்றை இன்றைக்குச் சொல்கிறோம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் சென்னைக்கு என்று. நான் கேட்க விரும்புகிறேன், 37 ஆண்டுகளாக நான் சென்னை நகரத்தைப் பார்த்தவன். சென்னை நகரத்திலே இருக்கின்ற எல்லா வீதிகளிலும் நான் நடந்து பார்த்தவன். எனக்கு நன்கு தெரியும், ஒரு திட்டத்தை இந்த அரசு அறிவிக்கிறது. என்ன திட்டம்? வடபுலத்திலே உள்ள பொன்னேரி வரையிலே, சென்னையிலேயிருந்து 50 கிலோ மீட்டர், அதுவரையிலே இன்றைக்குச் சென்னை நகரம் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. திருவள்ளூர் வரை 55 கிலோ மீட்டர் சென்னை நகரம் விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. மேற்கே ஸ்ரீபெரும்புதூர் வரை 45 கிலோ மீட்டர் சென்னை நகரம் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. தெற்கே செங்கல்பட்டு வரை 55 கிலோ மீட்டர் சென்னை நகரம் இன்றைக்கு விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும்கூட, நாம் எல்லாம் காலையில் வருகின்றபோது, எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிந்த உண்மைதான், சென்னை நகரத்திலே குறிப்பிட்ட நேரத்தில் இந்த அவைக்கு வர முடிகிறதா? நெரிச்சல். குறிப்பிட்ட நேரத்திலே மருத்துவமனைக்குச் செல்ல முடிகிறதா? (குறுக்கீடுகள்) நெரிச்சல். குழந்தைகளைப் பள்ளிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்திலே அழைத்துச் செல்ல முடிகிறதா? நெரிச்சல், (சிரிப்பு) இப்படி இட நெருக்கடி இருக்கின்ற நேரத்தில் (குறுக்கீடுகள்) எங்கள் பக்கத்தில் North Arcot–ல் சொல்வது நெரிச்சல், நெரிச்சல் என்றால் நெரிசல் என்று அர்த்தம், எரிச்சல் அல்ல. Rush என்பது நெரிசல்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** நெரிச்சல் இல்லை. நெரிசல்.

**திரு. போளூர் ம. வரதன்:** ஆகவே, இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில்கொண்டுதான் கலைஞர் அரசு புதிய நகரத்தை உருவாக்குவோம் என்று சொன்னீர்கள். அந்தப் புதிய நகரம் இன்றைக்குக் கைவிடப்பட்டதனுடைய விளைவாக, சென்னை நகரம் மேலும் எங்கே போய்க்கொண்டு இருக்கும் எதிர்காலத்தில்

என்பதை நாம் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்குச் சிலருடைய அபிலாசைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காக வேண்டுமானால் தற்காலிகமாக அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டு இருக்கலாம். ஆனால், எதிர்காலத்திலே சென்னை நகரத்தினுடைய நிலைப்பாடு என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதில் நாம் தவறுகிறோம் என்று சொன்னால், வருங்காலச் சந்ததியர்கள் இந்த அவையிலே இருப்பவர்களை என்ன நினைப்பார்கள் என்ற எண்ணத்தை உங்களுக்கே நான் விட்டுவிடுகிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். எங்கள் அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் 1991–ல் இந்தத் தமிழ் மண்ணை நம்பி வந்தார்கள். என்ன செய்தார்கள் என்று எண்ணிப் பாருங்கள். தீவிரவாதம் என்பது 1983–லே தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தீவிரவாதம் நமக்குப் பிடிக்காத நாட்டிலே இருந்தாலும்கூட, தீவிரவாதிகள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நமக்குப் பிடிக்காத நாட்டில் அது இருக்கட்டும் என்று சொன்னால், என்றேனும் ஒரு நாள் அந்தத் தீவிரவாதம் நம்மையும் தாக்கும் என்பதுதானே உண்மை? இந்த மண்ணை நம்பி வந்த ராஜீவ் காந்தி அவர்களை என்ன செய்தார்கள்? எண்ணிப் பாருங்கள்.

பிற்பகல் 12–40

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் தீவிரவாத அமைப்புகளுக்கு உடந்தை. நேற்றுக்கூடத் திருவான்மியூரிலே ஒரு ஓட்டலிலே ஒரு இலங்கைத் தீவிரவாதி தங்கியிருந்தான். 7 இலட்சம் ரூபாய்க்கான பொருட்களைப் பிடித்திருக்கிறோம் என்று காவல் துறையினர் அறிவிக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், நம்முடைய காவல் துறை ஸ்காட்லாந்து போலீசுக்கு இணையான போலீஸ் என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு நிலைமைகள் என்ன? மும்பையிலிருந்து குண்டுகள் தயாரிக்கக்கூடிய மூலப்பொருட்கள் தமிழகத்தின் வழியாக இலங்கைக்குச் செல்கின்றன. எப்படி நம்முடைய காவல் துறை இதைக் கண்டும், காணாமலும் இருக்கிறது? இதற்கு யார் பொறுப்பு? காவல் துறையிலே இருக்கின்ற சில அதிகாரிகளுடைய தவறான போக்கும், தவறான வழிகாட்டுதலும்தான். தமிழ் மண்ணிலே இன்றைக்குத் தீவிரவாதம் தலைதூக்கிக்கொண்டிருக்கிறது. அதை அடக்குவதற்கு ஒரு நல்ல தலைமை என்பது இன்றைக்குத் தமிழகத்திலே கிடைத்திருக்கிறது.



கலைஞர் அவர்கள் சொன்னார்கள். தமிழ் மண்ணிலே எந்தத் தீவிரவாத அமைப்பையும் நான் அனுமதிக்கமாட்டேன். எந்த வழியிலே, எந்தத் துறையிலே, எந்த நிலையிலே வந்தாலும் என்னுடைய அரசு அதைத் தடுத்து நிறுத்தும் என்று சொன்னார்கள். இன்றைக்கு வேறொன்றையும் பார்க்க வேண்டும். தீவிரவாத அமைப்புகள் என்று வருகின்றபோது, தமிழர், தமிழர் என்று பேசுகிறோம்.

நான் கேட்க விரும்புகிறேன், நான் என்ன தமிழன் இல்லாமல் ஆந்திரார்க்காரனா? ஆந்திராக்காரன்கூட இந்தியாகாரன் தானே? (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய மண்ணில் பிறந்தவர்கள்தானே? நான் பேசுவது தமிழ்தான். நான் தமிழன் இல்லையா? சிலோனிலே பாதிக்கப்படுகின்ற தமிழர்களுக்கு நாம் பாதுகாப்புக் கொடுப்பதிலே தவறில்லை. தமிழன் என்ற உணர்வோடு, தீவிரவாதத்தை வைத்துக்கொண்டு இந்த மண்ணையும், அண்டை நாடுகளையும் அச்சுறுத்துவது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு செயல் அல்ல. ஒப்புக்கொள்ள முடியாது. வேண்டுமானால், அவர்கள் கொடுக்கின்ற பணத்திற்கு சிலர் அடிமையாகலாம். ஆனால், சிலர் பயத்தின் காரணமாகக்கூட அடிமையாகி, அவர்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். அதை இந்த அரசு அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதிக்குமேயானால் (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத் தமிழகம் ஒரு இருண்ட பூமியாக மாறுமே தவிர, ஒரு நல்ல ஆரோக்கியமான, ஜனநாயக அமைப்புள்ள நாடாக, மாநிலமாக இருக்காது என்பதுதானே உண்மை?

இன்றைக்கு வேறொன்றையும் பாருங்கள். காலையிலே பேப்பரைத் தூக்கினால், எங்கே பார்த்தாலும் கொலை, கொள்ளை. (மேசையைத் தட்டும் ஒலி) மன்னிக்க வேண்டும். நீங்கள் கை தட்டுவதற்காக நான் சொல்லவில்லை. உங்கள் ஆட்சிக் காலத்திலேயும்தான் இவை இருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) நான் பேசுவதை நீங்கள் கேட்டுவிட்டுக் கை தட்டுங்கள். கைத்தட்டல் பெற வேணடும் என்பதற்காக நான் பேசவில்லை. என்னுடைய உள்ளத்திலே இருக்கின்ற உணர்வுகளை, உண்மையைப் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) அந்த உண்மையை யார் பேசினாலும் வரவேற்க வேண்டும் நீங்கள். நான் சொல்வது, உங்கள் காலத்திலே துவங்கப்பட்ட அந்தச் செயல்கள் இன்று தொடர்ந்துகொண்டிருக்கின்றனவே, ஏன்? (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

*அரிசிக் கடத்தல் என்று சொல்கின்றபோது, இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் நல்ல திறமையான ஒரு அமைச்சர். இன்றைக்கு அரிசியைப் பிடிப்பதனாலேதானே வெளி உலகத்திற்குத் தெரிகிறது? உங்கள் ஆட்சிக் காலத்திலே அரிசி கடத்தவில்லையா கேரளாவிற்கு? போகவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) ரெக்கார்டு இருக்கிறது. வெளியே வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். அரசு கஜானா ரெக்கார்டிலே, அரிசி கடத்தியவர்கள் யார், வண்டி நம்பர் என்ன, என்பது அந்தந்த டி.எஸ்.ஓ., அந்தந்த மாவட்டத்தினுடைய நிர்வாகத்திலே குறிப்பிட்டு வைத்திருக்கிறார்கள். வேண்டுமானால், அரசு விரும்பினால் படிக்கட்டும். இல்லை என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)* I am not yielding.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** *அவர் பேசி முடித்துவிடட்டும் (குறுக்கீடு) இல்லை, அவர் பேசி முடித்துவிடட்டும்.*

**திரு. போளூர் ம. வரதன்:** Sir, I am not yielding. *அவர் ஒரு மூத்த உறுப்பினர், அமைச்சராக இருந்தவர். அவருக்கு அது தெரியும்.* I am not yielding. *(குறுக்கீடுகள்) செங்கோட்டையன் அண்ணே! நான் யாரையும் குறை சொல்லவில்லை. நான் பொதுவாகச் சொல்கிறேன். உங்கள்மீதோ, அவர்கள்மீதோ எனக்கு ஒன்றும் பெரிய பாசமும் இல்லை; விரோதமும் இல்லை. நான் தேசியவாதி. (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையைப் பேசுகிறேன். அந்த உண்மை என்ன? அரிசிக் கடத்தல். பேசுகிறோம். 2 ரூபாய்க்கு அரிசி கொடுக்கும்போது குறை சொல்கிறோம். 3½ ரூபாய்க்கு அரிசி இருந்தபோதும் அரிசியைக் கடத்தினார்கள். இன்றைக்கு 2 ரூபாய் இருக்கும்போது அரிசியைக் கடத்தியவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் எந்தக் கட்சி? இன்றைக்குப் பல இடங்களிலே அரெஸ்ட் செய்திருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள்? வெளியிடட்டும் சர்க்கார். மக்கள் கேட்கிறார்கள். நான் மட்டும் கேட்கவில்லை. இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டும்கூட—ஒன்றைத் தெளிவாக கலைஞர் அரசு நல்ல முடிவாக எடுத்திருக்கிறது. அந்த முடிவினுடைய விளைவுகள் என்ன என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*பிற்பகல் 12–45*

*ஒரு நல்ல நிர்வாகம் என்பதற்குப் பொருள், சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி பண்ணினார்கள். அப்படித்*



*தள்ளுபடி பண்ணிய பின்னாலேகூட கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் பல்வேறு நிலைகளிலே நலிந்து போய் இருந்தன. நமது அமைச்சர் என்ன பண்ணினார்? அதுவும் எனக்கு வேண்டிய ஒரு நண்பர் சொன்னார். அதனால்தான் எனக்கும் தெரிகிறது. அவர் ஒரு தெலுங்கர்—நாயுடுகாரு. தெலுங்கு வருடப் பிறப்பு அன்றைக்கு முதலமைச்சர் கோட்டைக்கு வந்திருக்கிறார். உணவு அமைச்சரும் இங்கு வந்திருக்கிறார். தெலுங்கு வருடப் பிறப்பின்போது அவர்கள் வீட்டில் தெலுங்கு வருடப் பிறப்பு கொண்டாடியிருக்கலாம். காலையில் வந்தவர் மாலை வரையில் கூட்டுறவுச் சங்கத்தினுடைய*—societies, unions *தலைவர்களை எல்லாம் கூப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். பேசி, அந்த உணர்வுகளின் அடிப்படையில், இன்றைக்குத் தமிழகத்தில் 4 மண்டலங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.*

*கோவை, மதுரை, திருச்சி, சென்னை என்று 4 மண்டலங்களாகப் பிரித்து, அந்த அதிகாரிகளை—பதிவாளர், இணைப் பதிவாளர், மற்ற அதிகாரிகளையெல்லாம் அழைத்து, குறைகள் என்ன, மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்று ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். இதுவரையில் காங்கிரஸ் ஆட்சி நடத்தியதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இதுவரையில் இருந்த அரசுகளில் எந்த அரசும் செய்யாத வகையில், இப்படி 4 மண்டலங்களாகப் பிரித்து, கூட்டுறவு சொசைட்டித் தேர்தலை நடத்துவது எப்படி, (குறுக்கீடு) கூட்டுறவு நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவது எப்படி, கூட்டுறவு நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கின்ற நலிவைச் சரி செய்வது எப்படி என்று ஆய்வு நடத்தி, கூட்டுறவுத் தேர்தலை ஜூன், ஜூலையில் நடத்தப் போகிறோம் என்று* declare *செய்திருக்கிறீர்கள், வரவேற்கிறேன். ஆனால், ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். மாறி, மாறி, நீங்கள் இரண்டு கட்சிக்காரர்களும் 30, 40 வருடமாக ஆட்சியில் இருந்துவிட்டு, இந்த சொசைட்டி உறுப்பினர்களாக,* members *ஆக ஆக்கி வைத்திருக்கிறீர்கள். காங்கிரஸ்காரர்களோ,* P.M.K. *காரர்களோ, கம்யூனிஸ்ட்காரர்களோ, மற்ற கட்சிக்காரர்களோ அதில்* member *இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகம் என்பது என்ன? கூட்டுறவுத் தேர்தல் என்று வருகின்றபொழுது, எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். என்னை மாதிரி * ஆதி திராவிட இனத்தில் இருப்பவர்கள் அதில் இருக்க முடியாது. ஏனென்றால் நிறையப் பேர்—99 சதவீதம் நிலம் இல்லாத கூலிகள், விவசாயக் கூலிகள். நாங்கள் தேர்தலில் ஓட்டுப் போடுவோம், ஜெயிப்போம் என்ற நம்பிக்கை எனக்கு இன்றும் இல்லை.*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

இருந்தாலும், பலர் அந்த வாய்ப்பைப் பெறாமல் இருக்கிறார்கள். நீங்கள் கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்துகின்றபொழுது மீண்டும் அந்தக் கூட்டுறவு society–களில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துத் தேர்தல் நடத்துவதுதான் முறை என்று நான் எண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உயர் நீதிமன்றத்தால் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற judgement–ல் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று கேட்டீர்கள் என்றால், பழைய உறுப்பினர்களை வைத்துக்கொண்டுதான் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. எனவே, தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று சொன்னால், உயர் நீதிமன்றத்தின் ஆணைக்குட்பட்டுத்தான் இப்பொழுது தேர்தல்கள் நடத்த முடியும். தேர்தல்கள் நடந்த பின்பு, புதியதாக ஆங்காங்கு குழுத் தலைவர்கள், கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவர்கள்—தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், நகர வங்கிகள், மாவட்ட வங்கிகள், மத்திய வங்கிகள் ஆகியவற்றின் தேர்தல்கள் நடந்த பின்புதான் புதிய உறுப்பினர்களை இப்பொழுது இருக்கிற நிலைப்பாட்டிலே சேர்க்க முடியும். எனவே, இப்பொழுது புதிய உறுப்பினர்களைச் சேர்த்துத் தேர்தல் நடத்தினால், மீண்டும் வழக்கு மன்றத்திற்குச் சென்று contempt of court என்று வந்துவிடும். அதனால்தான் சொல்கிறேன், பழைய உறுப்பினர்களை வைத்துக்கொண்டுதான் இப்பொழுது தேர்தல் நடத்த முடியும்.

**திரு. போளூர் ம. வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** பொது மக்களுடைய உணர்வுகளை நான் பிரதிபலிக்கிறேன் அவ்வளவுதான்.

அடுத்து, தாட்கோ. தாட்கோவில் இன்றைக்கு ஒரு உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன். *(கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடு)*

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் என்ன சொல்லப் போகிறார்? இதிலே ஒன்றும் Point of Order இல்லை. *(குறுக்கீடு)*

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ வழக்கு மன்றத்திலே தீர்ப்பு இருப்பதைக் குறிப்பிட்டார்கள். அந்தத் தீர்ப்பு 2001 ஆம் ஆண்டு நிலைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பு. இப்பொழுது 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது புதியதாக உறுப்பினர்கள் சேர்ப்பதைப் பற்றி எந்த முடிவு வேண்டுமென்றாலும் கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்துக்கொள்ளத்தக்க ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ளலாம் என்றும் இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியினுடைய சட்டமன்ற உறப்பினர்களாக இருந்தபொழுது முதன்முதலாகத் தேர்தலிலே, கூட்டுறவுத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தீர்களே, எப்போது நடத்தப் போகிறீர்கள் என்று தொடர்ந்து 5 ஆண்டு காலம் கேட்டோம். இதே மாண்புமிகு உறுப்பினர் அப்போது அமைச்சராக இருந்தார். இந்தப் பகுதியிலே உட்கார்ந்துகொண்டு சொன்னார், Court–லே வழக்கு இருக்கிறது, அதனால் எங்களால் தேர்தல் நடத்த முடியவில்லை என்று தொடர்ந்து சொன்னார்கள். அதோடு மட்டுமல்ல, அப்போதுதான் இறுதியாகச் சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்தது. பழைய உறுப்பினர்களை வைத்துக்கொண்டு நீங்கள் தேர்தல் நடத்தலாம், புதியதாக உறுப்பினர்களைச் சேர்க்கக் கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வந்தது.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து இவர்கள் Supreme Court–க்குப் போனார்கள். தங்களுடைய கட்சி உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிற அடிப்படையில்தான் அவர்கள் Supreme Court–க்குப் போனார்கள். தேர்தல் அறிக்கையிலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். நாங்கள் ஆட்சிக்கு வருகிறபோது கூட்டுறவுச் சங்கத் தேர்தலை உடனடியாக நடத்துவோம் என்று சொன்னோம். ஆகவே, உச்ச நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய appeal என்பது இதற்குத் தடையாக

இருந்துவிடக் கூடாது என்கிற காரணத்திற்காக, உச்ச நீதிமன்றத்தில் இருக்கிற appeal–ஐ நாங்கள் withdraw செய்துகொண்டு, வாபஸ் பெற்றுக்கொண்டு, இப்போது இருக்கிற பழைய உறுப்பினர்களை வைத்துக்கொண்டு முறையாக, ஜனநாயகரீதியாக நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு இந்தத் தேர்தலை நடத்தும்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன். (குறுக்கீடுகள்) Not allowed. Detailed explanation கொடுத்துவிட்டார். உட்காருங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், உட்காருங்கள். திரு. வரதன், சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தாட்கோ நிறுவனத்தைப் பற்றி என்னுடைய கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். தாட்கோ என்பது முழுக்க, முழுக்க *ஆதி திராவிட மக்களுடைய வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு. இன்றைக்கு மாநில சர்க்கார் இந்த பட்ஜெட்டிலே 25 கோடி ரூபாயும் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ** என்கிற வார்த்தையை use பண்ணியிருக்கிறார். அதை 'ஆதி திராவிட' என்று மாற்றிக் கொள்ளுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** மைய அரசின் சார்பிலே 45 கோடி ரூபாயும் ஒதுக்கி தாட்கோ நிறுவனத்தின்மூலமாக ஆதி திராவிட மக்கள் பயன்பெறுகின்றவிதத்திலே, தொழில் துவங்குகின்றவிதத்திலே இன்றைக்கு அந்தத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல. இங்கே ஆதி திராவிடர் நலத் துறையினுடைய மானியத்திலே ஒதுக்கப்படுகின்ற தொகையில் 70 சதவீதத் தொகை கல்விக்காகச் செலவிடப்படுகின்றது. 30 per cent தான் இதரப் பணிகள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அப்படி 70 per cent நீங்கள் கல்விக்காகச் செலவிடுகின்றபோது, ஆதி திராவிட மக்களின் கல்வியினுடைய தரம் என்ன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே மாண்புமிகு கல்வித் துறையினுடைய அமைச்சர்கள் இருவர் இருக்கிறார்கள். அதிலே உயர் கல்வித் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு அண்ணன் பொன்முடி அவர்கள் பேராசிரியராக இருந்தவர். பல துறைகளிலே அமைச்சராக இருந்தவர். Ph.D. படித்தவர். அவர்கள் இதை உன்னிப்பாகச் சற்றுக் கவனித்து, அந்த ஆதி திராவிட மக்களுடைய குறைகளைப் போக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். இப்போது ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் என்று தனியாகக் கல்வி நிலையங்கள் வைத்திருக்கிறீர்கள். ஒரு காலத்திலே ஆதி திராவிட மக்களை சாதி இந்துக்களோடு பள்ளிகளில் சேர்ப்பதில்லை, படிக்க வைப்பதில்லை. ஆகவே ... (குறுக்கீடுகள்)

**திரு. சி.வி. சண்முகம்:** நிதிநிலை அறிக்கையிலேயே பத்தி நான்கிலே அந்த வார்த்தை உள்ளது. (குறுக்கீடு)

(திரு. தி. வேல்முருகன் அரசாணை நகல் ஒன்றை அவையில் காண்பித்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், அந்த G.O.-வைக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், உட்காருங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**திரு. போளூர் ம. வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு கேளுங்களேன் சார். நான் common ஆகத்தான் பேசுகிறேன்; யாரையும் attack பண்ணிப் பேசவில்லை. (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால் (குறுக்கீடு) இது ஒரு சாதாரண விஷயம் சார். அப்படிச் சொல்வதோ, ஆதி திராவிடர் என்று சொல்வதோ, ஒன்றும் பிரச்சினை இல்லை. அது ஒரு பெரிய மாற்றம் இல்லை. (குறுக்கீடு) இருக்கலாம். (குறுக்கீடு) இல்லை, அந்த book print ஆகியிருக்கலாம். அது (குறுக்கீடு) Correction-தானே? அதில் ஒன்றும் பெரிய தவறு இல்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், திரு. சி.வி. சண்முகம், இரண்டு பேரும் அமைதியாக உட்காருங்கள். அவர் பேசட்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** இன்றைக்குச் சாதாரணப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்குக் கிடைக்கின்ற அந்தக் கல்வியினுடைய தரம் ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை. காரணம், மற்ற பள்ளிகளில்— இன்றைக்குக்கூட நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். 24 ஆயிரம் ஆசிரியர்களை நியமித்திருக்கிறீர்கள். ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகளிலே எத்தனை ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள் என்று பார்த்தால், இல்லை. பல ஊர்களிலே ஆசிரியர்களே இல்லாத ஆதி திராவிடர் பள்ளி இருக்கிறது. அந்தக் குழந்தைகளுக்கு என்ன படிப்புக் கிடைக்கும்? கிடைக்காது. நான் கூறுவதெல்லாம், அரசினிடத்திலே எடுத்துக் கூறுவது எல்லாம், சாதியக் கொடுமைகள் இன்றைக்குக் குறைந்திருக்கின்றன. மறைந்துவிட்டன என்று சொல்ல முடியாது, குறைந்திருக்கின்றன. அதைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, Middle School வரைக்கும் வேண்டுமென்றால், ஆதி திராவிடர் பள்ளி இருக்கலாம். Ninth–லேயிருந்து +2 வரைக்கும் ஆதி திராவிடர் பள்ளிகளில் இருக்கின்ற அந்தக் குழந்தைகளை common education–ல் கொண்டு போனால், அந்த ஆதி திராவிட மக்களுடைய குழந்தைகள் நல்ல படிப்பைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்களேகூடச் சொல்லியிருக்கிறீர்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற நல்ல மதிப்பெண் எடுக்கக்கூடிய ஆதி திராவிடக் குழந்தைகளை நல்ல பள்ளியிலே சேர்த்து, 10 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய எல்லாச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒட்டுமொத்தமாக ஆதி திராவிடர் நலப் பள்ளிகளிலே எட்டாம் வகுப்பு வரைக்கும் வைத்துவிட்டு, அதற்கு மேலே இருக்கிற பள்ளிகளைப் பொதுக் கல்வி நிறுவனங்களில் இணைத்து, அந்தக் குழந்தைகளுக்கும் நல்ல கல்வியைத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

அது மட்டுமல்ல, எல்லா உறுப்பினர்களும் பேசும்போது ஒன்று சொன்னார்கள். அண்ணன் பொன்முடி அவர்களுக்கு நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்து மாவட்டத்துக்காரர். எங்கள் மாவட்டத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) வயதுக்கு அல்ல. இரண்டு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன; ஒன்று செய்யாறு, இன்னொன்று திருவண்ணாமலை. திருவண்ணாமலை மாவட்டம் என்பது கல்வியிலேயும் கடைசி இடம், தொழில் வளத்திலேயும்



கடைசி இடம். Dry area. (குறுக்கீடு) இல்லை, எல்லாமே dry area. யார் ஆட்சிக்கு வந்தாலும் சொல்வது இதுதான். கவனிப்போம், கவனிப்போம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டீர்கள். அப்போதும்தான் நான் அதைக் கேட்டிருக்கிறேன். கடந்த ஆட்சியிலேகூட 5 வருடம் திருப்பித் திருப்பிக் கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. இப்போது நான் கேட்பது, அந்தத் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஒரு கலைக் கல்லூரியை நீங்கள் கொடுக்க வேண்டும். ஒரு கோடி ரூபாய் கேட்காதீர்கள். அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் ஏழைகள். வறுமைக் கோட்டிற்குக்கீழே இருப்பவர்கள். அதைக் கருத்தில்கொண்டு அந்த மாவட்டத்திற்கு ஒரு கலைக் கல்லூரியை நீங்கள் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினைக்கு வருகிறேன். என்னுடைய தொகுதியிலே 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஒரு G.H. செங்கத்திலே இருக்கிறது. நான் ஏற்கெனவே நம்முடைய அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். ஆறேழு மாதங்களாக அங்கே Government hospital-ல் டாக்டரே கிடையாது; 2 டாக்டர்களை deputation-ல் ஆரணியிலிருந்து போட்டிருக்கிறார்கள். என்றைக்கோ வருகிறார்கள், போய்விடுகிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையத்திலேயும், ஆஸ்பிட்டலிலேயும் டாக்டர்கள் கிடையாது. அங்கே ஒரு பாதிப்பு ஏற்படுகிறது என்று சொன்னால். . .

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஒரு பத்து மாவட்டங்களிலே டாக்டர்கள் போட்டாலும் போவதில்லை. போய் join பண்ணியவுடன் leave போடுகிற மாவட்டங்களிலே உங்கள் மாவட்டமும் ஒன்று. இப்போது டாக்டர்களுக்கான counselling–ஐப் பார்த்தீர்களென்றால், 10 மாவட்டங்களுக்கு மட்டும் நடத்தியிருக்கிறோம், மீதி மாவட்டங்களையெல்லாம் விட்டுவிட்டு. நீங்கள் குறிப்பிட்ட திருவண்ணாமலை மாவட்டத்தையெல்லாம் சேர்த்து 10 மாவட்டங்களிலேதான் counselling நடந்திருக்கிறது. இந்த counselling-ல் 30 ஆம் தேதிக்குள்ளே join பண்ணாதவர்களை oust பண்ணி, மீண்டும் புதியவர்களை நாங்கள் போடச் சொல்லியிருக்கிறோம். வேறு மாவட்டங்களுக்கு posting போடவில்லை. 475 பேரைப் புதிதாகப் போடச் சொல்லி முதலமைச்சர் எங்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். அந்த 475 பேரை இந்த 10 மாவட்டங்களிலேதான் போடுகிறோம்.

**திரு. போளூர் ம. வரதன்:** என்னுடைய கோரிக்கை என்னவென்றால், அங்கே இருப்பது ஒரே ஒரு ஆஸ்பிட்டல்தான். தாலுகாவிலேயே என்னுடைய தொகுதிக்கும், நம்முடைய உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சருடைய தொகுதிக்கும் சேர்த்து ஒரே ஆஸ்பிட்டல் அதுதான், இரண்டு தொகுதிகளுக்கு. என்னுடைய தொகுதி மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கிற பகுதி—*ஆதி திராவிட மக்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிற மக்கள் வாழ்கிற பகுதி. பஸ்ஸுக்குக்கூட காசு இல்லாத ஜனங்கள். அங்கேயிருந்து வர வேண்டுமென்றால், 35, 40 கிலோ மீட்டர் திருவண்ணாமலைக்கு வந்தால்தான் ... (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன் சார். ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், இன்னும் இரண்டு பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. போளூர் ம. வரதன்:** முடித்துக்கொள்கிறேன், சார். இடையிலே இரண்டு மந்திரிகள் குறுக்கிட்டிருக்கிறார்கள். அதை உங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள். என்னைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இருக்கட்டும். உரையை முடியுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** இல்லை, இல்லை. தயவுபண்ணி எனக்கு இன்னும் ஒரு ஐந்து நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இருக்கட்டும். நீங்கள் உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. போளூர் ம. வரதன்:** அதனாலே அந்த மக்களுடைய நலன் கருதி, நீங்கள் விரைவிலே அங்கே டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சார், என்னுடைய தொகுதிக் கோரிக்கையைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். கலைராஜன், என்னுடைய தொகுதிக் கோரிக்கையைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அப்புறம் பேசுங்கள். ஏற்கெனவே நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வருகின்றபோது, இரண்டு மேம்பாலங்கள் வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருந்தேன். காரணம், மழைக் காலங்களிலே அந்தப் பகுதி, செய்யாற்றின் பகுதி, அந்தக் கிராமங்கள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



துண்டிக்கப்படுகின்றன. ஒன்று, கொட்டக்குளம். தரைப் பாலம் அது. மழைக் காலங்களிலே அந்தப் பகுதியிலேயிருந்து யாரும் வெளியே வர முடியாது. ஆகவே, அங்கு ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று நான் ஏற்கெனவே அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவர்களும் சம்மதித்திருக்கிறார்கள். அதே மாதிரி, ஒரவந்தவாடி என்ற ஒரு ஊர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலிருந்தே போளூர் வரதன் கொஞ்சம் puzzle ஆகியிருக்கிறார் என்று நினைக்கிறேன். ஏனென்றால், பொன்முடியைப் பார்த்து, நீங்கள் ரொம்ப நல்லவர், படித்தவர், நல்ல பிஎச்டி. ஆனால், அந்த * ஆதி திராவிட நலப் பள்ளிகளிலே எப்படியிருக்கிறது என்றார். அவர் சொல்ல வேண்டிய மந்திரி தென்னரசு. அவரை விட்டுவிட்டு, கோரிக்கையை இவரிடம் வைத்தார். இப்போது பாலம் கட்ட வேண்டியவர் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. சாமிநாதன். அவரை விட்டு எனக்கு வைக்கிறீர்கள். கொஞ்சம் விடுங்கள். (சிரிப்பு)

**திரு. போளூர் ம. வரதன்:** இல்லை, இல்லை. துரைமுருகன் அண்ணனிடம் நான் சொல்வதற்குக் காரணம், மாணவப் பருவத்திலிருந்து என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கல்வித் துறை அமைச்சர் இந்த முறைதான் எனக்குப் பழக்கம். அண்ணன் பொன்முடி அப்படியல்ல. எனக்கு ரொம்ப காலமாகப் பழக்கம். நான் சொல்வதற்குக் காரணம், துறை எதுவாக இருந்தாலும், மாறுபட்டிருந்தாலும், கல்வி என்று வருகின்றபோது கல்வியாளர்களைப் பார்த்துத்தான் கேட்டேன். உங்களிலே இருவரிலே, இரு அமைச்சர்கள் இருந்தாலும். . .

பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் நான் கல்வியாளர் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகின்றாரா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் த்வறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. என்னுடைய கோரிக்கை என்பது, உயர் கல்வியா அல்லது பள்ளி, கல்லூரிக் கல்வியா என்று பார்க்கின்றபோது, நான் இருவரையும் ஒரே தட்டில்தான் பார்க்கிறேன். அதில் எந்தக் கருத்து மாற்றமும் எனக்கில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கு இன்றைக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை; இன்றைக்கு அவர் ஏதாவது ஒரு வம்பை வளர்க்க வேண்டும். (சிரிப்பு) அதற்கு நான்தான் கிடைத்தேன்போலிருக்கிறது. (சிரிப்பு) ஓரவந்தவாடியிலே bridge. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன் Sir, ஓரவந்தவாடியிலே ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல; பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல பட்ஜெட்டை (குறுக்கீடு) ஜால்ரா இல்லை. ஜால்ரா போட்டு எனக்கொன்றும் ஆகப் போவதில்லை. உங்களுடைய ஆட்சியில்கூட நான் எந்த மந்திரியிடமும் போய் எதற்காகவும் நின்றவன் கிடையாது. இன்றைக்கும் எந்த அமைச்சரிடமும் போய்க் கை நீட்டி நிற்கப் போகிற ஆள் நானில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஜால்ரா என்பது உங்களுக்குப் பயன்படுமே தவிர, எனக்குப் பயன்படாது. யாராக இருந்தாலும், நேருக்கு நேராக, முகத்தில் அடித்தாற்போல் உண்மையைப் பேசுகின்றவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குப் பயப்படுபவன் நான் அல்ல, கலைராஜன். உங்களுக்கும் என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனாலே ஜால்ரா என்ற வார்த்தை எனக்கு வராது. உண்மையைச் சொல்கிறேன்; உண்மையைப் பேசுகின்றபோது, குறுக்கீடுகள் வந்தால், அதற்கு வருத்தப்படுவன் நான் இல்லை.

ஒன்றை இறுதியாகச் சொல்கிறேன்; நல்ல பட்ஜெட். கடந்த 5 ஆண்டுகள் எதிர்க்கட்சித் தலைவராகப் பேராசிரியர் அவர்கள் இருந்தபோது, அவரோடு இந்தச் சட்டமன்றத்திலே நான் இருந்திருக்கிறேன். அவர்களைப் .பற்றி நான் நன்கு அறிந்தவன். சட்டமன்றத்திலே அவரோடு 5 ஆண்டுகள் பணியாற்றுகிறபோது, எதிர்க்கட்சியிலே இருக்கின்றபோது உங்களுக்குச் சில அறிவுரைகளை அவர் எப்படி வழங்கினாரோ, அதே அறிவுரைகளைத்தான் இன்றைக்கும் அவர்கள் வழங்குகிறார்கள். ஒரு பழுத்த அரசியல்வாதி; இந்த அவையிலே இருக்கின்றவர்களில் வயதிலே மூத்த உறுப்பினர். அவர் கொண்டு வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை பாராட்டுதலுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, தன்மானமிக்க ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை என்பதை உணர்கிறேன்.



இந்த அவையிலே 1957–லேயிருந்து 2007 வரை, இந்தியத் திருநாட்டிலே 50 ஆண்டுகள் மக்கள் மன்றத்திலே உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றி, மக்கள் சேவையிலே தன்னிறைவுபெற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு நாம் இந்த அவையின் சார்பிலே பொன் விழா எடுக்கவிருக்கிறோம். அப்படிப் பொன் விழா என்று வருகின்றபோது, கருத்து மாச்சரியங்கள் நமக்குள்ளே இருக்கலாம்; ஆனால், ஒரு மனிதனுடைய சேவை, ஆற்றல், நுண்ணறிவு, செய்கின்ற செயல்பாடுகளைப் பார்க்கின்றபோது, 50 ஆண்டுகள் இந்த அவையிலே எவ்வளவு பெரிய தலைவர்கள் எல்லாம் இங்கே இருந்தார்களோ, அந்தத் தலைவர்களையெல்லாம் பார்த்துப் பேசியவர் அவர்; அவர்களோடு இணைந்து பணியாற்றிய ஒரு பெரிய மனிதர். அவர் 50 ஆண்டுகள் இந்த அவையிலே இருந்ததைக் குறிப்பிடுகின்ற வகையிலே பொன் விழாவை இந்த அவை எடுக்கவிருக்கிறது. இந்த நேரத்திலே நாமெல்லாம் இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்றோம் என்ற பெருமை நமக்கிருக்கிறது.

எத்தனையோ மாநிலங்கள் இந்திய நாட்டிலே இருக்கின்றன. அத்தனை மாநிலச் சட்டமன்றங்களிலேயும் 50 ஆண்டுகள் பணியாற்றிய ஓர் உறுப்பினர் இருப்பாரா என்று சொன்னால், எனக்குத் தெரிந்தமட்டில் கலைஞரைத் தவிர வேறு யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நல்ல அறிவாளிக்கு, நல்ல மனித நேயம் மிக்க ஒரு மாமனிதருக்கு 50–வது ஆண்டுப் பொன் விழாவிலே அவரை வாழ்த்த எனக்கு வயதில்லை. இருந்தாலும், அவருக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. எனக்கு நம்பிக்கையிருக்கிறது. நான் வணங்குகின்ற அன்னை ஆதிபராசக்தி அவருக்கு மேலும் நீண்ட ஆயுளையும், நல்ல உடல் நலத்தையும் கொடுத்து, தமிழகத்திற்கு மேலும் 100 ஆண்டுகள் அவர் வழிகாட்ட வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தி, வாய்ப்புத் தந்த உங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன். (குறுக்கீடு) திரு. கலைராஜன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு தேசியவாதி, உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் பேசுகிறபோது ஒரு பகிரங்கமான குற்றச்சாட்டை இங்கே சுமத்துகின்ற வகையிலே பேசினார். கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது சொன்னார்;

[திரு. வி.பி. கலைராஜன்] [2007 மார்ச் 28

அது என்னவென்றால், ஒரு ஆதி திராவிடச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் வர்க்களிக்க முடியாது. நாங்கள் கொத்தடிமைகளைப்போல; கூலி வேலை செய்துகொண்டிருக்கிறவர்கள்; வாக்களிக்க எங்களுக்கு அனுமதி கிடையாது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார். எதற்கெடுத்தாலும் எழுந்து பேசுகிற அமைச்சர்கள் இதிலே மவுனம் காட்டினார்கள். அப்படியானால், இந்த ஆட்சி நடக்கிற இடத்திலே ஆதி திராவிடர்களுக்கு ஓட்டுரிமை பறிக்கப்பட்டிருக்கிறதா? அவர்கள் ஓட்டளிக்க முடியாத அளவிற்கு அங்கே அவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை நான் இந்த அரசாங்கத்திடம் கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆதி திராவிட மக்கள் நீண்ட நெடுங்காலமாக வாக்களிக்க முடியாமல் தங்கள் பணிக்குப் போய் விடுகிறார்கள் என்ற எண்ணத்திலே அவர் குறிப்பிட்டாரே தவிர, உள்நோக்கம் எதுவும் இல்லை என்பதை நான் இந்த அவைக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. இராஜேந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் எப்படிச் சுட்டிக்காட்டுகிறார் என்று சொன்னால், ஏதோ ஆதி திராவிட மக்களுக்கு ஓட்டே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் இல்லை என்ற பொருளில் சொல்லியிருக்கிறார். அப்படியல்ல. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தளவிற்கு, ஏற்கெனவே பயிர்க் கடன் பெற்றவர்கள், அதிலே 10 ரூபாய் கட்டி உறுப்பினர்களானவர்கள் பல காலமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். 2000–க்கு முன்னால் யாரெல்லாம் அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்களோ, அத்தனை இனத்தைச் சார்ந்தவர்களும் வாக்களிக்கும் உரிமை உண்டு. அதிலும் குறிப்பாக, எங்களுடைய பகுதியில் எல்லாம் ஆதி திராவிட மக்கள் இருக்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் வாக்களிக்கிற உரிமையுண்டு.



2007 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. போளூர் வரதன், நீங்கள் பேசிவிட்டீர்கள். Time இல்லை. (குறுக்கீடுகள்).

***திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், என்ன?

**திரு. போளூர் ம. வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் சொன்னதைப்போன்று நான் சொல்லவில்லை. என்னுடைய ஆதங்கம் என்னவென்றால், கூட்டுறவுத் தேர்தலிலே வாக்களிக்க வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே வங்கிகளிலே பயிர்க் கடன் பெற்றிருக்க வேண்டும். அதற்கு identity card இருக்க வேண்டும். நிலம் இருப்பவர்கள்தான் பெரும்பாலும் அதில் members ஆக முடியும். இன்றைக்குக் கலைஞர் புண்ணியத்திலே எங்களுக்கு 2 ஏக்கர் நிலம் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இப்போது வேண்டுமானால் நாங்கள் உறுப்பினராக வரலாம். (மேசையைத் தட்டும் ஒலி) காணி நிலம் வேண்டுமென்று சொன்னவன் பாரதி. அவன்கூட 132 சென்ட்தான் கேட்டான். கலைஞர் இன்றைக்கு 200 சென்ட் கொடுக்கிறார். கையளவு கொடுக்கவில்லை. ஆகவே, என்னுடைய எண்ணமெல்லாம், நீங்கள் கொடுக்கிற இந்த நிலத்தை வைத்துக்கொண்டு எங்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, அதற்குப் பின்னர் தேர்தலை நடத்தினால், நாங்களும் அதில் நிற்க முடியும் என்ற உணர்வில்தான் சொன்னேனே தவிர, குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், 10 நிமிடங்கள் உங்களுக்குக் கொடுக்கிறேன். பேசி முடியுங்கள். (குறுக்கீடு) Time இல்லை.

***திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தின் கடைக்கோடிக் கிராமமான இராமதேவநல்லூரைச் சேர்ந்த கந்தசாமி, ருக்குமணி ஆகியவர்களின் புதல்வனாகிய என்னைக் கழகத்தின் சாதாரண உறுப்பினரான என்னை இந்தச் சட்டமன்றத்தில் அமர வைத்து அழகு பார்த்த, உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தந்த, கல்வியில் புரட்சித் திட்டங்களான இலவச சைக்கிள், இலவசப் பாடப் புத்தகங்கள் தந்த, பொன்மனத் தலைவி, எங்கள் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம்

வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னை இம்மன்றத்தில் உறுப்பினராகத் தேர்வு செய்த ஜெயங்கொண்டம் தொகுதியின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாவீரர்களுக்கும், தோழமைக் கட்சித் தோழர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, எனது உரையைத் தொடர்கின்றேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினை. அம்மா அவர்களால் எனது ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் ஒன்றியம், அரியலூர் தொகுதியிலுள்ள திருமானூர் ஒன்றியம் டெல்டா பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, தஞ்சையைப்போல் இலவச மின்சாரம் வழங்க, தா. பழூர் ஒன்றியத்திற்கு 550 இணைப்புகளும், திருமானூர் ஒன்றியத்திற்கு 800 இணைப்புகளும் வழங்க அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். 2006 ஏப்ரல் வரையில் 30 இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. உங்கள் ஆட்சியில் அத்திட்டத்தை இரத்துச் செய்துவிட்டீர்கள். 2006–2007–ல் 40 இணைப்புகள் மட்டுமே கொடுக்க முடியும் என்று மின் வாரியம் கூறியுள்ளது. மீதம் உள்ள 520 இணைப்புகளும் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட டெல்டா சிறப்புச் சலுகையை இரத்துச் செய்தது எங்கள் பகுதி விவசாயிகளின் வயிற்றில் அடித்த பெரும் செயலாகும். மீண்டும் அப்பகுதியை டெல்டா பகுதியாக அறிவிக்க வேண்டும்.

ஜெயங்கொண்டம் நிலக்கரி மின் உற்பத்தித் திட்டத்திற்கு (J.L.L.P) நிலம் கொடுக்கின்ற நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை இந்த மாமன்றம் தெளிவுபடுத்த வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு ரூபாய் 5 இலட்சத்திற்குமேல் கொடுக்க வேண்டும் என்று அரசு இப்போதே இந்த இடத்தில் அறிவிக்க வேண்டும். நீதிமன்ற நடவடிக்கை என்று மெத்தனப் போக்கில் செயல்படக் கூடாது. இந்த மண்ணின் மைந்தர்கள், நிலம் கொடுத்தவர்களுடைய வாரிசுகள், இப்பகுதி மக்கள். இவர்களுக்கே இந்தத் திட்டத்தில் வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். தகுதியில்லை என்று புறக்கணிக்கக் கூடாது. பயிற்சி கொடுத்தாவது பணியில் அமர்த்த வேண்டும்.

இந்த மாவட்டம் மிக, மிகப் பின்தங்கிய மாவட்டம். வேலையில்லாத் திண்டாட்டத்தினால், படித்த இளைஞர்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாவட்டம் என்பது அரசுக்கும், அனைவருக்கும் தெரிந்த உண்மை. இப்போக்கினைத் தடுத்திட அரசு வேலைவாய்ப்புப் பற்றி இம்மாமன்றத்தில் தெளிவுபடுத்திட வேண்டும்.



இவர்களுக்கு இலவச மனைப் பட்டா, இலவச கான்கிரீட் வீடு, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், கல்விச் சாலைகள், மருத்துவமனைகள் வழங்க வேண்டும். குடியமர்த்துகின்ற இடத்திற்கு அக்கிராமங்களின் பெயர்களையே சூட்ட வேண்டும்.

*பிற்பகல் 1–10*

மாநில, மாவட்ட அளவில் மக்கள் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும், நீதித் துறையினரும் ஒன்று கூடி அமர்ந்து, இந்தத் திட்டத்திற்கு வழிவகை காணும் வகையில் அரசு செயல்படுத்திட இக்கூட்டத் தொடரில் உறுதியளிக்க வேண்டும். 26–3–2007 அன்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நிலம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் உள்ளது, கோர்ட் என்ன விலை நிர்ணயம் செய்கின்றதோ, அதைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். கோர்ட் தீர்ப்பு எப்போது வருவது? மிகவும் காலதாமதம் ஆகும். அரசே விலை நிர்ணயம் செய்து உடனடியாக வழங்க வேண்டும். உடனடியாக வழங்கினால், அவர்கள் வேறு இடம் வாங்குவதற்கும், அவர்கள் சாப்பாடு சாப்பிடுவதற்கும், அவர்கள் பிள்ளைக் குட்டிகளுக்குக் கல்யாணம் செய்வதற்கும், பிற இடத்திற்குச் சென்று குடியமர்வதற்கும், பிள்ளைகளின் படிப்புச் செலவிற்கும், திருமணச் செலவிற்கும் பயன்படும். நீங்கள் சொல்வதைப்போல் கோர்ட் தீர்ப்பை எதிர்பார்த்தால், பதினைந்து ஆண்டு காலம் ஆகிவிடும். அது அவர்களுக்குப் பயன்படாது. அவர்கள் இறந்த பிறகுதான் பணம் வந்து சேரும். அவர்களுக்கு எந்தப் பயனும் அளிக்காது. அதனால் அரசே அந்த நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ. ஐந்து இலட்சத்திற்குமேல் ஒதுக்கி, விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், ஆதி திராவிட மக்கள் இரண்டு செண்ட் நிலத்தில் ஒரு குடிசை போட்டு, அந்தக் குடிசையில் மூன்று குடும்பங்கள் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு வீட்டுமனை இல்லை. அரசாங்கம் வீட்டுமனை வாங்கச் சென்றால், அரசு மதிப்பிற்குக் கேட்பதால் நிலத்தினர் கொடுக்க விரும்பவில்லை. அப்படியே அரசு கையகப்படுத்தினாலும், நில உரிமையாளர்கள் தடையாணை வாங்குகின்றனர். அதனால் அரசே வெளிச்சந்தை விலைக்கு வாங்கிப் பட்டா கொடுக்க வேண்டும். அதையும் மீறி அவர்கள் தடையாணை வாங்காமல் இருப்பதற்கு அரசு ஒரு புதிய சட்டத்தை இயற்ற வேண்டும். ஏழை எளிய ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன்பெற ஆவன செய்ய வேண்டும்.

எனது தொகுதியில் திருபுரந்தான் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும். சுத்தமல்லி, தத்தனூர், இரவாங்குடி ஆகிய ஊர்களுக்குப் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கப்பட வேண்டும். கால்நடை மருத்துவமனை, டாக்டர்கள் இல்லாமல் செயல்படவில்லை. கங்கைகொண்டசோழபுரம், சுத்தமல்லி, கல்லாத்தூர் ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்தினரும் 6 கிலோ மீட்டருக்குமேல் செல்ல வேண்டியுள்ளது. அதைச் சீர் செய்து, இன்னும் குறுகிய தூரத்தில் கால்நடை மருத்துவமனை அமைய வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராமத்தில் விவசாயிகள் வயல் வரப்புகளில் தேக்கு மரம் வளர்த்து, அது விளைந்து முதிர்ந்தவுடன் அறுப்பு மில்லுக்கு அறுக்கச் செல்லும்போது, Forest Officer-கள் ரோந்து வந்து, அது அரசாங்க மரம் என்று சொல்லி, அதை அபகரித்து, சுமார் 6,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கிறார்கள். அதற்கு இரசீது கொடுப்பதில்லை. தேக்கு மரம் வளர்ப்பதற்கு, விவசாயிகளின் மரம்தான் என்று சொல்வதற்கான ஆதாரம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

எனது தொகுதிக்குத் தொழிற்பயிற்சிக் கல்லூரி, பாலிடெக்னிக் அல்லது கலைக் கல்லூரி வேண்டும் என்று முந்தைய கூட்டத் தொடரில் கேட்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்லூரி அமைத்துத் தருவதாக வாக்குக் கொடுத்தார்கள். இன்று வரை அதற்கு ஆவன செய்யவில்லை. எங்களுக்குக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுகிறேன்.

சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்று மார்தட்டும் உங்கள் ஆட்சியில் சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்தவர்களுக்குக் கடன் கொடுக்கவில்லை. அதேபோல் அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மோட்டார் கடன்கள் கொடுப்பதில்லை. எனது தொகுதியில் அணைக்கரை வடவாற்றுப் பாலத்தில், கடந்த வருடம் பெய்த மழை ஒரு பக்கக் கரையை அரித்துவிட்டது. அரித்த பக்கத்தில் நெடுஞ்சாலைத் துறைக் கட்டடம் உள்ளது. அந்த உடைப்பைச் சீர் செய்து ஆவன செய்ய வேண்டும்.

எனது தொகுதியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளுக்காகப் போடப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறுகள் பழுதாகிவிடும்போது, மறுபடியும் ஆழ்குழாய் அமைப்பதற்கு கிராமப் பஞ்சாயத்து மற்றும்



ஊராட்சி ஒன்றியத்தில் கேட்டால், நிதி இல்லை. அவர்களிடம் கேட்டால், அதை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதலுக்காக அனுப்புகிறார்கள். அவர்கள் அனுமதி வழங்க ஒரு மாத காலத்திற்குமேல் ஆகின்றது. ஆதலால், குடிதண்ணீருக்காக ஊராட்சி ஒன்றியத்தில் தனி நிதி ஒதுக்க வேண்டும். அப்போதுதான் உடனடியாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்க முடியும். எனது தொகுதியில் 15, 20 ஆழ்குழாய்க் கிணறுகள் பழுதடைந்துள்ளன. அவற்றை உடனடியாகச் சரி செய்ய வேண்டும்.

பிற்பகல் 1–15

எனது தொகுதியில் கிராமங்களில் பஸ் போக்குவரத்து சரியாக இல்லை. பள்ளி மாணவ, மாணவியர் பள்ளிகளுக்குச் செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். பள்ளி செல்ல காலை 8–00 மணி முதல் 10–00 மணி வரையிலும், மாலை 4–00 மணி முதல் 6–00 மணி வரையிலும், கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும். குக்கிராமங்களில் வசிக்கும் விவசாயப் பெருமக்கள் காய்கறி, விளைபொருட்களை எடுத்துச் செல்லவும், நகரத்திற்குச் செல்லவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்குக் கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

முந்தைய கூட்டத் தொடரில், ஜெயங்கொண்டம் முதல் சென்னைக்கு 5 பஸ்கள் விட வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டேன். அதற்கு, சாலை சரியில்லை, செய்யட்டும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது ஜெயங்கொண்டம் சாலை சரி செய்யப்பட்டுவிட்டது என்று இந்த மன்றத்தின்மூலம் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு மாதங்களில் கருங்கல், கருங்கல் ஜல்லிகளுக்கு ஆயிரம் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை அறிவிக்கப்படாமல் விலை ஏறியுள்ளதால், விவசாயிகளும், வீடு கட்டுபவர்களும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அரசு இந்த விலையைக் குறைக்க வேண்டும்.

காவிரி இறுதித் தீர்ப்பினை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அகிம்சை முறையில் உண்ணாவிரதம் இருந்தபொழுது, அந்த நிகழ்ச்சியை,

'பழரசம் பருகுவதற்கு' என்று சொன்னார்கள். நம்முடைய இந்திய நாட்டிற்கு சுதந்திரம் வாங்கித் தருவதற்கு நம்முடைய மகாத்மா காந்தி அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அது அந்த அகிம்சைவாதியைக் குறை கூறுவதற்குச் சமம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னைப் பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நேரடியாக, "நீங்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர், ஏன் அரசு விழாவில் கலந்துகொண்டு எங்களைத் தொந்தரவு செய்கின்றீர்கள்" என்றும், "அரியலூர் மேல்நிலைப் பள்ளியில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் படத்தை வைத்துள்ளீர்கள், உடன் அகற்றுங்கள்" என்றும் சொல்கிறார். முன்னாள் முதல்வர் படங்களை அரசு அலுவலகங்களில் வைக்கக் கூடாது என்றும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு விழாவில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் இந்த அரசு புதிய உத்தரவுகள் போட்டுள்ளதா? இல்லையெனில், முதல்வர் அவர்கள் முதன்மைக் கல்வி அலுவலர்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் எல்லாமே அடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. எல்லாத் தரப்பு மக்களும் பயன்பெறத்தக்க வகையில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. உண்மையில் அவ்வாறு இருக்கிறதா என்றால், இல்லை. எல்லாமே இருப்பதுபோல் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகின்ற வகையில் கவர்ச்சிகரமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. முக்கியமான துறைகளுக்குக்கூடப் போதிய நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை. மொத்த வரவு–செலவு நாற்பத்து ஐந்தாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருக்கின்றது. வேளாண்மைத் துறைக்கு, கல்வித் துறைக்கு, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, தொழில் துறைக்கு எவ்வளவு ஒதுக்கீடு என்று பார்க்கும்போது சதவீதம் மிகவும் குறைவாகவே உள்ளது. இந்த ஒதுக்கீடுகளைக்கொண்டு அந்தத் துறைகளில் என்ன வளர்ச்சி விகிதத்தை எட்ட முடியும் என்று குறிப்பிடப்படவில்லை. மொத்தத்தில் வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. மாறாக, விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள்தான் வகுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, இலவச கலர் டி.வி. இந்தத் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ் ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of order, Sir. என்னவென்றால், அவை உறுப்பினர் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது, அவரைக் குறுக்கிட்டுக்கூட வரக் கூடாது என்று நம்முடைய விதியிலே தெளிவாக இருக்கிறது. அதாவது, பேரவைத் தலைவரை முழுவதும் மறைத்துக்கொண்டிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் பேசுவதை நீங்கள் கவனிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதெல்லாம் விதியில் இருக்கிறது. அவையில் எதிர்க்கட்சி வரிசையில், முன் வரிசையில் இருப்பவர்களே, நாம் போய் அப்படிப் பேசிக்கொண்டிருந்தோமானால், மற்ற உறுப்பினர்களுக்கு நாம் எப்படி விதியைச் சுட்டிக்காட்ட முடியும்? இதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் ஒரு நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அலுவல் ஆய்வுக் குழு முடிவு குறித்துத்தான் பேசிக்கொண்டிருந்தோம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இருங்கள், ஒரு நிமிடம். நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவில் ஒரு சிறிய மாற்றம் இங்கே அறிவிக்கப்பட்ட காரணத்தினாலே, பேரவைத் தலைவர் அவர்கள் எங்களை அழைத்தார்கள். அதன் அடிப்படையிலே சென்றோமே தவிர, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் எங்களுக்கும் அந்த மரபு நன்றாகத் தெரியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. இராஜேந்திரன், பேசுங்கள்.

**திரு. க. இராஜேந்திரன்:** இலவச கலர் டி.வி. திட்டத்திற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் என்ன வளர்ச்சியை எட்ட முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவில்லை. கலர் டி.வி. இல்லாத வீடே இருக்காது என்ற நிலையை எட்டுவோம் என்று பேசப்படுகிறது. இதற்குப் பதிலாக, வீடு இல்லாத மனிதனே இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்குத்தான் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வீடு இல்லாதவர்களும், போதுமான வசதியுடன்கூடிய வீடுகள் இல்லாதவர்களும் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். "எட்டடிக் குச்சுக்குள்ளே எத்தனை நாள் இருப்பேன்" என்று முருகனிடம் விண்ணப்பம் போட்டுக்கொண்டுள்ளார்கள். அவர்களுடைய

தேவைகளை நிறைவேற்றுவதற்கு மக்கள் நல அரசு முன்னுரிமை வழங்கியிருக்க வேண்டும். ஏற்கெனவே பத்தாண்டுகளுக்குமேலாகப் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தில் பட்டா வழங்கப்படும் என்று கூறியுள்ளீர்கள். அதன்மூலம் அந்த அடித்தட்டு மக்களின் குறை தீரப் போவது இல்லை. யாராலும் குடியிருக்க முடியாத இடங்களில்தான் குடிசைகளை அமைத்துக்கொண்டு அவர்கள் குடியிருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு நல்ல வீட்டுமனைகளை வழங்கி, புதிய குடியிருப்புகளை அமைத்துக்கொள்வதற்கு உதவுகின்ற வகையில்தான் அரசாங்கத் திட்டங்கள் அமைந்திருக்க வேண்டும். ஆனால், அத்தகைய திட்டங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

குடிசை மாற்று வாரியத்தின்மூலம் மிகவும் குறைவான அளவிற்கே வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. எனவே, அடிப்படைத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில்தான் நீங்கள் அமைத்திருக்க வேண்டும். வீடே இல்லாதவனுக்கு கலர் டி.வி. வழங்கலாம் என்றால், வேடிக்கையாக இல்லையா? டி.வி., gas அடுப்பு என்று சொன்னால் அவர்கள் திருப்தி அடைவார்களா? அத்தகைய அடித்தளத்து மக்கள் தொகை எவ்வளவு இருக்கின்றது? அதைச் சரியாகக் கணக்கெடுத்து நன்மை செய்யவும்.

*பிற்பகல் 1–20*

பட்ஜெட்டில் ஏற்கெனவே பல்வேறு நலத் திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அரசாங்கத்திற்கு வருகின்ற வருவாயைக் குறிப்பிட்டிருந்தீர்கள். இதில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாங்கத்துக்கு வர வேண்டிய வருவாயை உயர்த்திக் காட்டியதன் விளைவாகத்தான் இன்று நலத் திட்டங்களை வழங்க முடிகின்றது. உதாரணத்திற்கு, மாநில ஆயத்தீர்வையின்மூலம் ரூ.4,370 கோடி என்றும், அதேபோன்று மணல் கொள்ளையைத் தடுத்து அரசே விற்பனை செய்ததனால், அதில் 27 கோடி ரூபாய் என்று இருந்ததை 164 கோடி ரூபாயாகவும் மாற்றினார்கள். புதிய வரிகளே போடாமல், வரி ஏய்ப்புச் செய்தவர்களைக் கண்டுபிடித்து, அரசுக்கு வர வேண்டிய வருவாயை அரசுக்குக் கொண்டு சேர்த்து, கஜானா காலி, களஞ்சியமும் காலி என்ற நிலையை மாற்றி, கஜானாவையும், களஞ்சியத்தையும் நிரம்பி வழியச் செய்து ஒரு பொற்கால ஆட்சியைத் தந்தவர் எங்கள் அம்மா.



சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதன்மூலம் உள்ளூரில் தொழிற்சாலைகள் வந்துவிடப் போவதில்லை. அதன்மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகளும் உருவாகப் போவதில்லை. அதற்கு மாறாக, தங்களுடைய வாழ்வாதாரமாக அமைந்துள்ள விளைநிலங்களையும் பறிகொடுத்துவிட்டு, சொந்த மண்ணைவிட்டே அகதிகளாக வெளியேற வேண்டிய அவல நிலைதான் அந்த மக்களுக்கு ஏற்படும். ஆகவே, ஏற்கெனவே பின்தங்கிய நிலையில் உள்ள பகுதிகளில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதன்மூலம் அந்த மண்ணின் மைந்தர்கள் அந்த மண்ணைவிட்டே ஓட வேண்டிய மோசமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள். ஏற்கெனவே வேளாண்மைத் தொழில் கட்டுப்படியாகவில்லை என்பதாலும், விளைவிக்கப்படும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்பதாலும், வாங்கிய கடனைக்கூடத் திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்கு வறுமையால் சூழப்பட்டுப் பலரும் தங்களுடைய வாழ்வையே முடித்துக்கொள்ளும் நிலையைத்தான் எட்டியிருக்கின்றார்கள்.

கைத்தொழிலையே விருப்பத்துடன் தொடர முடியாத கொடுமை ஏற்பட்டுள்ளது. அந்தத் தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்களும் ஊரைவிட்டே வெளியேறி அண்டை மாநிலங்களிலும், நகர்ப் பகுதிகளிலும் கூலிகளாகவும், எடுபிடிகளாகவும் வேலைபார்க்கும் நிலை உருவாகியுள்ளது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் ப்டியுங்கள்.

**திரு. க. இராஜேந்திரன்:** எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களுக்குதான் இன்றைக்குத் திறப்பு விழா நடத்திக்கொண்டுள்ளீர்கள். உதாரணத்திற்கு, புழல் சிறைச்சாலையைப் போதிய நிதியை ஒதுக்கித் திட்டமிட்டுக் கட்டி முடித்தார். அந்தச் சிறைச்சாலை புதிதாகத் தொடங்கப்பட்டபின் கைதிகளுக்கு சிக்கன் என்று அறிவித்தீர்கள். ** இதை ஏன் கூறுகின்றேன் என்றால், ஏதோ குற்றச்சாட்டுக் கூறுவதாக நினைத்து ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கு பேசப்பட்ட ** இந்த இரண்டு வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுகின்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் பேசியதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த இரண்டு வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. க. இராஜேந்திரன்:** ஏதோ குற்றச்சாட்டுகளைக் கூறுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தினக் கூலிப் பிழைப்பைத் தேடிச் சென்று, தங்கள் வாழ்வைத் தேடிக்கொண்டிருக்கிற மக்கள் வேலைக்குக்கூடச் செல்ல முடியாமல், சாப்பாட்டுப் பானையைக் காலியாக வைக்கின்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதில் அரசு தீவிரக் கவனம் செலுத்தி, நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும், நோய் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உரிய சிகிச்சையையும் அளிக்க வேண்டுமென்று மக்கள் செல்வாக்கற்ற இந்த ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், நேரமாகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. க. இராஜேந்திரன்:** இலவசம் என்ற பெயரால் இலவசத் திட்டங்களைத் தங்கள் கட்சியினருக்கு மட்டும் வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த மைனாரிட்டி அரசு, தமிழ்ப் புத்தாண்டு, தைப் பொங்கல்போன்ற விழாக் காலங்களல்லாத நாட்களில், அரசு விதிகளைத் தளர்த்தி, 'சென்னை சங்கமம்' நிகழ்ச்சி நடத்த வேண்டிய அவசியம் என்ன? இன்றைக்கு உள்ளாட்சிகளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உள்ள வார்டுகளில் நிதி ஒதுக்காமல் புறக்கணிக்கப்படுகின்றார்கள். சம்பந்தப்பட்ட கவுன்சிலர்கள் போய் நியாயம் கேட்டால், நீ தி.மு.க.வில் சேர்ந்தால்தான் உன்னுடைய பகுதிக்கு வேலை என்று மிரட்டுகிறார்கள். இன்றைக்கு உள்ளாட்சித் துறை தி.மு.க.விற்கு ஆள் பிடிக்கின்ற வேலையைச் செய்துகொண்டு வருகிறது. (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். சீக்கிரம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி அவர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவது பற்றிப் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை நான் மறுத்தேன். ஆனால், அவர்கள் அதற்குப் பதில் சொல்கின்ற வகையில், தன்னுடைய தொகுதியிலே அ.தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள் யாருக்கும் கொடுக்கவில்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். உடனடியாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு தொலைபேசிமூலம்–ஃபேக்ஸ்மூலம் கிடைத்த செய்தியை இந்த அவைக்குக் கொடுப்பது என்னுடைய கடமை.

நக்கலூத்து என்பது அம்மையாருடைய தொகுதியில் வருகின்ற கிராமம். அதில் திரு. சந்திரபாபு என்பவர் அ.தி.மு.க. இணைச் செயலாளர். திரு. சின்னசாமி, பொறுப்பாளர். அவர்கள் உட்பட மொத்தம் 328 பேர்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கியதில் 70 பேர்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் கை தட்டுவதற்காகச் சொல்லவில்லை; ஒரு இன்ஃபர்மேஷனுக்காகத்தான். எஸ். மேட்டுப்பட்டி என்ற ஒரு கிராமத்தில் மொத்தம் 271 பேர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கியிருக்கிறார்கள். அதில் திரு. முனியப்பன், கிளைக் கழகச் செயலாளர் உட்பட, 80 பேர்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) கொல்லிசெட்டிப்பட்டி என்ற கிராமத்தில் 259 பேர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கியிருக்கிறார்கள். அதிலே திரு. மூவேந்தர் என்ற அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர் உட்பட 65 பேர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்ற செய்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, நான் சொல்ல வருவது, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் அரசியல் கிடையாது. தி.மு.க.காரர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறது என்பது தவறு. இதிலே குடும்ப அட்டைகள் வைத்துக்கொண்டிருக்கின்ற எல்லாக் கட்சிக்காரர்களுக்கும், கட்சி சார்பற்றவர்களுக்கும், ஏழைகள் அத்தனை பேருக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய திட்டம். அந்தத் திட்டப்படி கொடுக்கிறோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறு குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, இந்த கலர் டி.வி. கணக்கு எடுப்பது, எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு கொடுப்பது என்பதுதான் வேலையாக உள்ளது என்று நினைக்கின்றேன். இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் கூற வேண்டுமென்றால், சித்திரப் பறவை சிறகு விரிக்காது. எட்டிக்காய் இனித்தாலும் இனிக்குமே தவிர, இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களால் எந்த இன்பமும் கிடைக்காது. ஓலம் இடும் கடல் ஊமையானாலும் ஆகும்; இந்த சர்க்காரின் அறிவிப்புகளில் உள்ள எந்தத் திட்டமும் அமலுக்கு வராது. வாய்ப் பந்தல் நிழல் தராது; இந்த வரவு–செலவுத் திட்டம் மக்களின் வாழ்வுக்கு சுகம் தராது. மக்கள் அமைதியாக வாழ, எல்லா நன்மையும் எல்லோருக்கும் கிடைக்க, சட்டம்-ஒழுங்குச் சிறப்பாக இருக்க ஒரு நல்ல பட்ஜெட் அமைய வேண்டும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக வேண்டும். அந்த நாள் வெகுதொலைவில் இல்லை என்று கூறி, எனக்குப் பேச வாய்ப்பு நல்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதத்தில் நன்றியைச் சமர்ப்பித்து வணங்கி, எனது உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–3–2007) வியாழக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

D V211 ... 07 ... 07.2



## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*26.* 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*27.* 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*28.* 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*29.* 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், மற்றும் ஏனைய தாள்கள்

*16.* 2005–2006 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

*17.* பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை. (2006–2007)

*18.* பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. (2006–2007)

*19.* பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2006–2007)

*20.* பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை. (2006–2007)

*21.* பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்[illegible] அறிக்கை. (2006–2007)

---

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227560
சென்னை-600 008

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.